Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 198

ஞாயிற்றுக்கிழமை
12 ஜூன் 2022

வைகாசி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

முச்சந்தி முரளி



"அப்ப கடைசிக்கப்பலும் வந்த பிறகு எல்லாரும் வாகனங்களை கட்டையில ஏத்த வேண்டியதுதான் போல..."

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி

# அதானி குழுமத்துக்கு வழங்குமாறு கோத்தாபயவுக்கு மோடி அழுத்தம்

## கோப்குழுவில் உண்மையைப் போட்டுடைத்தார் மின்சாரசபைத் தலைவர்

## கூறியதை மீளப்பெறுவதாக நேற்று நள்ளிரவு திடீர் குத்துக்கரணம்

**கொழும்பு, ஜூன் 12**

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்குமாறு, ஜனாதிபதி கோத்தாபயவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழுத்தம் கொடுத்தார். ஜனாதிபதி கோத்தாபய அதற்கு அமைவாக என்னை அழைத்து, அதானி குழுமத்துக்கு மேற்படி உற்பத்தித் திட்டத்தை வழங்கச் சொன்னார் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் கோப்குழுவில் தெரிவித்தார். 15 ▶

இந்தியக் கடனுதவியில்

## எரிபொருளுடன் கடைசிக் கப்பல்!

கொழும்பு, ஜூன் 12

இந்தியக் கடன் திட்டத்தின்கீழ் எதிர்வரும் 16ஆம் திகதி இறுதி டீசல் கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதாக எரிசக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். 15 ▶

## இலங்கைச் சிறாரைக் காக்க 25.3 மில்லியன் டொலர் தேவை

சர்வதேச சமூகத்திடம் கோருகிறது யுனிசெப்

கொழும்பு, ஜூன் 12

எதிர்வரும் 7 மாதங்களுக்குள் இலங்கையிலுள்ள சிறார் 15 ▶

## குருந்தூர் மலையில் இன்று போராட்டம்

பக்.15

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில்

## பற்றைக்குள்ளிருந்து ஓட்டோச் சாரதி மீட்பு!

அவரது ஒட்டோ, பணம் அபேஸ் சினிமாப் பாணியில் கொள்ளை

சாவகச்சேரி, ஜூன் 12

கை, கால், வாய் கட்டப்பட்ட நிலையில் நுணாவில் மேற்குப் 15 ▶

## அநியாய விலையில் அரிசி; 5 வர்த்தகர்கள் மீது வழக்கு

சுற்றிவளைப்பு தொடரும் என்கிறார் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன்

யாழ்ப்பாணம், ஜூன் 12

நிர்ணய விலையை விட அதிகரித்த விலையில் அரிசியை விற்பனை செய்த 5 வர்த்தகர்களுக்கு எதிராக 15 ▶

## டொலருக்காக 4 நாள்கள் எரிவாயுக் கப்பல் தவம்!

கொழும்பு, ஜூன் 12

இலங்கை கடற்பரப்பில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ள 3 ஆயிரத்து 900 மெற்றிக் தொன் எரி 15 ▶

## தனியார் பேருந்துச்சேவை இந்த வாரம் முடங்கலாம்!!

கொழும்பு, ஜூன் 12

டீசல் தட்டுப்பாடு காரணமாக, இந்த வாரம் தனியார் பேருந்து சேவை முழுமையாக 15 ▶

## எரிபொருள் இருப்பை அறிய இணையத்தளம் அறிமுகம்

உரிய தரவுகள் இல்லை என்று மக்கள் விசனம்

கொழும்பு, ஜூன் 12

இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை நிறுவனம் நாடு முழுவதிலுமுள்ள எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் 15 ▶

ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
ஒரு பவுண் - 22 கரட்டிற்கு
140,000/=
ஒரு வருட கால அவகாசம் உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.
இல.31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்)
Tel: 021 221 7287, 076 636 1238
(CS 1125)(3/6)

உங்கள்
சேமிப்புக் கணக்கிற்கு அதியுயர் பிரதிபலனை எதிர்பார்க்கிறீர்களா?
வருடத்திற்கு
10%
வரை வட்டி
(வ.வ.)
வழங்கும், செலான் Money Market சேமிப்புக் கணக்கு
உங்கள் சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பிக்க அருகிலுள்ள செலான் வங்கி கிளைக்கு வாருங்கள்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 200 88 88 அல்லது பிரவேசியுங்கள் www.seylan.lk
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இங்குள்ள வட்டி வீதங்கள் சந்தை நிலவரங்களுக்கு அமைவாக முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய பதவி விலகினால் ஓராண்டு கடனில் எரிபொருள்!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 12**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகினால், மத்திய கிழக்கு நாடுகளுடன் பேச்சுக்களை முன்னெடுத்து ஓராண்டு கடன் திட்டத்தில் எரிபொருளை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளைக் காரணமாகக் காண்பித்து தேசிய சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்கு இடமளிக்க முடியாது. அதானி நிறுவனத்துக்கு வேலைத்திட்டங்களை வழங்கி, இந்தியாவிடம் கையேந்துவது தவறான விடயமாகும். மின்சாரசபை பொறியியலாளர்களின் மாபியாக்களுக்கு எதிர்க்கட்சி கீழ்ப்படிந்துள்ளது என்று கூறுகின்றனர். அதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

தேசிய சொத்துக்களை கொள்ளையடிப்பதற்கு இடமளித்தால் சுனாமியின்போது ஏற்பட்ட அழிவை விட, பெரும் அழிவுகளை எதிர்கொள்ள நேரிடும். நாட்டில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆனால் நாளாந்தம் ஆர்ப்பாட்டங்களின்மீது கண்ணீப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது. கண்ணீர்ப் புகைக் குண்டு கொள்வனவுக்கு மட்டும் அரசாங்கத்திடம் பணம் உள்ளதா? அடக்குமுறைகளின் ஊடாக எதையும் சாதிக்க முடியாது.

இவ்வாறு செயற்பட்டமையாலேயே மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட அனைவரும் பதவி விலகி , தலைமறைவாக இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கோத்தாபய ராஜபக்ச நிபந்தனைகளை ஏற்று பதவி விலகினால் மாத்திரமே சர்வதேசம் எமக்கு உதவுவதற்கு முன்வரும்.

சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்த போதிலும், 43 ஆவது படையணியை உருவாக்கி சுயாதீனமாகவே செயற்பட்டு வந்தார்.

எனவே தற்போது அவர் அறிவித்துள்ள முடிவினால் எவ்வித பாதிப்பும் இல்லை- என்றார். (எ-இ)

# தம்மிக்க பெரேரா திங்கள் பதவியேற்பு



கொழும்பு, ஜூன் 12

தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சராக, தம்மிக்க பெரேரா நாளைமறுதினம் பதவியேற்கவுள்ளார்.

சர்வகட்சி அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நாளைமறுதினம் மாலை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு முன்னர் தம்மிக்க பெரேரா, ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்வாரென அறியமுடிகின்றது.

தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின்கீழ் வரும் திணைக்களங்கள் உள்ளிட்ட விவரங்கள் முன்கூட்டியே வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதை அடுத்து, அந்த இடத்துக்கு தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டார். அதைத் தேர்தல் ஆணைக்குழுவும் ஏற்று அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதியே, சபாநாயகர் முன்னிலையில் தம்மிக்க பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார். எனினும், அதற்கு முன்னராகவே அவர் அமைச்சராகிறார். (எ-44)

# அமரகீர்த்தி கொலை: மேலுமொருவர் கைது

கொழும்பு, ஜூன் 12

நாடாளுமன்ற உறுப்பினர் அம ரகீர்த்தி அத்துகோரல கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், மற்றுமொரு சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

24 வயதான இந்தச் சந்தேக நபர், பஸ்யால போலகந்தகம பகுதியைச் சேர்ந்தவராவார். (எ-இ)

# முகக்கவசம் அணிவதே மக்களுக்குப் பாதுகாப்பு

## ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 12

பொது இடங்களில் மக்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்று முன்னாள் சுகாதார அமைச்சரான ராஜித சேனாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் முகக்கவசம் அணிவதற்கான கட்டாயத் தேவையை நீக்குவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எடுத்த தீர்மானம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாததன் மூலம் தனிநபர் ஒருவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டால், மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு காரணமாக அந்த நபர் மிகவும் பாதிக்கப்படுவார் என்று ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டினார். (எ-இ)

# அரசுடன் சங்கமிக்கும் எதிரணி மூத்த எம்.பி.

கொழும்பு, ஜூன் 12

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அரசுடன் சங்கமிக்கவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டமூலம் நிறைவேறிய பின்னர், அவர் அரசு பக்கம் தாவவுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்றே, அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என தெரியவருகின்றது.

களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை கடுமையாக விமர்சித்தவர்களில் பிரதானமானவராவார். அதேவேளை, மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுடன் இணைவது குறித்து ஆலோசனை நடத்திவருகின்றனர் என்றும் அறிய முடிகின்றது. (எ-44)

# 3 நாள்களுக்கு பாடசாலை: பரிந்துரை முன்வைப்பு!

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் தற்போதுள்ள நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்களையும், மாணவர்களையும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, வாரத்துக்கு தலா மூன்று தினங்கள் பாடசாலைக்கு அழைப்பது தொடர்பான யோசனையை, அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியம் கல்வி அமைச்சிடம் முன்வைத்துள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவுக்கும், அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியத்துக்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தூரப் பிரதேசங்களில் இருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை, அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இணைப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை, பிரயோக ரீதியாகப் பயன்படுத்துவதற்கான முறைமை தயாரிக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

# பெரும் நிதிச்சுமையாக மாறும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனம்!

கொழும்பு, ஜூன் 12

அரச செயலொழுங்குக்கு பெரும் நிதி சுமையாக உள்ள ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தொடர்பில் கோப் குழுவின் அறிக்கையை செயற்படுத்த நாடாளுமன்றம் விசேட அவதானம் செலுத்த வேண்டும். தேசிய பொருளாதாரத்துக்கு இந்த நிறுவனம் பெரும் அழுத்தத்தைப் பிரயோகிக்கிறது என கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கோப் குழுவின் இரண்டாம் அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோப் குழுவின் இரண்டாவது அறிக்கையில் கால்பந்து சம்மேளனம், சிறீலங்கன் விமான சேவை நிறுவனம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம், இலங்கை போக்குவரத்து சபை ஆகிய அரச நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கோப் குழு விசாரணையில் சிறீலங்கன் விமான சேவை தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. சிறீலங்கன் விமான சேவை அரச செயலொழுங்குக்குப் பெரும் சுமையாக உள்ளதுடன், தேசிய பொருளாதாரத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

சிறீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தற்போதைய மற்றும் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள விசேட மூன்று உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கை, நிதி திட்டமிடல் மற்றும் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் உள்ளிட்ட மூன்று விடயங்கள் இந்த விசாரணைக்குள் உட்படுத்தப்பட்டன.

இந்த மூன்று விசேட உபகுழுக்கள் ஊடாக சிறீலங்கன் விமான சேவை நிறுவனம் தொடர்பில் நாடாளுமன்றம் விசேட அவதானம் செலுத்தவேண்டும். இந்த நிறுவனம் தேசிய பொருளாதாரத்துக்கு பிரயோகிக்கும் அழுத்தம் தொடர்பிலும் நாடாளுமன்றம் விசேட கவனம் செலுத்தவேண்டும்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# வேகமாகிறது டெங்கு!

## யாழ்ப்பாணமும் அபாய வலயத்தில்



**கொழும்பு, ஜூன் 12**

**நாட்டில் இந்த மாதம் முதலாம் திகதி முதல் 8ஆம் திகதிவரை 2 ஆயிரத்து 416 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

மேல் மாகாணத்தில் டெங்கு வேகமாக பரவி வரும் நிலையில், 8 மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, யாழ்ப்பாணம், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களே அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (எ-இ)

# திருவள்ளுவர்தின பரிசளிப்பும் ஆண்டு நிறைவு விழாவும்!

உலக இளையோர் திருக்குறள் மன்றம் நடத்தும் திருவள்ளுவர்தின பரிசளிப்பும், ஆண்டு நிறைவு விழாவும் கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மன்ற இயக்குநர் கலாநிதி வலன்ரீனா இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக மன்ற ஆலோசகரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன், கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கமலநாதன், கலாநிதி செ.திருமாறன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

# தென்மராட்சியில் டெங்கு மீண்டும் தலைதூக்கலாம்

## விழிப்புணர்வுடன் செயற்படுமாறு மருத்துவத்துறை எச்சரிக்கை

சாவகச்சேரி ஜூன் 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீண்டும் டெங்கின் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதால் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த மேமாதம் டெங்குத் தாக்கத்தால் மிகக் குறைந்தளவானோரே பாதிக்கப்பட்ட போதிலும் இந்த மாதத்தில் முதல் பத்து நாள்களில் 6 பேர் வரையில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மட்டுவில், மந்துவில், நாவற்குழி, கொடிகாமம் ஆகிய இடங்களிலேயே அதிகளவில் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அண்மையில் பெய்த மழையால் டெங்குத் தாக்கம் அங்கு மீண்டும் தலைதூக்கியுள்ளது. எனவே ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தமது குடியிருப்பு மற்றும் அயலிலுள்ள காணிகள் என்பனவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீரேந்து பொருள்கள் காணப்படின் அவற்றை அப்புறப்படுத்தி முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இலங்கைக்கு தேவை தனிநபர்கள் அல்லர்

மஹிந்த ராஜபக்சவின் சகோதரரும் 7- மூளைகளைக் கொண்ட அசகாயசூரர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரால் கொண்டாடப்பட்டவரும் - முன்னாள் நிதியமைச்சருமான பஸில் ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியிருக்கிறார். அவரது இடத்துக்கு இப்போது இலங்கையின் கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவிருக்கிறார். தம்மிக்க பெரேரா பஸிலை விடவும் வீரதீரசூரர் என்றவாறான கதைகளை இப்போது அதே பெரமுனக்காரர்கள் புனையத் தொடங்கிவிட்டார்கள்.

இலங்கையின் நிலைமை என்ன என்பது இப்போது பரகசியம். பேச்சுவழக்கில் சொல்வதானால் இலங்கை இப்போது 'சேடம்' இழுத்துக் கொண்டிருக்கின்றது என்றுதான் கூறவேண்டும். அன்றாடம் நாடுகளிடம் பிச்சையெடுத்தே காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கின்றது நாடு. நாட்டை - மக்களை இந்த இக்கட்டில் இருந்து மீட்பதற்கான திட்டங்களை - செயலாற்றுகைகளை மேற்கொள்ள வேண்டிய நாடாளுமன்றத்தில் நடப்பவை பெரும் கேலிக்கூத்தாகவே இருக்கின்றன.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்ட பின்னர் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகளில் எந்தவிதமான காத்திரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதும், மந்திரத்தால் மாங்காய் பறிக்கும் கதைகளும் பேசப்பட்டுள்ளனவே தவிர, நாட்டைப் பொருளாதார இக்கட்டில் இருந்து மீட்பதற்கான எந்தவொரு காத்திரமான திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை.


தகுந்த சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்து பிரதமர் பதவியில் அமர்ந்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க, இப்போது பிரதமராகச் செயற்பட்டு நாட்டை முன்னேற்றுவதை விடவும், 'ஞானக்காவுக்கு' போட்டியாக சிறந்த ஜோசியக்காரராக மாறியிருக்கிறார். தான் பதவிக்கு வந்தபின்னர் அரசாங்கம் எவ்வாறான நகர்வுகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதை ரணில் இதுவரை மக்களுக்குப் பகிரங்கப்படுத்தவில்லை. நாடாளுமன்றத்தில் உள்ளவர்களுக்கும் அது தொடர்பான அக்கறை இல்லை. அதற்கு மாறாக தனிநபர்களைக் காப்பாற்றும் முயற்சிகளும், ஆள்களை மாற்றும் நடவடிக்கைகளுமே நாடாளுமன்றத்தில் முழுவீச்சாக நடைபெறுவதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வை ஒருவரால் மட்டும் ஏற்படுத்த முடியாது. அவ்வாறான முட்டாள்தனமான நம்பிக்கையாலேயே,பஸில் ராஜபக்ச பதவிக்குக் கொண்டுவரப்பட்டார். பஸில் ராஜபக்சவின் அனுபவமற்ற- முதிர்ச்சியற்ற- நாட்டு நலனை மதிக்காத-செயற்பாடுகள் இலங்கையை மேலும் மேலும் பள்ளத்தில் தள்ளின. ஆனால், அந்த அனுபவத்தில் இருந்துகூட ராஜபக்சக்களும், அரசாங்கமும் பாடம் கற்கவில்லை. மீண்டும் தம்மிக்க பெரேரா என்ற நபர் பொருளாதார நெருக்கடிக்களுக்குத் தீர்வு காண்பார் என்ற விம்பத்துடன் நாடாளுமன்ற உறுப்பினராக்கப் படவிருக்கிறார்.

இலங்கைக்கு இப்போது தேவை,நபர்களின் மாற்றம் அல்லர். பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கான சரியான திட்டங்களும் - திட்டமிடல்களும் - கூட்டுச் செயற்பாடுகளுமே. ஆனால் நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் அதை நோக்கி ஒரு அடிகூட இதுவரை எடுத்து வைப்பதாக இல்லை. இவர்களிடம் இருந்து நாட்டையும், மக்களையும் கடவுள்தான் காப்பற்றவேண்டும்.

நாளொரு நல்வார்த்தை

"செல்வத்தை மட்டுமே நாடுபவன் வீழ்ச்சி அடைவான். நற்பண்பு உடையவன் கிளைபோல் செழித்து இருப்பான்" -மவுண்டர்




# கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்றால் நடவடிக்கை

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 12**

**யாழ். மாவட்டத்தில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அரிசிக் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் வியாபாரிகள் அத்தியாவசியப்பொருள்களை மிகவும் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். தற்போது அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், அந்த விலைக்கே அரிசி விற்கப்படுதல்வேண்டும். கட்டுப்பாட்டு விலைகளுக்கு மாறாக அரிசி விற்கப்படுவது கண்டறியப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பாவனையாளர் அதிகாரசபையால் இது தொடர்பான கண்காணிப்பு இனி வரும் நாள்களில் மேற்கொள்ளப்படும் - என்றார். (ம)

## இருவகை அரிசிக்கு விலைகள் நிர்ணயம்



கொழும்பு, ஜூன் 12

வெள்ளைப் பச்சையரிசி மற்றும் சிவப்புப் பச்சையரிசி என்பனவற்றுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானியை நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளைப் பச்சையரிசி மற்றும் சிவப்புப் பச்சையரிசி என்பனவற்றின் அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாகும்.

அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் அரிசியை விற்கவோ, வழங்கவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம)

## உலக உணவுத்திட்ட தலைவரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு!



கொழும்பு, ஜூன் 12

உலக உணவுத் திட்டத்தின் தலைவரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

உலக உணவுத் திட்டத்தின் தலைவருடன் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சின் அடிப்படையிலேயே இந்த அழைப்பு பிரதமரால் விடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம், உலக உணவுத்திட்டம் இலங்கைக்கு வழங்குவதாகத் தெரிவித்துள்ள ஆதரவுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார். (ம)

நாளை

13.06.2022 திங்கட்கிழமை வைகாசி 30

சுபநேரம் : 11.52 - 01.22

ராகுகாலம்: 07.22 -08.52

வற்றாப்பளை கண்ணகையம்மன் பொங்கல், புனித அந்தோனியார் திருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பிரதேசசபையால்

# பஞ்சத்தை எதிர்கொள்ள 10 லட்சம் மரவள்ளிகள்

**கொடிகாமம், ஜூன் 12**



**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத்தட்டுப்பாடு என்பவற்றை எதிர்கொள்வதற்காக, சாவகச்சேரி பிரதேசசபை 10 லட்சம் மரவள்ளித் துண்டுகளை நடுகைசெய்யும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.**

சாவகச்சேரி பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே கருத்துத் தெரிவிக்கையிலேயே தவிசாளர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் எதிர்காலத்தில் ஏற்படப் போவதாகச் சொல்லப்படும் பஞ்சத்தை எதிர்கொள்வதற்கு நாம் எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். இதற்காக 5 மில்லியன் ரூபா செலவில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக 10 லட்சம் மரவள்ளித் துண்டங்கள் சபையால் மக்களுக்குப் பகிரப்படவுள்ளன. அத்துடன் வற்றாளைச் செய்கையும் ஊக்குவிக்கப்படவுள்ளது. ஆளுநரின் அனுமதி விரைவில் பெறப்பட்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எங்கெல்லாம் இந்தப் பயிர்ச் செய்கைளை மேற்கொள்வதற்கு இடங்கள் ஏதுவாக உள்ளனவோ அங்கெல்லாம் நாம் இந்தப் பயிர்ச் செய்கையை முன்னெடுப்போம். இன்று பொருளாதார நிபுணர்களும், அரசியல்வாதிகளும் ஜோதிடர்களாக மாறியுள்ளார்களா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

மூன்று மாதங்களில் பஞ்சம் வரும், நான்கு மாதங்களில் பஞ்சம் வரும் என்றெல்லாம் சொல்கின்றார்களே தவிர அதற்கான தீர்வை எவரும் முன்வைக்கவில்லை - என்றார். (ம-159)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு

சாவகச்சேரி, ஜூன் 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்டத்தை மேற்கொள்ளுமாறு பொதுமக்களை ஊக்குவிக்கும் பணியை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் ஏற்படவுள்ள உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள ஒவ்வொரு வீட்டிலும் சிறிய நிலப்பரப்பிலாவது வீட்டுத்தோட்டம் செய்வது அவசியம் என்று தெரிவிக்கப்படும் நிலையிலேயே சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அது தொடர்பான விழிப்புணர்வை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் முட்டை விலை எகிறியுள்ள நிலையில் வீடுகளில் கோழி வளர்ப்பை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். குறித்த செயற்பாட்டை வீடுகளுக்குச் சென்று கண்காணிக்கும் பணியில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல அலுவலர்கள் மற்றும் பிரதேச தாய்மார் கழகத்தினர் ஈடுபட்டுள்ளனர். (ச-9)

## மருத்துவர் லவன் நினைவாக உதவித்திட்டங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

சர்வமத ஆன்மிக அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மருத்துவர் செ.லவனின் நினைவாக உதவித்திட்டங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் 10ஆம் திகதி கோவில் குளம் கமநல சேவை திணைக்கள மண்டபத்தில் நடைபெற்றது.

தென்னை அபிவிருத்தி திணைக்களத்தின் வடபிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், வவுனியா மாவட்ட உதவி மாவட்டச் செயலர் திரேஸ்குமார், பொறியிலாளர் வதனகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு தென்னை மரக்கன்றுகள், தானிய விதைகள் மற்றும் கோழிக்கூடுகள் ஆகியவை கையளிக்கப்பட்டன. (ச-110)



## வாழ்வாதார மேம்பாட்டு உதவிகள் கையளிப்பு

கொடிகாமம், ஜூன் 12

அமரர் இராசையா கமலாதேவியின் 31 ஆம் நாள் நினைவாக, அவரது மகனின் ஒழுங்கமைப்பில் வாழ்வாதார மேம்பாட்டு உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தெல்லிப்பழை சிவபூமி அறக்கட்டளை, விழிப்புலனற்றோரின் கருவி, மாற்றுத்திறனாளிகளின் சமூக மேம்பாட்டு அமையம், வன்னி மேம்பாட்டுப் பேரவை ஆகிய பொதுஅமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

அத்துடன் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை மற்றும் பரராசசேகரப் பிள்ளையார் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், யாழ். மாநகரசபை முதல்வர் மணிவண்ணன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், நல்லூர்ப் பிரதேசசபைத் தலைவர் மயூரன் ஆகியோர் கலந்துகொண்டு உதவிப்பொருள்களை வழங்கினர். (ச-159)



## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன் 12

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும் நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாக பூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளன.

இதன்போது தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு.சோமஸ்கந்தக்குருக்கள் அருளாசி உரையையும் வேதபாராயணத்தையும் நிகழ்த்தவுள்ளார். (ச)




கரவெட்டி தெற்கு ஜே/365 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பொருளாதாரம் நலிவடைந்த 30 குடும்பங்க [illegible] கள் வழங்கப்பட்டன. (ச-20)

## மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம், ஜூன் 12

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையின் தரம் 5 புலமைப்பரிசில் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி க.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மோகனதாஸ் சனசமூக நிலைய மோகனதாஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டத்தின் ஊடாக புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களுக்குத் தலா 8 ஆயிரம் ரூபா வீதமும் ஏனைய மாணவர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டது. (ச-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு வீண்மோதலை தவிருங்கள்!

## மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்

**மன்னார், ஜீன் 12**



**நாட்டில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் விதிவிபத்துக்கள் மற்றும் மோதல்களை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தர்மராஜா வினோதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மருத்துவத்துறையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல மருந்து வகைகள் கையிருப்பில் இல்லாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் தேவையில்லாமல் மோதல்களில் ஈடுபடுதல், காயங்களை உருவாக்கிக் கொள்ளல், வாள்வெட்டுச் சம்பவங்கள், விபத்துக்களில் காயமடைதல் போன்றவற்றை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் இல்லாத காரணத்தால் 8 அம்புலன்ஸ்களுக்கு மேல் இயங்காதுள்ளன.

இதுபோன்ற சம்பவங்களின்போது அவசர மருத்துவ சிகிச்சைக்கு வருபவர்கள், அந்தச் சிகிச்சையைப் பெறுவதற்காகக் காத்திருக்கும் நிலை ஏற்படுவதுடன் இதனால் உயிரிழப்புகள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகம். ஆகவே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொள்ள, தேவையற்ற செயற்பாடுகளை தவிர்த்து பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (ச-213)





# மாற்றுப்பாலின ஒடுக்குமுறை; யாழில் விழிப்புணர்வுப் பேரணி

யாழ்ப்பாணம், ஜீன் 12
மாற்றுப்பாலின சமூகத்தினருக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கண்டித்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக விழிப்புணர்வுப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மாற்றுப்பாலின சமூகத்தினரை ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தாத வாழ்தலை நோக்கி குரல் கொடுப்போம் எனும் நோக்கில் 'வானவில் நடைபயண ஒருங்கிணைவு' எனும் தலைப்பில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

சமத்துவம், சுயமரியாதை மற்றும் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணியில் பாலின வேறுபாடின்றி பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். (ச-20)



சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் மந்துவில் சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு நேற்று சனிக்கிழமை காலை விலங்கு விசர்நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. (ச-159)



உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தின் ஐநூறு வருட பழைமை வாய்ந்த தீர்த்தக் கேணியை இராணுவத்தினர் சீரமைத்து அண்மையில் கையளித்துள்ளனர். (ம-20)

# மன்னார் மற்றும் காங்கேசன்துறை கடற்பரப்பில் காற்று அதிகரிக்கும்

கொழும்பு, ஜீன் 12
நாட்டில் தற்போது நிலவும் காலநிலை காரணமாக, மன்னார் மற்றும் காங்கேசன்துறை கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்று வீச வாய்ப்புள்ளது என்றும் அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
ஊவா மாகாணத்திலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசும் என்பதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது - என்றுள்ளது. (ம)



நாவற்குழி கம்பளி வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. (ச-159)

# கோழி இறைச்சி, முட்டை விலை இன்னும் உயரும்!

விலங்குணவுகளின் விலைகள் அதிகரித்துள்ளமையால், தொழிற்றுறையில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்று அகில இலங்கை கோழிப்பண்ணை வர்த்தகர்கள் சங்கம் மற்றும் இலங்கை விலங்குணவு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர மேலும் தெரிவித்ததாவது:-
விலையுயர்வு காரணமாக முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றின் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும். தற்போது சந்தையில் முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவாக உள்ளது. நகர்ப்புறங்களில் உள்ள சிறு குழந்தைகளில் சுமார் 30 சதவீதமானோர் புரதச் சத்து குறைப்பாட்டுடன் உள்ளனர். கிராமப்புறங்களில் இந்த நிலைமை இதைவிடவும் மோசமாக இருக்கும். இந்த நிலையில், பொதுமக்களுக்கு முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றை பெற முடியாவிட்டால், புரதச்சத்துக் குறைபாடு தீவிரமாகும்.

எரிபொருள் மற்றும் போக்கு வரத்துப் பிரச்சினையால், முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவை சந்தைக்கு கிடைக்கும் அளவு குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக, நுகர்வோரின் கேள்விக்கு ஏற்ப அவற்றை விநியோகிக்க முடியாதுள்ளது - என்றார். (எ-இ)

## மதிப்பளித்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜீன் 12
பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் மாரிமுத்து நவநீதமணியின் அகவை நிறைவு மதிப்பளித்தல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போதைய அரசின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்து மக்கள் போராட்ட இயக்க அமைப்பினரால் நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. (ச-20)

# தீவகத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் வெளியேறினால் பற்றாக்குறை ஏற்படும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 12**

**தீவகத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் வெளியேறினால் தீவகத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறை மேலும் மோசமடையும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

நடைமுறைக்குச் சாத்தியமில்லாத நிலத் தொடர்புகளற்ற தீவுகளில் பணியாற்றும் பல ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றம் எனும் பெயரில் சுற்றறிக்கைக்கு முரணாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. இதனால் பல சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாகப் பணியாற்றும் ஆசிரியர்கள் தாம் நீண்டகாலம் தீவகத்தில் கடமையாற்றிவிட்டதாகவும் அதனால் தாமும் மற்றவர்களைப் போல நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்ல தகுதியுடையவர்களாக இருப்பதாகவும் தங்களையும் விடுவிக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறு அர்ப்பணிப்போடு கடமையாற்றும் ஆசிரியர்கள் தீவகத்தில் இருந்து வெளியேறினால் தீவகத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் மோசமடையும்.

இதேபோன்று வடக்கின் சில வலயங்களில் நடைமுறைப்படுத்தப்படும் முறையற்ற இடமாற்றங்களால் கஷ்டமான பிரதேசப் பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் பழிவாங்குதல், அரசியல் பின்னணி போன்ற காரணங்களால் முன்னெடுக்கப்படுவதாகவும் செல்வாக்குள்ள சிலர் தாம் நினைத்த இடங்களுக்கு நகர்த்தப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒருசில அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஒரே நிலையத்தில் பத்து வருடங்களுக்கு மேலாகக் கடமையிலுள்ளனர். அவர்களுக்கு அவர்களின் சேவை நிபந்தனையிலுள்ள முறைமை பின்பற்றப்படுவதில்லை. யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நியமனக் காலம் முதல் 24 ஆண்டுகளாக ஒருவர் ஒரே பாடசாலையில் அதிபராகவுள்ளார்.

இது தொடர்பில் பலரும் முறைப்பாடு செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக பழிவாங்கும் நோக்கோடு சில பெண் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதும் வேதனத்தை நிறுத்துவதும் சாதாரணமாகவுள்ளது -என்றுள்ளது. (ஒ-14)

# வீதியில் வைத்து எரிபொருள் விநியோகம்

## இருவர் கைது

கொழும்பு, ஜூன் 12

டீசல் ஏற்றிச் சென்ற எரிபொருள் பவுஸரை சிகிரியா-திகம்பதஹ பகுதியில் வைத்து அதிலிருந்து டீசலை விநியோகித்த சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் நேற்றுமுன்தினம் கைதாகினர். சம்பவம் தொடர்பில் டீசலை ஏற்றிச் சென்ற பவுஸர் சாரதி மற்றும் அவரது உதவியாளரே கைதாகினர். இதன்போது, விநியோகிக்கப்பட்ட 210 லீற்றர் டீசல் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஒ-இ)

# இ.போ.ச. போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 12

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபை தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள முரண்பாடு தொடர்பான விடயங்களை முன்வைத்து நாட்டின் பல பாகங்களிலும் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். (ஒ-இ)

# நுவரெலியாவில் கிரனைட் மீட்பு

நுவரெலியா - ஆவேலியா பகுதியில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான பெரேக் லேன் வாவிப் பகுதியிலிருந்து ரி-82 ரக கிரனைட் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

தொழிலாளி ஒருவர், வழங்கிய தகவலின் பிரகாரம், வாவிக்குச் சென்று சோதனை மேற்கொண்டபோதே கிரனைட் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# ரணிலின் உரைக்கு சட்டத்தரணிகள் மறுப்பு

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடனான சந்திப்பு தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தவறானது என்றும், அது நடந்தவற்றின் உண்மையான பிரதிபலிப்பு அல்ல என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் உத்தேச திருத்தங்கள் தொடர்பில் பிரதமர் கூறியதுபோன்று தமது அமைப்புக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என்று சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமையன்று பிரதமர் ஆற்றிய உரையில், சட்டத்தரணிகள் சங்கம், மே 8ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்து அவருடன் இணக்கப்பாட்டுக்கு வந்தது. நீங்கள் 19ஆவது திருத்தத்தை மீளமைத்தால் குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கினால் தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கமுடியுமென இணக்கம் எட்டப்பட்டதாக பிரதமர் கூறியிருந்தார்.

அது தவறு என்று சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு ஜனாதிபதி உடன்பட்டால் அவர் பதவியில் நீடிக்க முடியும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதிக்கு வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளது. (ஒ-இ)

# சுற்றுலாத்துறையை தூக்கி நிறுத்துங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 12

சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேம்படுத்த புதிய அணுகுமுறைகளைக் கண்டறிய வேண்டுமென ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுற்றுலாத்துறை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மற்றும் கொவிட் தொற்று நோயால் முடங்கியிருந்த சுற்றுலா கைத்தொழில், மீண்டும் இயல்பு நிலைக்கு மாறி வருகையில் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை காரணமாக மீண்டும் அது வீழ்ச்சி அடைந்துள்ளது. சுற்றுலாத்துறையானது தேசிய பொருளாதாரத்தைப் போன்று, பெருமளவிலான மக்களின் தொழில் பாதுகாப்புக்கு தாக்கம் செலுத்தக்கூடிய ஒரு முக்கியமான துறையாக இருப்பதால், அது துரிதமாக மேம்படுத்தப்பட வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்தார். நாடு பற்றிய தவறான பரப்புரைகளை தூதரகங்கள் மூலம் சரி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையில் ஈடுபடுகின்றவர்கள் எதிர்நோக்கும் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் எரிவாயு பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

திரைப்பட படப்பிடிப்பு அமைவிடங்களை கவர்ச்சிகரமான முறையில் உலகம் பூராகவும் விளம்பரப்படுத்துவதன் மூலம் சுற்றுலாத்துறைக்கு அதிக கவனத்தை ஈர்க்கமுடியும் என்றும் கலந்துரையாடப்பட்டது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொத்து விவரத்தை சமர்ப்பித்தே பதவியேற்கவேண்டும் தம்மிக்க!

## தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 12**

**தொழிலதிபர் தம்மிக்க பெரேராவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருக்கான மனுவை, அவர் தமது சொத்துக்களை பிரகடனம் செய்யும் வரையில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.**

மனித உரிமைகள் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் மிகப் பெரிய பணக்காரர் என்று சிலரால் நம்பப்படும் தம்மிக்க பெரேராவின் முதலீடுகளில் சூதாட்ட விடுதிகள், வங்கிகள், விருந்தகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியன உள்ளன. இந்தநிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமனம் செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது சொத்துப் பிரகடனங்களைச் சமர்ப்பித்த பின்னரே அவர்களது நாடாளுமன்ற இடங்களைப் பெற்றனர். தம்மிக்க பெரேராவும் தனது சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் - என்றார். (ஏ-இ)

## மதுபானக் கடைகளுக்கு பூட்டு

கொழும்பு, ஜூன் 12

மதுபானக் கடைகள், சூதாட்ட விடுதிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொசன் பூரணையை அடுத்து எதிர்வரும் 14ஆம் திகதி அனைத்து மதுபானக் கடைகள், பல்பொருள் அங்காடிகளில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் சூதாட்ட விடுதிகள் ஆகியவற்றை மூட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)



## புங்குடுதீவு ம.வித்தியில் மதிய உணவுத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

புங்குடுதீவு மகா வித்தியாலய பழைய மாணவர்களின் நிதி அனுசரணையில் மாணவர்களுக்கான 'மதிய உணவுத் திட்டம்' ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளரும் வித்தியாலயத்தின் பழைய மாணவருமான சின்னத்தம்பி கனகலிங்கத்தின் கடினமான முயற்சியின் பயனாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் ஓய்வுநிலை பேராசிரியர் கா.குகபாலன், வேலணை கோட்டக்கல்வி அதிகாரி சசிதரன், வேலணை பிரதேசசபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனின் நிதியுதவியில் மாணவர்களுக்கான நூல்களும் நிகழ்வில் வழங்கப்பட்டன. (ம)

## போக்குவரத்து நெருக்கடி: தீர்ப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 12

எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும் நீண்ட வார இறுதியில் பொது மக்களுக்கு அதிகபட்ச சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாகாணங்களுக்குள்ளும், மாகாணங்களுக்கு இடையிலான பஸ்களும் இவ்வாறு சேவையில் ஈடுபடும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான நிலான் மிராண்டா தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்களும் நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இயங்கும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவரான கெமுனு விஜேரத்ன முன்னதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ-இ)

## கட்டுமானச் சிக்கல்களை தீர்ப்பதற்குப் பரிந்துரை!

கொழும்பு, ஜூன் 12

தேசிய மக்கள் சக்தி, பொறியியல் மன்றம் கட்டுமானத் துறையில் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்க்க பல திட்டங்களை முன்வைத்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்ட மன்றம், தற்போதைய நெருக்கடியால் வேலையிழந்த நபர்களை தேர்ந்தெடுத்து திறமையான தொழிலாளர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் தலையிடவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

வேலையிழந்த நபர்களுக்கு ஊழியர் வருங்கால வைப்பு நிதி மூலம் சலுகைகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் பரிசீலிக்கப்படவேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நாட்டில் பல சீன கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் சீனப் பிரஜைகள் எனவும் பொறியியல் மன்றம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையை சீர்செய்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும் எனவும், அத்தகைய நிர்மாணத் திட்டங்களில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று சீன அரசாங்கத்திடமும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமும் கோரிக்கை விடுக்கவேண்டும் எனவும் மன்றம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## பாஸ்போட் அலுவலகம் திங்கள் திறந்திருக்கும்!

அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் பிரதான அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை 13ஆம் திகதி, பொது நிர்வாக அமைச்சால் சிறப்பு அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து பிரச்சினைகள் மற்றும் அரசாங்க அலுவலகங்களை இயக்குவதில் ஏற்படும் சிரமங்களை கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் நாளாந்தம் பெரும் எண்ணிக்கையானோர் சேவை பெற வருவதாலும், நாளாந்தம் 2 ஆயிரத்து 500 கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதாலும் விடுமுறை தினத்திலும் இந்த அலுவலகங்கள் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

**ஆசிரியர் | கடிதம்**

## வீட்டுக்கு ஒரு பயிர்; நாட்டுக்கு அது உயிர்

ஒருபோதுமில்லாதவாறு எமது அழகான தேசம், பொருளாதார நெருக்கடிகளால் சீர்குலைந்து பஞ்சம், பசி, பட்டினியால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசாங்கமோ தனது இயலாத தன்மையால் உலகெங்கும் கடன்வாங்கி ஒவ்வொரு குடிமகனையும் கடனாளியாக்கியுள்ளது. ஒவ்வொரு பிரஜையும் அவனது காலம் முழுவதுமாக சுமார் பத்து லட்சம் ரூபாவை ஏதோ ஒரு வழியில் கடனாகக் கொண்டிருக்கின்றான்.

இதுவரை காலமும் ஆட்சிபுரிந்த அத்தனை பேரும் பேராசை நிரம்பியவர்களாய்த் திகழ்ந்து தாம்தாம் வாகனம் சொத்துப் பத்துகளுக்கு அதிபதிகளாகக் கொடிகட்டிப் பறந்து அரச நிதிகளை வலு கெட்டித்தனமாகச் சூறையாடி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முதலீடு செய்துகொண்டு சுகபோகமாக வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் நாம் தலைவிதியை நொந்தாலும் இன்று சகலரும் வறுமையின் கரங்களுக்குள் அகப்பட்டுத் திண்டாடுகின்றோம்.

எதிர்காலத்தில் நாம் உயிரோடு வாழ வேண்டுமாக இருந்தால் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரையும் ஒவ்வொரு கால நிமிடத்தையும் பயன்படுத்துவது காலத்தின் கட்டாயமானதாகும். எனவே ஒவ்வொரு நபரும் வீட்டுக்கு ஒரு பயிரை உண்டாக்கி நாட்டுக்கும் நமக்கும் உயிர் கொடுப்போமாக.

கத்தரி, மிளகாய், பயிற்றை, வெண்டி, பாகல், புடோல், பூசணி, வாழை, பொன்னாங்காணி, வல்லாரை, அவரை, முல்லை, முசுட்டை, சண்டி, கீரை, தக்காளி, தூதுவளை, மொசுமொசுக்கை, பசளி இதில் ஏதாவது ஒன்றையோ பலவற்றையோ செய்கை பண்ணி பஞ்சம் பசி பட்டினியைப் போக்குவோமாக.

கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பரின் பின்னர்

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முனைப்பு!

கொழும்பு, ஜூன் 12

**தேர்தல் சட்டத்துக்கு உட்பட்டு, இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதியிலிருந்து அடுத்த 6 மாதங்களுக்குள் உள்ளாட்சித் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு தயாராகி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உள்ளூராட்சி சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேசசபைகளின் பதவிக்காலம் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், அவற்றின் புதிய பதவிக்காலம் அடுத்த வருடம் மார்ச் 20ஆம் திகதி ஆரம்பமாகும் என்று ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவரை கோடிட்டு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் அதற்கு முன்வரும் ஆறு மாத காலத்துக்குள் உள்ள திகதி ஒன்றில் இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் நடப்பு பொருளாதார நெருக்கடிக்குள் இது சாத்தியமா என்பது தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை.

முன்னதாக, உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கபோவதில்லை என்று அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறியிருந்தமையும், தேர்தல்களை நடத்த இது உகந்த காலம் அல்ல என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-இ)



## இப்போது சர்வகட்சி அரசு; விரைவில் பொதுத்தேர்தல்

மீட்சிக்கு வழி அதுவே என்று மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் தற்போதைய அரசாங்கம் மாறும்வரை நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் வெளிநாடுகளின் உதவிகளை பெற வேண்டுமாயின் குறிப்பிட்ட காலத்துக்கு சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்து, உடனடியாக பொதுத் தேர்தலை நடத்தி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்யவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளது. அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் என்ன கூறினாலும் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

நாட்டின் உணவு உற்பத்தி சகல விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளது. உரம், எரிபொருள், கிருமி நாசினி என்பன இல்லை. இந்த நிலைமையில், நெற் பயிர்ச் செய்கை மாத்திரமல்லாமல் காய்கறி, பழங்கள், தேயிலை, தனியங்கள், சோளம் என அனைத்து உணவு உற்பத்திகளும் பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளன.

இப்படி அரசாங்கத்தை அமைத்துக்கொண்டு நெருக்கடியில் இருந்து மீளமுடியாது. இதற்காகவே நாங்கள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு தொடர்ந்தும் கூறிவருகின்றோம். நான் இதனை அண்மையிலும் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினேன். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் இணைந்து, குறுகிய காலத்துக்கு அரசாங்கம் ஒன்றை அமைத்து, பின்னர் பொதுத்தேர்தலை நடத்தவேண்டும். பொதுத்தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டால் பல நாடுகளின் உதவிகள் இங்கு கிட்டும் - என்றார். (ம)

தேசிய ரீதியில்

## உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானம்!

கொழும்பு, ஜூன் 12

பொது நிர்வாகம் மற்றும் விவசாய அமைச்சுக்கள் ஒற்றிணைந்து 'இணைந்து பயிரிடுவோம் நாட்டை வெற்றியடையச் செய்வோம்' என்ற தொனிப்பொருளில் தேசிய உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வகிபாகம் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட வீட்டுத்தோட்டம் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, ஒவ்வொரு பிரதேசங்களிலும் பயிரிடுவதற்குப் பொருத்தமானப் பயிர்களை மிகச் சரியாகக் கண்டறிய வேண்டிய தன் அவசியத்தையும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

விவசாயத்தில் இளைஞர்களுக்கு முன்னுரிமை எித்து அதிக உற்பத்தித்திறனைப் பெற்றுக்கொள்வதற்கும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் திட்டங்களை வகுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ம)

## உணவுப் பாதுகாப்பை உடன் செயற்படுத்துக

விதுர வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 12



நாட்டில் உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டிலும் உலகிலும் உள்ள அனைத்து அம்சங்களும் உணவுப் பாதுகாப்பில் தங்கியுள்ளன. 90ஆம் ஆண்டுகளில் தொழில் மயமாக்கலை நோக்கி நகர்த்தும் முயற்சிகள் தோல்வியடைந்தன. திறந்த சந்தைக்கொள்கை உருவாக்கப்பட்டதன் மூலம் உள்ளூர் விவசாயம் வீணாகிவிட்டது.

நாட்டில் பஞ்சம் ஏற்படும் நிலைமை தோன்றியுள்ளது. உலகம் முழுவதும் இதுவே நிலைமை என்கின்றபோது எங்கிருந்து உணவை இறக்குமதி செய்ய முடியும்? விவசாயத்தில் தன்னிறைவு அடையத் தவறினால், உணவுப் பொருள்களைத் தொடர்ந்து கடனுக்குப் பெறமுடியாத அவல நிலை ஏற்படும். இது வெறும் குறுகிய கால நடவடிக்கையாக மாத்திரம் இருக்க வேண்டும். இந்த நோக்கத்தில் பங்களிக்க அனைவரின் ஆதரவும் தேவை - என்றும் தெரிவித்தார். (எ-இ)

## விமான நிலையத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 12

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையிலிருந்து வந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், சந்தேகநபரிடமிருந்து 1 கிலோ 350 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 46 வயதான குறித்த சந்தேகநபர் நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை தடுத்து வைக்க உத்தரவிடப்பட்டது. (எ-இ)

## அரச நிறுவனங்கள் சிலவற்றை மாகாண ரீதியில் இயக்கத் திட்டம்

எரிபொருளை மீதப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 12



இலங்கையில் சில முக்கிய அரச நிறுவனங்களை மாகாணங்கள் ரீதியில் செயற்படுத்துவதன் ஊடாக அதிக அரச ஊழியர்களின் போக்குவரத்துச் செலவைக் கட்டுப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வகிபாகம் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறைந்த நேரத்தில் ஆரோக்கியமான அரச சேவையைப் பெற்றுக்கொடுத்து சேவைத்திறனை அதிகரிக்கும் வண்ணம் ஆவன முன்னெடுக்குமாறு கலந்துரையாடலில் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணைகளை விரைவுபடுத்தவும், அரச ஊழியர்களிடம் அதிகபட்ச சேவையைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் இந்த கலந்துரையாடலில் பரிசீலிக்கப்பட்டது. (ம)

## பொதுத்தேர்தலே தீர்வு ஜே.வி.பி. வலியுறுத்து!

கொழும்பு, ஜூன் 12

நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு பொதுத்தேர்தலை நடத்துவதேயாகும் என மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பீட உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. நாட்டில் நிலவிவரும் சமூக மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காணக்கூடிய ஒரேவழி அரசியல் உறுதித்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதேயாகும். எனவே, பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 08 . 1936



இறப்பு 10 . 06 . 2022

## திரு. சீனிவாசகம் நவரத்தினம்

யாழ்.உரும்பிராய் வடக்கு இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் நவரத்தினம் அவர்கள் 10.06.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னர் செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும் இராசமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் செல்லத்துரை (இலங்கை), பத்மனாதன் (கனடா), சோதிமலர் (மலேசியா), இராசமணி (இலங்கை) ஆகியோரின் அன்பு மூத்த சகோதரரும் ரூபிகா (லண்டன்), ரவிச்சந்திரன் (லண்டன்), ராதிகா (லண்டன்), Dr.உமா (லண்டன்) காலஞ்சென்ற சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானம் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), ஜெகதாசன் ( லண்டன்), சூரியகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr.கபிலிஷா, Dr.லக்ஷன், சுபானி, நிதன், ஜனனி, அபிஷா, பாதுஷா, கபினாஷ், லோஜிகா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேரனும் கயிலனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இந்துக்கல்லூரி ஒழுங்கை உரும்பிராய் வடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ரவிச்சந்திரன் - மகன் - 077 833 3866**
**சிவஞானம் - மருமகன் - 077 616 1951**
**ஜெகதாசன் - மருமகன் - 077 493 4969**

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 - 09 - 1958



இறப்பு 10 - 06 - 2022

## திருமதி ரஞ்சினிதாஸ் கணேசராணி

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சினிதாஸ் கணேசராணி அவர்கள் நேற்றுமுன்தினம் (10.06.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - செல்லக்கண்டு தம்பதிகளின் அன்பு மருமகளும், றஞ்சினிதாஸின் அன்பு மனைவியும், திருமதி புனிதராசா, இராசமலர், இராசேந்திரம் (தம்பி) காலஞ்சென்றவர்களான மனோரதன், பாலச்சந்திரன் மற்றும் ரவிச்சந்திரன் (ஆசிரியர், யா/ பெரியபுலம் ம.வி), திருமதி சிவபாலன் ஜெயசுதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், றஜிதா (ஆசிரியை, தி/ தி/ புனித மரியாள் கல்லூரி), பபிதா (BDO) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கணவர் : 077 707 8287**
**சகோதரர் : 077 767 2616**
**சகோதரி : 141 687 72099 (கனடா)**

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 45154)(3/6)

# மரண அறிவித்தல்



மண்ணில் 04.04.1940

விண்ணில் 10.06.2022

## சின்னத்துரை வள்ளியம்மை

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.8, தட்டாதெருச் சந்தி அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வள்ளியம்மை அவர்கள் கடந்த (10.06.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், ராகினிதேவி (ராகினி), வசந்தகுமாரி (வசந்தி), சந்திராதேவி (ஜெயந்தி), குகதாசன், பிறேமினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வரதராஜா (வரதன், ஓய்வுபெற்ற தபால் ஊழியர், புங்குடுதீவு), தனபாலசிங்கம், சந்திரகுமார், நந்தினி, பாலமனோகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மல்லிகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இலங்க நாதன், இராஜலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், ஐயம் பிள்ளை, செல்லத்தம்பி, கணபதிப்பிள்ளை, பூரணம், அன்னம்மா மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனியும், தனுஜா, திவ்யா விபுஷன், சதுர்ஜன், சகீர்சன், வினுர்சன், வபிர்சன், நவிஷன், துவாரகன், அஸ்மிதா, யனோஜன், தரணிகா, பிரவிகா ஆகியோரின் பேர்த்தியும், டியா, ஆதிரா, அத்விக் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2022) திங்கட் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

**தொடர்பு : 077 188 1736**

**தகவல்: குடும்பத்தினர்**


(CS 1200) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 07 . 1947



மறைவு 10 . 06 . 2022

## முருகேசு சோதிலிங்கம் (பத்தர்)

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சோதிலிங்கம் (பத்தர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (10.06.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி முருகேசு கமலாம்பிகை (சின்னம்மா - புவனேஸ்வரி) தம்பதியரின் மூத்த புதல்வனும் சாரதாம்பாளின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சுப்பையா நேசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவகங்கை (லண்டன்), மரகதாம்பாள், ஆனந்தராணி, ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி), யமுனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கார்த்திகா, அமரர் ஜெனார்த்தனன், அமரர் சீதாம்சன், அமரர் நிரஞ்சன், சர்மிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகநாதன், விதுஷானி ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஜெகசிகன், மோவிக்கா, நேசிகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இராசரட்ணம் மற்றும் சிதம்பரநாதன் வேலுப்பிள்ளை, தேவகி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

344, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 01 . 1942



மறைவு 10 . 06 . 2022

## செல்லப்பா கிட்ணசாமி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கிட்ணசாமி அவர்கள் கடந்த 10.06.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா சின்னம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற நடராசா செல்லம்மா தம்பதியரின் மருமகனும் புஸ்பதேவியின் (ராணி) அன்புக் கணவரும், சீதாலட்சுமி, தனலட்சுமி (பிரான்ஸ்), வதனா (இத்தாலி), துளசிந்தா, சசி, இளங்கோ (டுபாய்) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ஜெயகாந்தன் (பிரான்ஸ்), அருட்செல்வம் (இத்தாலி), ராசன், சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மயூரிசா (பிரான்ஸ்), மீனுசா (பிரான்ஸ்), மதுஜன் (பிரான்ஸ்), சரணியா, பவித்திரன், அபிநயன், தீபிகா, அக்சயன், அனுக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராகி கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் : குடும்பத்தினர்.
T.P 077 247 8945

# கண்ணீர் அஞ்சலி



குவலயம் 11.07.1951 குகமயம் 09.06.2022

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையில் முகாமையாளராக, பொருளாளராக நீண்ட காலமாக அரும்சேவை புரிந்து இப்போது செயலாளராக பெரும் திருப்பணிகளைப் புரிந்து வந்த வேளை அமரத்துவடைந்த

**அமரர் ஸ்ரீமான் தர்மலிங்கம் யோகேஸ்வவரன்**

அவர்களின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரது ஆத்மா சாந்தி பெற மாத்தனை யான் கழல்களை இறைஞ்சுகிறோம். ஓம் சாந்தி! (CS 45152)(3/6)

கண்ணீரால் அஞ்சலிக்கும்
பரிபாலனசபை, மாத்தனைக்கந்தசுவாமி கோயில்
சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 05 . 1978



இறப்பு 10 . 06 . 2022

## தவேந்திரன் தவரூவி (ரூபி)

கனகராயன் குளத்தைப் பிறப்பிடமாகவும் 1 ஆம் வட்டாரம், கைவேலி, புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தவேந்திரன் தவரூபி (ரூபி) நேற்றுமுன்தினம் (10.06.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற யோகராசா மற்றும் யோகராணி தம்பதியரின் அன்பு மருமகளும், தவேந்திரனின் (உரிமையாளர்- புதிய தமிழ்நம்பி ரயர்கடை) அன்பு மனைவியும், தமிழ்ச்சுடர் (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி தரம் - 09 B), ஷஜித் (மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்திய சாலை தரம் -05) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயசீலன் (மதுரன்), தபேந்திரா ஆகியோரின் சகோதரியும், குலேந்திரன், இரவீந்திரன், ஞானேந்திரன், யோகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இரணைப்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர்- தவேந்திரன் (தவம்)
(புதிய தமிழ்நம்பி ரயர்கடை)

(cs 45165) (2.6)

# துயர் பகிர்கின்றோம்



எமது ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா, இராஜ கோபுர திருப்பணி உபயகாரர் மற்றும் முகாமைத்துவ சபை உறுப்பினருமாகிய

**தர்மலிங்கம் யோகேஸ்வரன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல காட்டுத்தறை அருள்மிகு . ஸ்ரீ அம்பலவாண விக்கினேவரப்பிள்ளையாரினதும், பகவதி மாரி அம்மனினதும், மற்றும் கருணாகர வைரவ சுவாமியினதும் பாதக்கமலங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அறங்காவலர்கள், தர்மகர்த்தாக்கள்,
முகாமைத்துவசபையினர்.

இல: 07 ஒழுங்கை, ஓட்டுமடம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

காட்டுத்தறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
விக்கினேஸ்வரப்பிள்ளையார் கோவில்.

## கொழும்புக்குள் நுழைகின்ற வாகனஎண்ணிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 12

டீசல், பெற்றோல் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாளாந்தம் கொழும்புக்கு வரும் கார்கள், வான்கள், பஸ்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 50 வீதத்துக்கும் மேல் குறைந்துள்ளது.

தனியார் வாகனங்களில் வந்த பலர் தற்போது பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துவதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

வழக்கமாக நாளாந்தம் 5 லட்சம் வாகனங்கள் கொழும்பை வந்தடைவதுடன் கொழும்பு நகரில் கடும் வாகன நெரிசலும் காணப்படும். தற்போது கொழும்பில் போக்குவரத்து நெரிசல் கணிசமாகக் குறைந்துள்ளது.

சுமார் 18 ஆயிரம் தொடக்கம் 13 ஆயிரம் வரையான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ள போதிலும், தற்போது 5 ஆயிரத்துக்கும் குறைவான பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ்களின் எண்ணிக்கையும் 25 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என்று சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் கோவிலுக்கு மிக அருகாமையில் வீடு வாடகைக்கு விடப்படும். (cs45138) (2.6)

**077 861 8090**

## வீடு வாடகைக்கு

வேலணை 4ஆம் வட்டாரம் பெருங்குளம் முத்து மாரியம்மன் கோவில் வீதியில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு

**077 384 5415**

## அறை வாடகைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்க அருகாமையில் கல்வி கற்கும் மாணவிகளுக்கு (பல்கலைக்கழம். A/L) அறை மாத வாடகைக்கு உண்டு. (CS 45144) (3/6)

தொடர்பு : **076 447 8091**

## விற்பனைக்கு

கார் விற்பனைக்கு NISSAN MARCH KNxxxx

தொடர்பு: **077 4523408, 077 240 4912**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன். பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?

➤பொன்னாங்காணி. கரிசலாங்காணி. இலாமிச்சை வேர். கருவேப்பிலை, வல்லாரை. நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய (cs 37149)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?. கணச்சூடா?. பலகீனமா?. ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?. மார்பு கூட வேண்டுமா?. உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## நாகபூஷணி திருமண சேவை

மிகப்பொருத்மான மணமக்கள் ஜாதகங்கள் உடன் பெற்றுக்கொள்ளலாம். (cs 450431) (2.6)

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596**

## தேவை

வேலைத்தளம் அமைப்பதற்கு கட்டடத்துடன் கூடிய இடம் தேவை. (cs 45162) (2.6)

**076 821 9414 யாழ்ப்பாணம்**

## வீடு வாடகைக்கு

யாழ் கொக்குவில் மருத்துவபீடத்திற்கு அருகில் சிறு குடும்பத்திற்கான வீடு வாடகைக்கு உண்டு.

**077 363 6129**

## சிங்களம்

சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிக இலகுவான முறையில் கற்பிக்கப்படும்

**நேரடி மற்றும் Zoom Classes**

நேரடி வகுப்புக்களில் எவரும் எத்தினத்திலும் இணைந்துகொள்ளலாம். அனைவருக்கும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

இந்த வருடம் G.C.E O/L (இரண்டாம் மொழி) சிங்களப் பரீட்சை எழுத எதிர்பார்ப்பவர்களுக்கான விஷேட வகுப்புக்கள்.

பாடசாலை பிள்ளைகளுக்கு (தரம் 6,7,8,9,10,11) பாடப்புத்தகத்திற்கு அமைவாக கற்பிக்கப்படும். (CS 11991)-6

**ஸ்ரீ மாஸ்டர் :-0777 033 729**

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்

இல. 164, இராமநாதன் வீதி, (Science Faculty Gate) முன்பாக, யாழ்ப்பாணம்.

இல.41. றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த BSc பட்டதாரியும் குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற பெண்ணிற்கு படித்த தகுந்த மணமகன் உள்நாட்டிலோ. வெளிநாட்டிலோ எதிர்பார்க்கின்றோம்.

**077 413 7211**

## வீடு வாடகைக்கு விடப்படும்

அரச உத்தியோகம் கல்வி கற்கும் மாணவர் களுக்கு சகல வசதிகளுடன் மாபிள் பதித்த வீடு வாடகைக்கு விடப்படும் (விடுதியாகவும் பயன் படுத்தலாம்) (CS 45151) (3/6)

**077 345 0039, 077 258 8938, 077 348 0039**

## CONSULATE GENERAL OF INDIA JAFFNA

### வேலைவாய்ப்பு

இந்திய தூதரகம் யாழ்ப்பாணம். மருதடி வீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்திற்கு துப்புரவு சேவைகளை வழங்குவதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட. அனுபவமுள்ள துப்புரவு சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரப்படுகிறது. மேலதிக விபரங்களை பின் வரும் இணைய தளங்களில் இருந்து பெறலாம்:

**https://cgijaffna.gov.in**

**https://eprocure.gov.in/epublish/app**

ஏலங்களை 30 ஜூன் 2022 வரை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு hoc.jaffna@mea.gov.in மின்னஞ்சல் மூலம் அல்லது 021-2220505 என்ற எண்ணில் அழைக்கவும்.

இந்திய துணை தூதரம்

யாழ்ப்பாணம்

## Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

மேலதிக தகவல்களுக்கு : **0776 929 773**

பாத்திமா : **0706 697 660** | வேணுகா : **0718 517 994**

**Beverley International**

Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka.

Tel : 0112 576 656

Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 1987. கேட்டை ஆசிரியர் (BSc). 1990 விசாகம் (B.A) அரசவேலை. 1987. பூரட்டாதி. 7 செவ்வாய் (B.A) அரசவேலை. 1993 புனர்பூசம் ஆசிரியர். **உத்தியோக மணமகள்கள் தேவை.**

திருமண சேவை **077 078 3832**

## LUXURY APARTMENTS FOR SALE

**வெள்ளவத்தை காலி வீதிக்கு அருகாமையில் IBC Roadல் under Construction Apartments விற்பனைக்குண்டு.**

**2,3,4 படுக்கையறைகள்**

**1550,1400, 1210,1150, 830sq.ft**

Senior citizens மற்றும் அங்கவீனர்களுக்கான முற்றிலும் அவர்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தொடர் மாடி வீடுகள். முதல் முறையாக இலங்கையில்

- ✓ Bank Loan arrange பண்ணித்தரப்படும்.
- ✓ Completion 2023 Oct
- ✓ Interest Free மாத தவணை கட்டணம் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

Avoid 12% Vat

Royal - T Construction Pvt Ltd.

**0775222613**

# தேவை

திருநெல்வேலி பிரதேசத்துக்கு உட்பட்ட எமது நிறுவனத்திற்கு வரவேற்பாளர் தேவை.

- **பெண்கள் விண்ணப்பிக்கலாம்**
- **21 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.**
- **கணினி அறிவு உள்ளவர்கள்**
- **முன் அனுபவம் விரும்பத்தக்கது.**

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர.இல JF/1038**

**மே/பா உதயன்**


**361 கஸ்தூரியார் வீதி**

**யாழ்ப்பாணம்**

# காணி விற்பனைக்கு

புத்தூர் சந்தியிலிருந்து ஆவரங்கால் வீதியில் வாதரவத்தை றோட்டில் 500 மீற்றர் தூரத்தில் **29 நிலப் பரப்புக் காணி** 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டு முன்புறம் 1 பரப்புக் காணி 250000 ரூபாவாகவும், பின்புறம் உள்ள 1 பரப்புக் காணி 220000 ரூபாவாகவும் கொடுக்கப்படும். வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :-** காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை




**தொடர்புகளுக்கு:**

**075 5976 295, 077 146 1716** (CS 46551)-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்



சாவகச்சேரி, ஜுன் 12

பொருண்மியம் நலிவடைந்த 50 குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் 15ஆவது கஜபா காலாட் படையணி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

கொடிகாமம் 52 ஆவது காலாட்படை தலைமையகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பா கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். (ஔ-14,159)

## பொலிஸ் உத்தியோகத்தர் ஆர்ப்பாட்டத்தில் காயம்!

கொழும்பு, ஜுன் 12

பத்தரமுல்லவில் கல்வி அமைச்சுக்கு எதிரே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் ஆர்ப்பாட்டத்தின்போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் நாரஹேன்பிட்டி பொலிஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில், ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டதில் பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்வி அமைச்சின் பிரதான வாயிலை உடைத்த குழுவினர் தொடர்பில் தலங்கம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-இ)


## வேலையாள் தேவை

யாழ் நகரில் இருந்து 5km தொலைவில் உள்ள தீவுப்பகுதியில் பண்ணை வேலைக்கு ஆள் தேவை. கூட்டுப்பண்ணை, தோட்ட வேலை தெரிந்தவராக இருக்க வேண்டும். தங்கிநின்று வேலை செய்யக்கூடியவாராக இருக்க வேண்டும். நிரந்தரமாக நீண்டகாலம் வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். மூன்று வேளை உணவு ,நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

**077 202 1415**

## காணி 6 வருட குத்தகைக்கு

இல.461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் (ஆரியகுளச் சந்திக்கு அருகில், புகையிரத நிலையத்திற்கு நேர் எதிராக, ஆயுள் வேத கல்லூரி முன்பு இயங்கிய) 9 பரப்பு 10.7 குளி விஸ்தீரணமுடைய காணியும் கட்டடமும் 6 வருட குத்தகைக்கு வழங்கப்படும்.

**075 041 2552**

## விற்பனைக்கு

பாவித்த Solar Panel B.P 50W விற்பனைக்கு

**077 179 2577**

## இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்

**பிரிவு 40**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

■ காலம்:- 3 மாதங்கள் ■ சான்றிதழ் வழங்கப்படும்

- Diploma in Law (pre-law-degree)-1 Year

**ஆரம்பம் : 18,19-06-2022, 10.00 AM**

குறிப்பு : ● இலவச வகுப்புகளில் இணையும் மாணவர்கள் NIC பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்
● க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் இணைய முடியும்.

**IPS** திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529

## வேலையாட்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில்** சைவ உணவகத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. மூன்று நேர உணவு தங்குமிட வசதி உடன்.

1) உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
2) காசாளர்
3) பிரதான சமையலாள். உதவியாளர்கள்
4) சுத்திகரிப்பாளர்கள்
5) றொட்டி வேலையாட்கள்
6) இடியப்பம், பிட்டு, ஏனைய பலகாரம் செய்பவர்கள் (இருபாலாரும்)
7) அலுவலக உதவியாளர்கள் (இருபாலாரும்)
8) ரீ மேக்கர்
9) பண்ணை வளர்ப்பு தெரிந்தோர் (வன்னி பெருநிலப்பரப்பு பகுதியில் விரும்பத்தக்கது)
10) ஜுஸ் தயாரிப்பாளர்

**தொடர்பு: 077 191 5368**

## இனிய வாழ்வு இல்லம்

### அறிவித்தல்

### பொதுச்சபைக்கான அங்கத்தவர்களை சேர்த்துக்கொள்ளல்

மேற்படி வெற்றிடமாகவுள்ள இனிய வாழ்வு இல்லத்தின் பொதுச்சபைக்கான அங்கத்தவர்கள் 63 பேரை சேர்த்துக் கொள்ளும் பொருட்டு உரிய விண்ணப்பப் படிவங்கள் இனிய வாழ்வு இல்லத்தினில் எதிர்வரும் 15.06.2022 தொடக்கம் 25.06.2022 ஆம் திகதி வரை விநியோகம் செய்யப்பட்வுள்ளது. எனவே கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகள் உடையவர்கள் விண்ணப்பத்தினை பெற்று பூரணப்படுத்தி 30.06.2022 திகதிக்கு முன்னர் நேரடியாக அல்லது "தலைவர், இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம், புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு பதிவுப் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். 30.06.2022ம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

**தகைமைகள்**

1. இலங்கைப்பிரஜையாகவும் வட மாகாணத்தைச் சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
2. 18 வயதுக்கு மேல் உள்ள ஆண் பெண் இருபாலாரும்.
3. சமூக சேவையில் ஈடுபாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தலைவர்
இனிய வாழ்வு இல்லம்
தேவிபுரம், புதுக்குடியிருப்பு.

Health Care Assistants, Senior Care Assistant, Care Assistant, Support

Urgent Workers Required

For UK

Eligibility

- IELTS 4 Band /OET C+
- Experience: Nil
- Proficiency In English
- Qualification Req: None

Golden Opportunity To Settle In UK Grab It

- 3 Years And Extended
- Family Visa Available
- Processing Time: 3-4 Weeks After Interview
- Salary: GBP 20480/Year Minimum

Interview: 19.06.2022, 10.00 AM



Contact Us

Call & Whatsapp No: + 94 766852529

Send CV on degreeinfo21@gmail.com


## மரண அறிவித்தல்

தாயின் மடியில்
30 . 12 . 1954



இறைவன் அடியில்
11 . 06 . 2022

### திருமதி விஜயலட்சுமி திருஞானசம்பந்தர்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் திருக்கேதீச்சரம் கோவிலடியை வாழிடமாகவும் வவுனியா பூங்கா வீதியைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி. திருஞானசம்பந்தர் விஜயலட்சுமி அவர்கள் நேற்று (11.06.2022) சனிக்கிழமை திருக்கேதீச்சரத்தான் மலரடி ஏகினார்.

அன்னார் அமரர்கள் கந்தையா பத்மாவதி ஆகியோரின் புத்திரியும், அமரர்கள் நடராசா பூமணி ஆகியோரின் அன்பு மருமகளும், வவுனியா மாவட்டத்தின் முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் ந.திருஞானசம்பந்தர் அவர்களின் அன்பு துணைவியாரும், கேதீஸ்வரன் (இயன் மருத்துவர், மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா), வாசுகி (கட்டார்), கௌரீஸ்வரன் (இறுதியாண்டு மாணவர், கொழும்பு பல்கலைக்கழகம், கணினிப்பிரிவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனுஷா (ஆசிரியை, கொழும்பு), துசாந்தன் (பட்டயக் கணக்காளர் கட்டார்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் வதிவிடத்தில் இன்று (12.06.2022) ஞாயிறு காலை 08.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு முற்பகல் 11.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

IRDP 3, பூங்கா வீதி, வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்
தொ.இல - 024-2227338, 077-8148351
077-8195083, 077-6149071

(CS 1006) 1/6

## கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம்

### மரபுவழி வேள்விப் பொங்கல் (2022)

### அறிவித்தல்

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கல் விழாவுக்கான விளக்கு வைத்தல் நிகழ்வானது கடந்த 10.06.2022 அன்று சிறப்பாக இடம்பெற்றதுடன், வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கல் எதிர்வரும் 18.06.2022 சனிக்கிழமை பல வருடங்களுக்குப் பின்னர் ஆலயத்தில் சிறப்பாக இடம்பெறவுள்ளதுடன், எதிர்வரும் 24.06.2022 வெள்ளிக்கிழமை எட்டாம் மடை உற்சவம் இடம்பெறவுள்ளது.

**077 360 5009** ஆலய தர்மகர்த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 9 கலவரங்களுக்குப் பின்னால் விகாரைகளும், தேவாலயங்களும்!

## அமைச்சர் பிரசன்ன குற்றச்சாட்டு

சாவகச்சேரி, ஜுன் 12

**மே மாதம் இடம்பெற்ற கலவரத்துக்குப் பின்னால் விகாரைகளும் தேவாலயங்களுமே இருந்துள்ளன. இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்று கூறுவதற்கு மனமில்லை. ஏனெனில் எனது வீட்டுக்கு தாக்குதல் மேற்கொண்டவர் தேரர் ஒருவராவார் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமரகீர்த்தி அத்துகோரளவின் மறைவு தொடர்பான அனுதாபப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாடு சிங்கள பௌத்த நாடு என்று கூறுவதற்கு மனம் இல்லை. ஏனெனில் கடந்த மாதம் 9ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட வன்முறை, மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கியது கிராமங்களில் இருக்கும் எமது தேரர்களாகும். இதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. எனது வீட்டுக்கு தாக்குதல் மேற்கொள்ளவந்ததும் பேராசிரியரான தேரர் ஒருவராவார். தீ வைத்ததும் தேரர் ஒருவர் தான். தேரர்கள் இந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதன் மூலம் இந்த நாட்டில் ஒழுக்கம் ஏற்படுமா என்பது சந்தேகமாகும். இந்த நிலை தொடர்ந்தால் தேரர்களுக்கு வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

பண்டாரநாயக்கவின் கொலைக்குப் பின்னரே அரசியல்வாதிகள் கொலை செய்யப்படும் நிலை நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அமரகீர்த்தி அத்துகோரளவை கொலை செய்தது சாதாரண மனிதர்கள் அல்ல. அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள். அவர்களுக்கு வாழ்க்கை ஒன்று இல்லை. இதனுடன் சம்பந்தப்பட்டவர்களை தூக்கிலிட்டு கொலை செய்யவேண்டும் என நிட்டம்புவ பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று இந்தச் சம்பவ தினம் சோபித்த தேரர், கர்தினால் ஆகியோர் அங்கிருந்து கொண்டு இவர்களுக்கு அடியுங்கள் என்றே தெரிவித்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் ஏன் இதனைத் தெரிவிக்கவில்லை? இந்தச் சம்பவம் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் அல்ல. 31ஆம் திகதி ஜனாதிபதியின் வீட்டுக்கு அடித்தார்கள். அங்கு தீ வைத்தார்கள். அப்பாவிகளின் வீடுகளுக்கு தீ வைத்தார்கள். ஆனால், நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு சென்று வீரர்கள் போலே அவர்களை வெளியில் எடுத்தனர்.

அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தும்போது பொலிஸார் என்ன செய்தார்கள்? சில சட்டத்தரணிகள் இதனை நியாயப்படுத்தியிருந்தனர். சட்டத்தரணிகளின் ஆதரவு இருப்பதாலேயே 9ஆம் திகதி அவர்கள் சட்டத்தை கையில் எடுத்தனர்.

மேலும் சில கிறிஸ்தவ ஆலயங்களில் மணி ஒலிக்கச்செய்து, மக்களை ஒன்று திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக கர்தினால் விசாரணை நடத்தவேண்டும். அதனால் இந்த தாக்குதலின் பின்னணியில் விகாரைகள் மாத்திரம் அல்ல, கிறிஸ்தவ ஆலயங்களும் இருக்கின்றன. நான் இவ்வாறு தெரிவிப்பதால் எனக்கு எதிராகச் செயற்படுவார்கள்.

அதுதொடர்பில் நான் அச்சப்படவில்லை. ஏனெனில் நான் இழக்கவேண்டிய அனைத்தையும் இழந்துள்ளேன். இனிமேல் இழப்பதற்கு ஒன்றும் இல்லை - என்றார்.

(அ-ஒ-இ)

# ஈஸ்டர் தாக்குதலைப் போன்றே மே 9 வன்முறைச் சம்பவங்கள்

## பிரசன்னவின் குற்றச்சாட்டுக்கு கத்தோலிக்க திருச்சபை பதிலடி

கொழும்பு, ஜுன் 12

இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக எவ்வாறு திட்டமிட்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டதோ, அதேபோன்றே, கடந்த மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவமும் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. மேலும், நாடாளுமன்றில் தனக்குள்ள வரப்பிரசாதங்களை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தவறாகப் பயன்படுத்துகின்றமை கண்டிக்கத்தக்கது என்று அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் ஏற்படவிருந்த இன முறுகலை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க அருட் தந்தையர்கள் தத்தம் பகுதி மக்களை அமைதிப்படுத்தினர். சமாதானத்தை முன்னிறுத்திச் செயற்பட்டிருந்தனர். அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கும், அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காகவும் மே 9 ஆம் திகதியன்று வன்முறையை கட்டவிழ்த்துவிட்டனர். எனினும், மக்கள் புத்திசாலித்தனமாகவும், சமாதானத்துடனும் செயற்பட்டபோதிலும், அரசியல்வாதிகள் வன்முறையை ஏற்படுத்தும் நாசகார செயற்பாட்டை கைவிடாது தொடர்ந்தும் செய்து வருகின்றனர்.

மக்கள் சாப்பிடுவதற்கு இல்லாமல் கஷ்டப்பட்டு உயிரை காப்பாற்றுவதற்கு போராடிவரும் தற்போதைய நிலையிலும், மோசமான அரசியலை நடத்துவது முட்டாள்தனமாகும்.

மே 9 வன்முறைச் சம்பவம் இடம்பெறும் என்பது குறித்து பொலிஸ் மாஅதிபர் அறிந்திருக்கவில்லையா? புலனாய்வுத்துறையினருக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெறவில்லையா? அல்லது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் நடப்பது பற்றி தகவல் தெரிந்திருந்தும் அதனை தடுக்காது செயற்பட்டது போன்று, மே 9 வன்முறைச் சம்பவத்தையும் தடுக்காமல் செயற்பட்டனரா? இல்லையென்றால், பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தங்களது கடமைகளை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டதா? அவ்வாறு தடை விதித்தமை யாரென பல்வேறு வகையான கேள்விகள் எழுகின்றன.

இந்த வன்முறைச் சம்பவங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஏன் எந்தவொரு முயற்சிகளும் எடுக்கப்படவில்லை? முயற்சிகள் எடுப்பதற்கு தடையாக இருந்தவர்கள் யார்? இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றம் செய்தவர்கள் சட்டத்துக்கு முன் கொண்டுவரப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டியது அவசியம்.

அலரி மாளிகைக்கு அருகிலும் காலி முகத்திடலிலும் மே 9 ஆம் திகதியன்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்துக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க அருட் தந்தையர்களுமே காரணம் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ள கருத்தை இலங்கை கத்தோலிக்க திருச்சபை முற்றாக நிராகரிக்கிறது - என்றார்.

(அ-ஒ-இ)

# 8 மில்லியன் பைஸர் ஜுலையில் காலாவதி

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 8 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள், அடுத்த மாத முற்பகுதியில் (ஜுலையில்) காலாவதியாகும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

20 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாம் தடுப்பூசியை செலுத்துவதற்காக, 14 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. எனினும், 20 வயதுக்கு மேற்பட்டவர்களில், 54 சதவீதமானோர் மாத்திரமே இதுவரையில் மூன்றாம் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இதன் காரணமாக, எஞ்சியுள்ள 8 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள், அடுத்த மாத முற்பகுதியில் காலாவதியாக உள்ளதென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ-ஒ-இ)

# விமானங்கள் வரவேண்டுமா? உத்தரவாதம் வழங்குங்கள்

## இலங்கைக்கு ரஷ்யா 'செக்'



மொஸ்கோ, ஜுன் 12

ரஷ்யாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமானால், விமானத்தைத் தடுத்து வைப்பது போன்ற சம்பவங்கள் திரும்பவும் நிகழாமல் இருப்பதை இலங்கை உறுதிப்படுத்தவேண்டும் என்று ரஷ்யா நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கைக்கு வந்த ரஷ்ய விமானமொன்று வணிக நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய அண்மையில் இலங்கையில் தடுத்து நிறுத்தப்பட்டது. இதையடுத்து இலங்கைக்கான ரஷ்ய விமானத்தின் பயணங்கள் நிறுத்தப்பட்டன. இந்த நிலையிலேயே, மேற்படி விமானப் பயணங்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் ஏரோஃப்ளோட் விமானங்களைத் தடுத்து நிறுத்தியமைபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழக்கூடாது என்றும் அதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் ரஷ்யா நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கையின் சுற்றுலாத்துறையில் ரஷ்யர்களின் பங்களிப்பு அதிகம். அதுபோன்று இலங்கையின் ஆடை, தேயிலை போன்றவற்றின் பெரும் சந்தையாகவும் ரஷ்யாவே விளங்குகின்றது. ஆதலால், இந்தப் பிரச்சினை தொடர்பில் உயர்மட்ட மட்டத்தில் இலங்கை தீவிரப் படுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

(ம)

திரிபோஷா

# உற்பத்திக்கு உதவும் உலக உணவுத் திட்டம்

கொழும்பு, ஜுன் 12

நாட்டில் திரிபோஷா உற்பத்தியை மீள ஆரம்பிப்பதற்கான உதவிகளை வழங்க உலக உணவுத் திட்டம் இணங்கியுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றியடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இந்தியக் கடன் திட்டத்தில் திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகள் கிடைக்கப்பெறும் எனவும், அதற்கு அமைவாக உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது?'

# மக்களின் கேள்விக்கு பதில் கூறவேண்டும்!

### அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 12

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று வடக்கு மக்களின் கேள்விக்கு பதில் தெரிவித்தாக வேண்டும். அத்துடன் அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் என்பவற்றை இலங்கை கையாளவேண்டுமென அமெரிக்காவோ அல்லது சர்வதேச சமூகமோ கூற முன்னர் இலங்கை மக்களே அதனை வலியுறுத்தினர். சகல இன, மத மக்களின் உரிமைகளையும் பாதுகாக்காது விட்டால், ஒரு நாடாக இலங்கை முன்னோக்கிச் செல்ல முடியாது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு கூறினார்.

இதில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பொதுமக்களின் அமைதியான போராட்டங்களைக் குழப்பும் இவ்வாறான வன்முறைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதுமட்டுமல்ல மாற்றம் ஒன்று வேண்டுமென மக்கள் வலியுறுத்துகின்றனர். அதனைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

மக்கள் நிலையான, ஜனநாயக நாடொன்றை கட்டியெழுப்பவேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அவ்வாறான ஒரு நாட்டை உருவாக்க வேண்டுமென்பதே எமது விருப்பமாகவும் உள்ளது.

இந்தப் பொதுவான நோக்கத்துக்காகச் சகலரும் செயற்பட வேண்டும். நாடாக ஐக்கியப்படவும், சரியான பாதையில் பயணிக்கவும் இதுவே சரியான தருணம் எனக் கருதுகின்றோம்.

ஜனநாயகத்தை பலப்படுத்த வேண்டுமாயின் நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சட்ட ஒழுங்கு பின்பற்றப்பட வேண்டும். ஊடக சுதந்திரம் காணப்பட வேண்டும் - என்றார். (அ-ஓ-இ)

---

### எரிபொருளுடன்...

இதேவேளை - இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையான 12 நாள்களுக்குள் 5 எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஓ-இ)

### அதானி...

கோப் என்றழைக்கப்படும் பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் இலங்கை மின்சார சபை நேற்றுமுன்தினம் முன்னிலையான போது இந்த விடயம் வெளிக் கொணரப்பட்டது.

மின்னுற்பத்தி செயற்றிட்டத்துக்காக இந்தியாவின் அதானி நிறுவனத்தை தெரிவு செய்த விதம் குறித்து, இலங்கை மின்சார சபையிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

'ஜனாதிபதி கடந்த நவம்பர் 24 ஆம் திகதி என்னை அழைத்தார். அதானி நிறுவனத்துக்கு இந்தத்திட்டத்தை வழங்குமாறு உத்தரவிட்டார். இந்திய பிரதமர் மோடி, தனக்கு அழுத்தம் கொடுக்கின்றார் எனவும் அவர் கூறினார். இது இலங்கை மின்சார சபைக்கு உரித்தான விடயம் அல்ல, முதலீட்டுச் சபையுடன் தொடர்புபட்டது என நான் இதன்போது குறிப்பிட்டேன். அதன்பின்னர் நிதி அமைச்சின் செயலருக்கு இது சம்பந்தமாக கடிதம் எழுதினேன்' என்று மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

ஆயினும், காற்றாலைத் திட்டம் தொடர்பான மின்சார சபைத் தலைவரின் கூற்றை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

மன்னார் காற்றாலை மின்சாரத் திட்டம் தொடர்பான கோப் குழுவின் விசாரணையில் மின்சார சபையின் தலைவர் வெளியிட்ட கருத்தை மறுப்பதாகவும் எந்தவொரு குறிப்பிட்ட நபருக்கோ நிறுவனத்துக்கோ அதனை வழங்குவதற்கான அங்கீகாரத்தை அளிக்கவில்லை எனவும் ஜனாதிபதி ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை - நேற்று நள்ளிரவு திடீரென தான் தெரிவித்த கருத்தை மீளப்பெறுவதாக மின்சார சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

"மின்சார சபை சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அதன் வேலைப்பளு காரணமாக உணவு கூட உட்கொள்ளாமல் செயற்பட்டமையால் ஏற்பட்ட மன அழுத்தத்தில் தன்னால் அவ்வாறான கருத்து வெளியிடப்பட்டதாக" அவர் கூறினார்.

"கருத்தை மீளப் பெறும் தமது நிலைப்பாட்டுக்கு ஜனாதிபதி. விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது இந்திய தூதரகத்தால் அழுத்தம் விடுக்கப்படவில்லை" எனவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்தார். (அ-ஓ-இ-44)

### குருந்தூர்...

நீதிமன்றகட்டளையைமீறி முல்லைத்தீவு -குமுழமுனை குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுவரும் விகாரையில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வும் விசேட பூசை வழிபாடுகளும் இன்று இடம் பெறவுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காலை 8 மணிக்கு கவன வீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நூறுக்கணக்கான பிக்குகளின் பங்கேற்புடனும் பெரும் படைதரப்புக்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

குருந்தூர்மலையில் தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

### இலங்கைச்...

களுக்கு அதிகரிக்கும் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெவ்) சர்வதேச சமூகத்தினரிடம் 25.3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை கோரியுள்ளது.

இலங்கையில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய 1.7 மில்லியன் சிறார்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காகவும் போசாக்கு, சுகாதாரம், சுத்தமான குடிதண்ணீர், கல்வி மற்றும் உளநல மேம்பாடு ஆகியவற்றுக்காகவும் இந்த நிதி கோரப்பட்டுள்ளதாக யுனிசெவ் நிறுவனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 4 மாதங்களுக்குள் மிகப்பெரிய இடர் நிலையை எதிர்நோக்கக்கூடிய இலங்கை மக்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே வேண்டுகோளை முன்வைத்துள்ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையால், நாட்டிலுள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு ஏதேனுமொரு வகையில் மனிதாபிமான உதவி தேவைப்படுவதாகவும் யுனிசெவ் அமைப்பு கூறியுள்ளது. (அ-ஓ-இ)

### பற்றைக்குள்ளிருந்து...

பகுதியிலுள்ள பற்றைக்குள்ளிருந்து ஒருவரை மீட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் பொலிஸார் சேர்ப்பித்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த யோகராசா யோகரஞ்சன் (வயது - 45) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டு மருத்துவமனையில் நேற்று சேர்க்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் முச்சக்கரவண்டியில் (ஓட்டோ) வந்துள்ளார். நேற்றையதினம் அவர் சாவகச்சேரி மதுபான விற்பனைநிலையத்துக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது இருவர் வழிமறித்துள்ளனர். ஓட்டோச் சாரதி செல்லும் இடத்துக்கு அருகில் செல்லவேண்டும் எனக் குறிப்பிட்டு அதில் ஏறியுள்ளனர்.

இடையில் ஓட்டோவை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மறித்துள்ளனர். அவர்களுடன் ஓட்டோவில் இருந்தவர்களும் இணைந்து சாரதியைத் தாக்கியுள்ளனர். அவரிடமிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துள்ளனர். சாரதியை கடுமையாகத் தாக்கி அவரது கை, கால், வாய் என்பவற்றைக் கட்டி பற்றைக்குள் போட்டுள்ளனர். சிறிது நேரத்தின் பின்னர், அந்த வழியாகச் சென்ற ஒருவர் பற்றைக்குள் ஒருவர் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். பொலிஸார் அங்கு சென்று அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். (அ-ஓ-9-26-159)

### அநியாய...

நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பழைய விலையை மறைத்து அதிகரித்த புதிய விலைக்கு நூடில்ஸ் மற்றும் பிஸ்கட் பைக்கெற்றுக்களை விற்பனை செய்த இரண்டு வர்த்தகர்களுக்கு எதிராகவும் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

அரிசிக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நள்ளிரவு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையால் யாழ்ப்பாண நகரம் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் நேற்று திடீர் சுற்றிவளைப்புச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது அதிகரித்த விலையில் அரிசி விற்பனை செய்த 5 வர்த்தகர்கள் சிக்கினர். மேலும், பழைய விலையை மறைத்து அல்லது அழித்து புதிய விலையில் நூடில்ஸ் மற்றும் பிஸ்கட் விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும், கொள்ளை இலாபமீட்டும் நடவடிக்கைகளில் வர்த்தகர்களை ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்வதாக மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். (அ-ஓ-5-26)

### எரிபொருள்...

கையிருப்பு தொடர்பான விவரங்களைத் தெரிந்து கொள்ள புதிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

தினசரி காலை 9 மணிக்கு எரிபொருள் கையிருப்பு மற்றும் எரிபொருள் தொடர்பான ஏனைய தகவல்கள் இணையத்தளத்தில் பதிவேற்றப்படும். அதன் பின் ஒவ்வொரு அரை மணித்தியாலத்துக்கும் ஒரு முறை இணையத்தளத்தில் பதிவேற்றம் புதுப்பிக்கப்படும்.

இதேவேளை - இணையத்தளத்தில் தரவுகள் உரியவாறு இல்லை என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். இணையத்தள முகவரி:- https://fuel.gov.lk/ (அ-ஓ-இ)

### தனியார்...

முடங்கக்கூடும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

'இலங்கை போக்குவரத்துச் சபையினால் வழங்கப்படும் டீசல் தற்போது பற்றாக்குறையாகவுள்ளது. டீசல் இன்மையால், பெருமளவான பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை. இந்த நிலைமை மேலும் தீவிரமடையும். எரிபொருள் வழங்கப்படாமையால், அடுத்த வாரம் தனியார் பேருந்து சேவை முழுமையாக முடங்கக் கூடும்' என்றார் அவர்.

இதேநேரம், அடுத்த வாரத்தில், பாடசாலை போக்குவரத்துச் சேவைகளும் தடைப்படும் அபாயம் உள்ளதாக அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் டி சில்வா தெரிவித்துள்ளார். (அ-ஓ-இ)

### டொலருக்காக...

வாயுவை, கப்பலில் இருந்து 4ஆவது நாளாகவும் தரையிறக்க முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2.5 மில்லியன் டொலரைச் செலுத்த முடியாத காரணத்தால் தரையிறக்க முடியாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் லிட்ரோ நிறுவனத்தின் எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டு நேற்றுடன் 4 நாள்கள் நிறைவடைந்துள்ளன. (அ-ஓ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பாதுகாப்பில் கேள்விக்கு இடமில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 12**

**இலங்கையின் தேசிய பாதுகாப்பின் பலம் தொடர்பாக எந்தக் கேள்விக்கும் இடமில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே தெரிவித்துள்ளார்.**

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- விவசாய சமூகத்துக்கு இலங்கை இராணுவம் தனது அதிகபட்ச ஆதரவை வழங்கும். உணவு நெருக்கடிக்கு எதிரான தனது போரின் முதல் படியாக, அரசாங்கத்தால் கைவிடப்பட்ட காணிகள் தொடர்பில் இராணுவம் விசாரணை நடத்தியுள்ளது. விவசாய சபையின் அறிவுறுத்தலின்படி, இந்த வெற்று நிலங்களில் இராணுவம் விவசாயம் செய்ய ஆரம்பிக்கும். அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைக்கப்படும் போது இராணுவத்தினரும் இருந்தனர் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. அச்சுறுத்தலை தடுக்க கடமையில் இருந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர் - என்றார்.

(எ-இ)

## அக்கரப்பத்தனை

# டொரிங்டன் தோட்டத்தில் உயிராபத்தான வாழ்க்கை

அக்கரப்பத்தனை, ஜூன் 12

அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்டத்தின் பிரிவான மோர்சன் குடி யிருப்பின் பின்புறத்தில் உள்ள மலையிலிருந்து பெருமளவான கற்பாறைகள் சரிந்து விழுவதால், அந்தப் பகுதியில் வசிக்கும் 20 குடும்பங்கள் தாம் உயிராபத்தான வாழ்வு வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:- ஒவ்வொரு நாளும் இரவுப் பொழுதை மிகவும் அச்சத்துடனேயே கழித்து வருகின்றோம். அதிகாரிகள் எவரும் எங்களுடைய பிரச்சினைகளை கவனிப்பதில்லை. கற்பாறைகள் தொடர்ந்து சரிந்து விழுவதால் உயிர் ஆபத்துகள் ஏற்படக்கூடிய நிலை உள்ளது. எனவே எம்மைப் பாதுகாப்பான - வாழத்தகுந்த சூழலில் குடியமர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

(ம)


**பணிப்பெண் தேவை**

யாழ்.நகரில் 3 வயது பிள்ளையை பராமரிப்பதற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கும் நல்லொழுக்கமுள்ள பணிப்பெண் தேவை.

077 308 3007

**வேலையாட்கள் தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மருந்தகம் ஒன்றிற்கு Pharmasist, மருந்தாளர் தேவை. சுன்னாகம், உரும்பிராய், உடுவில், இணுவில், மானிப்பாய் ஆகிய இடங்களிற்கு அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

074 016 7518

**காணி விற்பனைக்கு**

மிருசுவில் A-9 றோட்டில் இருந்து 500 மீட்டர் ஒழுங்கையில் 70 பரப்பு வெறும் காணி செம்மண் நிலப் பரப்பு 5 லட்சம் விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 247 4740,074 172 3158

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 2 பேர் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (CS 45148)(3/6)

தொ.பே.இல: 077 660 4014

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்நகரில் இருந்து 5km சுற்று வட்டாரத்திற்குள் களஞ்சியமாக பாவிக்கக்கூடிய வீடு வாடகைக்கு தேவை.

077 628 0685

**ENGLISH CLASSES**

எனக்கும் English பேச விருப்பம் ஆனால் எப்படி எங்கே என்ற தயக்கம் இன்றி பல வருட அனுபவ ஆசிரியரிடம் தனி வகுப்பு யாழ்நகரில்

G.C.E. O/L LITERATURE

K.Ganesh B.A 077 766 8725

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிகநிலையத்திற்கு Computer Billing செய்வதற்கு ஆண், பெண் வேலையாள்களும் தங்கி நின்று வேலைசெய்வதற்கு ஆண் வேலையாள்களும் தேவை. (cs45153) (2/6)

077 419 5015

**வீட்டு வேலையாள் தேவை**

அரியாலையில் உள்ள வீடொன்றிற்கு வீட்டு வேலையாள் தேவை. (பெண்கள் மட்டும்)

077 925 1728

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✓ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
- ✓ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✓ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
- ✓ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ 1 பரப்பின் விலை 3 லட்சம்
- ✓ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை.

தொடர்பு: 076 658 3621 076 436 5814 (CS 4664) 1-6

**விற்பனையாளர் தேவை**

பான்சிக் கடைக்கு விற்பனையாளர் தேவை

077 341 6374, 077 041 1742

**மின்சாரம் துண்டித்து விட்டதா?**

**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**

**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும் **J.J GROUP** 021 222 8854

(CS 1188)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

**மணமகள் தேவை**

லண்டனை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர் 42 வயதிற்கு மேற்பட்ட பெண்ணை எதிர்பார்க்கின்றார்.

**குறிப்பு:** அடிப்படை ஆங்கிலம் இருப்பின் பயணத்தை இலகுபடுத்தலாம்.

077 549 0829

**வாடகைக்கு**

வேம்பிராயில் 1500 கோழி வளர்க்கக்கூடிய கட்டடம் வாடகைக்குண்டு.

077 773 2214

**தென்னிந்திய யாத்திரை**

தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஆகிய 5 மாநிலங்களுக்கூடான யாத்திரையில் 60 க்கு குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

ஆரம்பம் : 01.07.2022

விருப்பமுடையவர்கள் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும் - விபரங்களுக்கு

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் 077 768 0102

அனைத்து செலவுகளும் உட்பட (CS 1167) (3/6)

**சொர்க்கம் திருமண சேவை**

உங்கள் திருமண தேடலுக்கோர் முற்றுப்புள்ளி கனடா தொடக்கம் இலங்கைவரை

தருவது நாங்கள் தெரிவது நீங்கள்

சொர்க்கம் திருமண சேவை

கனடா 001 416 666 1855, யாழ்ப்பாணம் 077 887 6969

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு சமையல் வேலைக்கு (Cook) ஆட்கள் தேவை.

074 17 54 727

**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

IELTS Life Skills - A1 திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம் DIPLOMA IN ENGLISH புதிய பிரிவு ஆரம்பம் 15/6/2022 Wed 9:30 am

SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch

French - France நாட்டுக்கு செல்வோருக்கு

DMI COMPUTER EDUCATION யாழ்ப்பாணம் 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 2970 | 021 225 5665 | 021 228 5665 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

**பணியாளர்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் (online Shoping) நிறுவனத்திற்கு ஆண் / பெண் விற்பனைப்பிரதிநிதி தேவை. ஆங்கிலம், சிங்கள மொழிகளில் கதைக்க கூடியவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் 15,000 - 30,000 வரை

SUBASRI ONLINE SHOPING NO.78, Adiapatham Road, Thirunelvely.

077 153 6914 (cs 45117) (2/6)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

**காணி விற்பனைக்கு**

யாழ்நகரை அண்மித்த அரியாலைப் பகுதியில் குசவம்பாள் வீதியில் A-9 வீதியிலிருந்து 400 மீற்றர் தொலைவில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி உடன் விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு

077 666 5628


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

"பாழ்த்தவைப் புற்றிரைச்சற் பாவிமுத்தான் குன்றைபொய்ப
விழ்த்தநெற்போர் வெண்பொடியாய் வேகவென்றே - வாழ்த்தக்.
கொடாதா ளிடாதான் குறுந்துணியுந் தோய்ந்தே
உடாதான் பெருந்துயரு ஞற்று"

— சாமிநாதப் புலவர்

சஞ்சீவி
Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12.06.2022) சிகரம் : 103



# கோத்தா+ரணில்: அசுத்தக் கூட்டா?

○ நிலாந்தன்

தனது பிள்ளைகள் மூன்று நாள்களாகப் பட்டினியில் வாடுவதைக் கண்டு, சகித்துக் கொள்ளமுடியாத, தாயொருவர் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவமொன்று வெல்லவாய பகுதியில் இடம்பெற்றுள்ளது. தந்தைக்கு நிரந்தரத் தொழில் இல்லை. வேறு வருமான வழிகளும் இல்லை. இதனால்,அந்தக்குடும்பம் சுமார் 3 நாள்களாக நீரை மட்டுமே அருந்தி உயிர்வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இது முதலாவது செய்தி.

வெலிகேபொல, பிரதேசத்தில் கிராமத்தில் ஒரு வறிய பெண் நோயுற்ற தனது பிள்ளைக்கு உணவுக்கு எதுவும் இல்லை என்பதால் அருகிலுள்ள உறவினருக்குச் சொந்தமான ஈரப்பலா மரத்தில் காயொன்றைப் பறித்து 100 ரூபாய்க்கு விற்றுள்ளார். அந்தப்பணத்தில் 500 கிராம் அரிசியை வாங்கியுள்ளார். ஈரப்பலா பறிக்கப்பட்டதை அறிந்த உறவினர், கோபமுற்று அந்தத்தாயைத் தாக்கியுள்ளார். இது இரண்டாவது செய்தி.

கதிர்காமத்தில், மூன்று பிள்ளைகளின் தாயொருவர், ஒரு கிலோ அரிசி, 250 கிராம் சீனி, 200கிராம் கருவாடு மற்றும் பிஸ்கட் என்பவற்றை வாங்கிக் கொண்டு வீடு திரும்பியுள்ளார். வழியில்,மீன் வியாபாரியொருவர் சைக்கிளில் வந்துள்ளார். சைக்கிளை நிறுத்தி, மீன் வாங்கியுள்ளார். அப்பொழுது, உணவுப்பொருள்கள் இருந்த பையை தரையில் வைத்துள்ளார்.மீனை வாங்கிக்கொண்டு, பையைப் பார்த்தபோது, பையைக் காணவில்லை. பையை யாரோ திருடிவிட்டார்கள். இது மூன்றாவது செய்தி.

தொடரும் உணவுத்தட்டுப்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்து வருவதாக கொழும்பு 'லேடி ரிட்ஜ்வே' சிறுவர் மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா கவலை வெளியிட்டுள்ளார். அண்மைய நாள்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 53 குழந்தைகளில் 11 பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு உள்ளது என்றும், அவர்களில் நால்வருக்கு கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அறிகுறிகள் தென்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது நாலாவது செய்தி.

கடந்த 31ஆம் திகதி 'சவுத் சைனா மோர்னிங் போஸ்ற்' என்ற இணைய ஊடகத்தில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதில் பெண்கள் மாதவிடாய் காலங்களில் அணியும் சுகாதாரப் பாதுகாப்பு நப்கின்களின் விலை அதிகரித்த காரணத்தால் பாடசாலைக்குச் செல்லும் மாணவிகள் அவதிப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. மாதவிடாய் காலங்களில் பள்ளிக்கூடம் செல்வதை தாங்கள் தவிர்ப்பதாக மாணவிகள் தெரிவித்திருக்கிறார்கள். இறக்குமதி செய்யப்படும் நப்கின்களுக்கு அரசாங்கம் 58 வீத வரி அறவிவிடுகிறது. இதனால் வெளிநாட்டு நப்கின்களை வாங்க முடியாத ஒரு நிலைமை. வறிய பெண்கள் பெருமளவுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நப்கின்களைப் பயன்படுத்தப்படுவதாகவும், ஆனால் அவற்றின் விலையும் அதிகரித்திருப்பதால் பல குடும்பங்கள் அவற்றுக்காக காசைச் செலவழிக்க முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. நப்கினா ? சாப்பாடா? என்று கேட்டால் சாப்பாடுதான் முக்கியம் என்று பல குடும்பத்தலைவிகள் கருதுவதாகத் தெரிகிறது. இதனால் நப்கின்கள் இல்லாத காரணத்தால் பல மாணவிகள் பள்ளிக்கூடம் வருவதில்லை என்றும் அந்தக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மிகவறிய பெண்கள் விலை கூடிய நப்கின்களை வாங்குவதற்கு பதிலாக சீலைத் துண்டுகளைப் பயன்படுத்துவதாகவும் அது சுகாதாரமற்றது, நோய்த் தொற்றுக்கான காரணிகளில் ஒன்று என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. இது ஐந்தாவது செய்தி.

கடந்தமாதம் 28ஆம் திகதி 'தெ டெலிகிராப்' இணையத்தளத்தில் வெளிவந்த மற்றொரு கட்டுரையில், ஆடைத் தொழிற்துறையைச் சேர்ந்த ஒரு தொகுதி பெண்கள் வேலையின்மை,வறுமை காரணமாக பாலியல் தொழிலை நோக்கிச் செல்வதாகக் கூறப்பட்டுள்ளது. இது ஆறாவது செய்தி.

இதுதான் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னரான நாட்டின் நிலை. எனினும் அவர் பதவியேற்ற பின் ஒரு விடயத்தில் மிகவும் தெளிவாகக் காணப்படுகிறார். நாட்டில் எந்தப் பொருள்? எவ்வளவு கையிருப்பில் உண்டு? எவ்வளவு நாடுக்குத் தேவை? எவ்வளவு கடனாகக் கிடைக்கும்? எப்பொழுது எந்தப் பொருளுக்குத் தட்டுப்பாடு வரும்? எப்பொழுது பஞ்சம் வரலாம்? போன்ற எல்லா விவரங்களையும் அடிக்கடி வானிலை அறிவித்தலில் கூறுவதுபோல வெளிப்படையாகச் சொல்லி வருகிறார். அதனால்தான் ஒரு முஸ்லிம் நண்பர் முகநூலில் பின்வருமாறு எழுதினார்.

ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை கிரிக்கட் அணித்தலைவராக நியமித்தால்....

"அடுத்து வரும் போட்டிகளில் எமக்கு வீசுவதற்கு ஒரு பஞ்சுக் கட்டி கூடக் கிடைக்காது"

"இனி வரும் ஆட்டங்களில் இடை வேளையில் மூன்று மிடறு தண்ணீருக்குப் பதிலாக இரண்டு மிடறு தண்ணீரையே பருக வேண்டிவரும்"

"ஒக்ரோபர் மாதம் வரும்போது கிரிக்கட் மட்டைக்குப் பதிலாக நாங்கள் தென்னம் மட்டையே பயன்படுத்த வேண்டிவரும்"

"உக்ரைன் வீரர்களுடன் கிரிக்கட்டும் அதே விக்கெட்டால் ரஷ்ய வீரர்களுடன் கிட்டிப்புள்ளும் விளையாடுங்கள்..."

என்றுதான் அவர் சொல்லிக் கொண்டிருப்பார். இதுதான் அந்தப் பதிவு. ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கும் புள்ளிவிவரங்கள் உண்மையோ, பொய்யோ அவர் நாட்டின் நிலைமையை ஒளிவு மறைவின்றி மக்களுக்குத் தெரியப்படுத்துகிறார் என்ற ஒரு தோற்றத்தை வெற்றிகரமாகக் கட்டியெழுப்பிவிட்டார். ஆனால் இது மக்களுக்குப் பீதியூட்டும் நடவடிக்கை என்றும், இதனால் வர்த்தகர்கள் பொருள்களைப் பதுக்குகிறார்கள் என்றும் ஒரு விமர்சனம் வருகிறது.

ஆனால் இதுவிடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேறு உள்நோக்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. நாட்டின் நிலைமையை வெளிப்படையாக சொல்வதன்மூலம் மக்களை அவர் நெருக்கடிக்குத் தயார்படுத்துகிறார். மக்களை உஷாராக இருக்குமாறு எச்சரிக்கிறார்.

அதேசமயம் இந்த நெருக்கடிகளுக்குத் தான் பொறுப்பில்லை என்பதையும் மறைமுகமாக உணர்த்தப்பார்க்கிறார். அவர் கூறுவது போல விடயங்கள் நடக்கும்பொழுது அவர் உண்மையைத் தான் சொன்னார், எதையும் மறைக்கவில்லை என்ற உணர்வு மக்கள் மத்தியில் பரவும். இது தன்னைப் பலப்படுத்த உதவும் என்று அவர் நம்புகிறாரா? வியட்நாம் விடுதலைப் போராட்டத்தின் தலைவர் கோசிமின் கூறிய "மக்களிடம் செல்லுங்கள், மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள், மக்கள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தருவார்கள்" என்ற மேற்கோளை ரணில் எப்படி விளங்கி வைத்திருக்கிறார்?

> **ரணில் விக்கிரமசிங்கவிடம் வேறு உள்நோக்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. நாட்டின் நிலைமையை வெளிப்படையாக சொல்வதன் மூலம் மக்களை அவர் நெருக்கடிக்கு தயார்ப்படுத்துகிறார். மக்களை உஷாராக இருக்குமாறு எச்சரிக்கிறார்.**

அவர் பிரதமராக வந்தபின் நாட்டுக்கு உள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் நம்பிக்கைகளை கட்டியெழுப்ப வேண்டிய ஒருவராகக் காணப்படுகிறார்.

நாட்டுக்குள் எவ்வாறு நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பினாரோ இல்லையோ நாட்டுக்கு வெளியே படிப்படியாக நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பி வருகிறார் என்பது உண்மை. ரூபாவை மிதக்க விட்டமை, சில பொருள்களுக்கான வரியை அதிகரித்தமை,வட்டி வீதத்தைக் கூட்டியமை, விலைக்கட்டுப்பாட்டை நீக்கியமை, அரசு செலவினங்களைக் குறைத்தமை, சில அமைச்சுக்களின் செயலர்களாக இருந்த படைத்துறை பிரதானிகளின் இடத்துக்கு சிவில் அதிகாரிகளை நியமித்தமை, அமெரிக்காவினால் பயணத்தடை விதிக்கப்பட்ட சவேந்திர சில்வாவின் பதவியை மாற்றியமை, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை இடைநிறுத்தி, குற்றஞ்சாட்டப்பட்ட சிலரை மீண்டும் கைதுசெய்தமை, பஸில் ராஜபக்சவை நாடாளுமன்றத்திலிருந்து அகற்றியமை போன்ற மாற்றங்களோடு, முக்கியமாக ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் விதத்தில் 21 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரும் ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறார்.

மேற்கண்ட மாற்றங்களின்மூலம் நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக இயங்குகிறது என்ற ஒரு தோற்றத்தையும், நாட்டில் இராணுவமய நீக்கம் நிகழ்கிறது என்ற ஒரு தோற்றத்தையும், ராஜபக்சவின் அதிகாரம் குறைக்கப்படுகிறது என்று ஒரு தோற்றத்தையும் கட்டியெழுப்புவதே கோத்தா+ரணில் கூட்டின் நோக்கமாகும். அப்படி ஒரு தோற்றம் கட்டியெழுப்பப்பட்டால் மேற்கு நாடுகளையும் ஐ.எம்.எப். போன்ற சர்வதேச நிறுவனங்களையும் கவரலாம் என்று ரணில் அரசாங்கம் சிந்திக்கிறது.

ஒருபுறம் இந்தியா நாட்டுக்கு 'சேலைன்' ஏற்றிக்கொண்டிருக்கிறது. இந்தியா திட்டமிட்டு சிறுகச்சிறுக உதவிகளைச் செய்து வருகிறது. உடனடியாகப் பெருமெடுப்பில் உதவிகளைச் செய்யாமல், 'சேலைன்' ஏற்றுவது போல துளித்துளியாக இந்திய உதவிகள் கிடைக்கின்றன. இதன்மூலம் இந்தியா தனது அருமையை உணர்த்தமுற்படுகிறது. அதேசமயம், பெருமெடுப்பிலான உதவிகள் அடுத்தடுத்த மாதங்களில் ஐ.எம்.எப். பிடமிருந்து கிடைக்கலாம் என்று ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்க்கிறார்.

குறிப்பாக 21 ஆவது திருத்தத்தின்மூலம் ஐ.எம்.எப், மேற்கு நாடுகள், எதிர்க்கட்சிகள், காலிமுகத்திட

4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தில் வெளிப்பட்ட இந்திய வெறுப்பும் ரஷ்ய ஆதரவும்!



## பசி பட்டினிக்கு மத்தியிலும் வெளிக்கிளம்பும் ஈழத்தமிழர் எதிர்ப்பு

○ அ.நிக்ஸன்

இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள பொருளாதார, விலைவாசி உயர்வுப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அமெரிக்க-இந்திய அரசுகள் தமது புவிசார் நலன்களைப் பெறும் திட்டங்களையே செயற்படுத்த முற்படுகின்றன என்பதை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்களின்போது அறிந்து கொள்ள முடிந்தது. இலங்கையின் புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திடம் கையளிக்கும் யோசனைக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நேரடியாக எதிர்ப்பு வெளியிடவில்லை. ஆனாலும் அதானி நிறுவனம் தொடர்பாக சஜித் பிரேமதாஸாவின் கட்சி முன்வைக்கும் விமர்சனம், இந்தியாவை இலங்கைக்குள் அனுமதிக்கக் கூடாது என்ற செய்தியைப் பகிரங்கப்படுத்துகின்றது.

சஜித் அணியோடு சேர்ந்து இயங்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிட்ட கருத்தும், இந்தியா தொடர்பான அவதானத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்ற தொனியில் அமைந்திருந்தது. மின்சக்தித் திட்டங்கள் குறித்த திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அரசதரப்பு மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பலர், அதானி நிறுவனம் தொடர்பான தமது சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதொரு சூழலில், இந்தியா மாத்திரமே இலங்கையில் புதுப்பிக்கத்தக்க சக்தி வள செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் விளக்கமளித்திருந்தார். உரிய முறையில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்றால் முழு இலங்கையும் இருளில் மூழ்கும் ஆபத்து ஏற்படும் என ரணில் எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார். ஆனாலும் அதானி நிறுவனத்துக்கு வழங்கிய பத்து மெகாவோட்ஸுக்கும் அதிகமான அபிவிருத்திச் செயற்திட்டம் விலைமனுக் கோரலுக்கமைய முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், ஆனால் விலைமனுவைக் கோராமலேயே அதானி நிறுவனத்துக்குக் கையளிக்க அரசாங்கம் இணங்கியிருப்பதாகவும் ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார். அதுமாத்திரமல்ல ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய நாடுகள் உட்பட பல்வேறு வல்லரசு நாடுகள் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் குறித்து அவதானம் செலுத்தியுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் விஜித ஹேரத் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்தச் சந்தேகங்களை ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார். அத்துடன் விலைமனுக்கோரல் மூலம் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முடியாது என்றும். அப்படியானால் அது தோல்வியடையும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

ஆகவே இந்திய நிறுவனத்திடம் மின்சக்தி எரிசக்தித் திட்டத்தைக் கையளிக்கும் முயற்சிக்குக் கடும் எதிர்ப்பு வெளியிடப்படுவதையே கடந்த ஒன்பதாம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் உலகத்துக்குப் பகிரங்கப்படுத்தியிருந்தது. இதன் பின்னணியிலேதான் புதன்கிழமை நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை மின்சாரசபைப் பொறியியலாளர்கள் அறிவித்திருந்தனர் போலும். ஆனால் புதன்கிழமை நள்ளிரவு முதல் மின்சார சேவையை அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்தார்.

அன்றிரவு அவசர அவசரமாக மின்சாரசபைப் பொறியியலாளர்கள் சங்க உறுப்பினர்களையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சந்தித்து உரையாடியிருந்தார். அதன் பின்னர் பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாகக் கைவிடுவதாக சங்கமும் அறிவித்திருந்தது. இந்த நிலையில் வியாழக்கிழமை இடம்பெற்ற மின்சக்தி எரிசக்தித் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் நிகழ்த்திய உரை இந்திய எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது. விலைமனுக் கோரல் தொடர்பான விதிமுறைகளுக்கு மாறாக இலங்கையில் நரேந்திர மோடிக்கு வழி சமைக்கும் வகையிலேயே அதானி நிறுவனத்துக்கு மின்சக்தி எரிசக்தித் திட்டம் வழங்கப்படுவதாக விஜித ஹேரத் வெளிப்படுத்திய கருத்து இந்திய எதிர்ப்பைப் புடம் போட்டுக் காண்பித்துள்ளது.

பத்து மெகாவோட்ஸுக்கு குறைவான மின்சக்தித் திட்டத்தை விலைமனுகோரல் இன்றி முன்னெடுக்கலாம். ஆனால் பெரும் திட்டத்தை விலை மனுக்கோரலுக்கு அமையவே முன்னெடுத்திருக்க வேண்டுமென்ற சஜித் பிரேமதாஸவின் கருத்தும், இந்திய எதிர்ப்பை மறைமுகமாகவே பகிரங்கப்படுத்தியிருக்கிறது. எரிபொருள், மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ளது. பொருளாதார நெருக்கடியினால் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கொள்கையில் அரசியல் தலையீடுகளின் அதிகரிப்பே, இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்ற கருத்தை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகிய சர்வதேச நிதி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த நிலையில், இலங்கைக்கு வருமானம் ஈட்டக்கூடிய அல்லது, செலவுகளைக் குறைக்கக்கூடிய உள்ளூர்த் திட்டங்களை வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள வேண்டுமென்ற பரிந்துரைகள் இலங்கைக்கு வழங்கப்படுகின்றன. சர்வதேச நிதி நிறுவனங்கள் முன்வைக்கும் பரிந்துரைகளை ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் முழுமையாக வெளிப்படுத்தவில்லை. ஆனால் இந்தியா தவிர்ந்த வேறெந்தவொரு நாடுகளும் இலங்கைக்குத் தற்போதைய சூழலில் உதவியளிக்கத் தயாராக இல்லையென்று கூறுவதன் மூலம், அமெரிக்க - இந்திய புவிசார் அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களை ரணில் விக்கிரமசிங்க உள்வாங்குகிறார் என்றே பிரதான எதிர்க்கட்சிகள் நம்புகின்றன.

ஆனால் இங்கே வேடிக்கை என்னவென்றால், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தற்போது தனிக் கட்சியாகவும் புதிய கட்சியாகவும் செயற்பட்டாலும், அதன் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய அங்கத்தவர்களே. ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி என்பது ஆளும் கட்சியாகப் பல தடவை இருந்தது. அப்போதெல்லாம் அமெரிக்க- இந்திய நலன்களுக்கு ஏற்பவே ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டுமிருந்தது. ஆக சஜித் பிரேமதாஸவின் தந்தையாரான ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மாத்திரமே ஐக்கிய தேசியக் கட்சி இந்தியாவுக்கு எதிரான செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருந்தது. குறிப்பாக 1990 இல் வடக்கு, கிழக்கில் இருந்து இந்திய இராணுவத்தை வெளியேற்றியது பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிதான்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க 1994 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர், மீண்டும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்துக் கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சி பின்பற்றியிருந்தது. அதாவது இந்தியா ஊடான அமெரிக்கச் சார்புக் கொள்கை. 2002 இல் ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றபோது, நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போதுகூட அமெரிக்க - இந்திய அரசுகளை மையப்படுத்திய வெளியுறவுக் கொள்கை ஒன்றையே ரணில் விக்கிரமசிங்க முன்னிலைப்படுத்தியிருந்தார்.

அவருடைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த மிலிந்த மொறொகொட (தற்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர்) அமெரிக்கச் சார்பு நிலைப்பாட்டுடன் செயற்பட்டுமிருந்தார். சமாதானப் பேச்சுக்காலத்தில் புதுடில்லிக்குச் சென்று சமதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அனைத்து விடயங்களையும் விவரமாகக் கூறிய பின்னரே கொழும்புக்கும் வன்னிக்கும் வந்து செல்வார். மீண்டும் புதுடில்லிக்குச் சென்று விளக்கமளித்த பின்னரே தனது நாடான நோர்வேக்குப் பயணம் செய்வார் எரிக் சொல்ஹெய்ம். இந்த விடயத்தை சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சொல்ஹெய்மே ஒளிவு மறைவின்றிச் சொல்லியுமிருந்தார்.

ஆனால் 2015இல் அமெரிக்க - இந்திய அரசுகளின் ஆதரவுடன் மீண்டும் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, புவிசார் அரசியல் நோக்கிலான அமெரிக்க இந்தியத் திட்டங்களுக்கு மாறாக சீனாவுடன் நல்லுறவைப் பேணியிருந்தார். குறிப்பாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 90 வருடங்களுக்குச் சீனாவுக்குக் குத்தகைக்குக் கொடுத்தது ரணில்தான். அத்துடன் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையை அபிவிருத்தித் திட்டத்துக்கான ஒப்பந்தத்தைச் செயற்படுத்த அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் விரும்பவில்லை. 2020 நவம்பரில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோத்தாபய ராஜபக்ச அந்த ஒப்பந்தத்தையே ரத்துச் செய்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ரணில் விக்கிரமசிங்க கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் பிரதமராகப் பதவியேற்றிருக்கிறார். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே இந்தியா இலங்கைக்கு இரண்டு பில்லியன் நிதியுதவி வழங்கியிருந்தவொரு சூழலில், கடந்த மார்ச் மாதம் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடியினால் இதுவரை நானூற்றி ஐம்பது மில்லியன் வரை எரிபொருளாகவும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களாகவும் இலங்கைக்கு வழங்கியுள்ளது. மேலும் இரண்டு பில்லியன் வரை இந்தியா இலங்கைக்குக் கடன் வழங்கவுள்ளது. அதனைவிட மேலும் பல நன்கொடைகளும் அத்தியாவசிய மருந்துப்பொருள்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட மின்சக்தி எரிசக்தி உற்பத்திகளுக்கான அனுமதிக்கு எதிர்க்கட்சிகளும் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியும் கடும் எதிர்ப்பு வெளியிடுகின்றன. ஆனால் இந்தக் கட்சி களில் உள்ள குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் மாத்திரமே தமது எதிர்ப்பை நாடாளுமன்ற விவாதத்தில் பகிரங்கமாகச் சொல்லியிருக்கின்றன.

ஆனாலும் இவ்வாறு எதிர்ப்பு வெளியிட்ட உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களும், அந்தக் கட்சிகளின் [illegible] உறுப்பினர்களும் அதானி நிறுவனம் தொடர்பாக [illegible] கருத்துக்களை [illegible]வில்லை. தங்கள் கட்சிகளின் உறுப்பினர்கள் அதானி நிறுவனம் தொடர்பாக வெளியிடும் கருத்துக்களை இவர்கள் மறுக்கவுமில்லை.

அதுவும் நாடாளுமன்ற விவாதத்தில் கூறிய இந்தக் கருத்துக்கள் முக்கியமானவை. ஆகவேதான் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் சிங்கள அரசியல் கட்சி உறுப்பினர்களுடைய இந்திய எதிர்ப்பு என்பது பட்டவர்த்தனமாகவே புலப்படுகின்றது. 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தைத் கிழித்தெறிந்து எதிர்ப்பு வெளியிட்டதில் இருந்து இன்றுவரை அந்த எதிர்ப்பு உணர்வு மாறுபடாத முறையிலும், 2009 இன் பின்னரான ஈழத்தமிழர் விவகாரம் மற்றும் தற்போதைய இலங்கையை நோக்கிய புவிசார் அரசியல் பின்னணியை மையமாகக் கொண்டும் அந்த எதிர்ப்பு உணர்வு வெளிக்கிளம்புகிறது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கான நகல் வரைவில் தேசியப் பெறுகை ஆணைக்குழுவை மீண்டும் ஸ்தாபித்து விலை மனுக்கோரல் முறைமை ஊடாக அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்ற யோசனை எதிர்க்கட்சி உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்டிருப்பதுகூட இந்திய எதிர்ப்புணர்வு என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஊழல் மோசடிகளை தவிர்ப்பதற்காகவே இந்த யோசனை என்று நியாயப்படுத்தினாலும், அதானி நிறுவனத்துக்கு மின்சக்தி எரிசக்தித் திட்டத்தை விலைமனுவைக் கோராமல் வழங்கப்பட்டதை எடுத்துக் காண்பித்தே தேசிய பெறுகை ஆணைக்குழு யோசனை முன்மொழியப்பட்டிருக்கின்றது என்பது கண்கூடு.

இந்தப் பின்புலத்திலேதான், ரஷ்யாவிடமிருந்து எரிபொருள்களைப் பெறுவதற்கான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்துத் தற்போது சுயாதீனமாகச் செயறபடும் ஒன்பது கட்சிகளின் தலைவர்கள் கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர். விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய விடுதலை முன்னணி , பிவித்துரு ஹெல உறுமய உட்பட ஒன்பது கட்சிகள் எரிபொருள்களை நீண்ட கால அடிப்படையில் பெறுவதற்காக ரஷ்யாவுடன் அரசாங்கம் இரு தரப்பு பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

ரஷ்யாவுடன் பேச்சுகளை ஆரம்பிக்க அரசாங்கம் தயங்கினால் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள்களைப் பெற்று எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வை காணவேண்டும் என வற்புறுத்தி மக்களை திரட்டிப் போராட்டங்களை நடத்தத் தயாராக இருப்பதாகவும் ஒன்பது கட்சிகளும் எச்சரிக்கை விடுத்துமுள்ளன. அதுவும் கடன் அடிப்படையில் இந்தியா தேவையான எரிபொருள்களை இலங்கைக்கு வழங்கிக் கொண்டிருக்கும் சூழலில், ஒன்பது கட்சிகளும் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளமையானது இந்திய எதிர்ப்பை நேரடியாகவே வெளிப்படுத்துகின்றது.

எரிபொருள்களைப் பெற்றும் நோக்கில் இலங்கை விடுத்த கோரிக்கைக்கு ரஷ்யா சாதகமாகப் பதிலளித்துள்ளதாக அறிந்துள்ளதாகவும், ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்பது தெரியவில்லை எனவும் ஒன்பது கட்சிகளும் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றன.

ரஷ்ய - உக்ரைன் போர் நடைபெறும் நிலையிலும், ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடம் இருந்து ஒரு மில்லியன் பரல்களை கொள்வனவு செய்வதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஒன்பது கட்சிகளின் தலைவர்களும் ரஷ்யாவுடன் இலங்கை பேச்சு நடத்த வேண்டுமென வற்புறுத்தியுள்ளன.

ரஷ்ய-உக்ரைன் போருக்கு முன்னரே ரஷ்ய - இந்தியா உறவு மரபுரீதியானது. இந்த உறவின் மூலமே உக்ரைன் போருக்குப் பின்னரான நிலையில் ரஷ்யா ஊடாக சீனாவுடன் இந்தியா மறைமுகமாக நட்பைப் பேணவும் ஆரம்பித்துள்ளது. இதனால் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே மறைமுகப் பனிப்போரும் மூண்டுள்ளது. ஆனாலும் ஈழத்தமிழர்களை மையப்படுத்திய இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் ஒரே நிலைப்பாட்டில்தான் தொடர்ந்தும் செயற்படுகின்றன.

அந்த நிலைப்பாடு என்பது ஈழத்தமிழர்களுக்குச் சாதகமானது மல்ல. இருந்தாலும் அந்த அமெரிக்க-இந்திய நிலைப்பாடு ஈழத்தமிழர்களுக்குச் சாதமானது என்று கருதி அச்சமடையும் சிங்கள அரசியல் கட்சிகள், ஈழத்தமிழர் விவகாரத்தை மையப்படுத்தியே தமது இந்திய எதிர்ப்புணர்வைப் பஞ்சம், பசி போன்ற நெருக்கடிக்கு மத்தியிலும் பகிரங்கமாகவும் துணிவோடும் வெளிப்படுத்தியிருக்கின்றன. எனவே 2009 க்குப் பின்னரான சூழலிலும் சிங்கள ஆட்சியாளர்களை மாத்திரம் மலையாக நம்பும் இந்தியா இதனைப் புரிந்துகொள்ளுமா? ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: சில குறிப்புக்கள்


○ பா. துவாரகன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்(பொறுப்பு)
யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகம்
யாழ்.போதனா மருத்துவமனை



மருத்துவர் ஸ்கடர் பயணித்த பாய்மரக் கப்பல் (மாதிரி உரு)

மானுடம் மேம்படவேண்டும் என்ற சிந்தனையும், சிந்தனையைச் செயற்படுத்தும் திடமும், தியாக மனப்பான்மையும் உள்ள, எண்ணிக்கையில் மிகக் குறைவான மனிதர்களே உலக வரலாற்றை மாற்றியமைக்கிறார்கள்.
உலகக் கிறிஸ்தவ மிசன்களது வரலாற்றில் முதல் மருத்துவக் கலாநிதியாக விளங்கியவர் டேவிற் லிவிங்ஸ்டன். இவர் ஆபிரிக்காவில் மருத்துவராகப் பணியாற்றச் செல்ல 20 வருடங்களுக்கு முன்பே மருத்துவக் கலாநிதி ஜோன் ஸ்கடர் மற்றும் அவரது மனைவி திருமதி ஹரியற் வோட்டர்பரி ஸ்கடர் இருவரும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து தமது மிசன் பணியை ஆரம்பித்தனர்.

**யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய முதல் மருத்துவர் : ஓர் அமெரிக்கர்!**

உலகில் முதன்முதல் மேலைத்தேச மிசனரி மருத்துவமனையைப் பண்டத்தரிப்பிலே ஆரம்பித்து மருத்துவராகப் பணியாற்றிய ஜோன் ஸ்கடர் (1793.09.03 - 1855.01.13) இலங்கையின் வடபகுதியில் (யாழ்ப்பாணத்தில்) கடமையாற்றிய முதலாவது தகுதிவாய்ந்த மருத்துவர் மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர் என்ற கௌரவத்துக்கும் உரியவர். அமெரிக்க மருத்துவரான ஸ்கடருக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரிட்டிஷ்காரரது படைகளுடன் கடமையாற்றிய மருத்துவர்கள் முறைப்படி பல்கலைக் கழகத்தில் மருத்துவம் பயின்று மருத்துவர்களானவர்கள் அல்லர். அமெரிக்காவில் உள்ள நியூஜெர்சி மாநிலத்தில் பிரிஹோல்ட் என்னும் கிராமத்தில் 1793 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி பிறந்த ஸ்கடர், 1811 இல் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்திலும், 1813 இல் நியூயோர்க்கிலுள்ள மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர்கள் கல்லூரியிலும் பயின்று தனது மருத்துவக் கல்வியைப் பூர்த்தி செய்து நியூயோர்க்கில் மருத்துவராகப் பணியாற்றினார்.


மருத்துவர் ஸ்கடர் மற்றும் ஹரியற் வோட்டர்பரி ஸ்கடர்




ஓர் இரவு; நோயாளி ஒருவரைப் பார்வையிட்ட வேளை மேசையில் இருந்த துண்டுப் பிரசுரம் ஸ்கடரது கவனத்தை ஈர்த்தது. 'உலகில் பல மில்லியன் மக்கள் இன்னமும் கிறிஸ்துவினது நற்செய்தியை அறியாது உள்ளனர்; துன்பத்தில் வாழ்கின்றனர் 'என்ற வாசகம் அவரை வருத்தியது. 'இறை அழைப்பை ஏற்று உடலுக்கும் ஆன்மாவுக்கும் சுகமளிக்கும் பணியை நான் ஏன் செய்யக் கூடாது? உலகில் துன்புறும் மக்களுக்கு நோய் தீர்க்கும் மருத்துவராகவும் மதகுருவாகவும் பணியாற்ற வேண்டும் 'என்ற சிந்தனை அவருள் வியாபித்தது.

**அத்திலாந்திக் சமுத்திரத்தை கடக்கும் ஆபத்தான கடற்பயணம்!**

ஸ்கடர் நியூயோர்க்கில் அனைத்து வசதிகளுடனும் புகழுடனும் மருத்துவராகப் பணிபுரிந்து வந்தார். நியூயோர்க்கில் உள்ள வசதி வாய்ப்புக்கள், தனக்குக் கிடைத்த புகழ் எல்லாவற்றையும் துறந்து அமெரிக்க மிசனரியில் இணைந்து தூர கிழக்குத் தேசம் சென்று ஏழைகளுக்கு மருத்துவம் அளிக்க ஆவலுற்றார். ஸ்கடரது மருத்துவ மிசன் பயணத்தை அவரது தந்தையார் ஜோசப் ஸ்கடர் ஏற்றுக்கொள்ளவில்லை. தாயாரும் சகோதரர்களும் ஸ்கடருக்கு ஆதரவாக இருந்தார்கள். அமெரிக்க மிசனரியினரின் வெளிநாட்டுப் பணியகத்தினரால் 26 வயது இளைஞனான ஸ்கடர் அவரது மனைவி திருமதி ஹறியற், 2 வயது மகள் மரியா கத்தரின் மற்றும் பணிப்பெண் அமி ஆகியோருடன் மேலும் 3 இளம் தம்பதியினர் "இந்துஸ்" என்ற பாய்க்கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். இக்கப்பல் 1819 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதி போஸ்டன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது. 4 மாதக் கடற்பயணத்துக்குப் பின்னர் 1819 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20 ஆம் திகதி கொல்கொத்தாவை வந்தடைந்தனர். இந்தியாவில் ஸ்கடரது மகள் நோய்வாய்ப்பட்டு தீவிர வயிற்றுப் போக்கினால் இறந்து போனார்.

## மருத்துவர் ஜோன் ஸ்கடர் (Rev. Dr. John Scudder M.D., D.D.)

**அமெரிக்க மருத்துவ மிசனரியினரின் யாழ்ப்பாண வருகை**

1816 இல் அமெரிக்க மிசனரியினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது தெல்லிப்பழையிலே உத்தியோகப்பற்றற்ற மேலைத்தேச அலோபதி மருத்துவமனையை ஆரம்பித்தனர். எனினும் அங்கு தகுதிவாய்ந்த மருத்துவர்கள் எவரும் கடமையாற்றவில்லை.
கிழக்கிந்தியக் கம்பனியினால் அக்காலப்பகுதியில் அமெரிக்க மிசனரியினருக்கு இந்தியாவில் பணியாற்ற அனுமதி வழங்கப்படாத காரணத்தால் மருத்துவர் ஸ்கடர் கொல்கொத்தாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணமானார்.
ஸ்கடர் தம்பதியினர் 1819 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி தெல்லிப்பழையை வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து பண்டத்தரிப்புக்குச் சென்றனர்.
ஸ்கடர் உலகின் முதல் மிசனரி மருத்துவமனையை 1820 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி பண்டத்தரிப்பிலே ஆரம்பித்தார்.
ஸ்கடர் தம்பதியினருக்கு மரியாவை அடுத்துப் பிறந்த 2 ஆவது பெண் குழந்தையும் பிறந்த சில நாள்களிலே இறந்து போனது. பின்னர் ஓர் ஆண்குழந்தையும் இறந்து போனது. அடுத்தடுத்து நிகழ்ந்த குழந்தைகளது இறப்பு இருவரதும் இதயத்தை நொறுக்குவதாக இருந்தது.
ஸ்கடர் தம்பதியினருக்கு மொத்தமாக 13 பிள்ளைகள் இருந்தனர். இவர்களில் மூவர் குழந்தைகளாக இருந்த போதும் ஒருவர் நீரில் மூழ்கியும் இறந்து போயினர். பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதும் ஸ்கடரும் திருமதி ஹரியற் ஸ்கடரும் யாழ்ப்பாணத்தில் இருந்து சேவைசெய்ய திடசங்கற்பம் பூண்டு ஏறத்தாழ 16 ஆண்டுகள் 1936 வரை யாழ்ப்பாணத்தில் பணியாற்றினர். கிறித்துவின் செய்தியைப் பரப்புவதும் கல்வியறிவூட்டுவதும் அமெரிக்க மிசனரியினரது பணிகளில் பிரதானமாக விளங்கியது.
யாழ்ப்பாணத்தில் ஸ்கடர் தம்பதியினர் பெண்களுக்குக் கல்வியறிவு ஊட்டியமை முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களது வீட்டில் 40 பிள்ளைகள் தங்கியிருந்து கல்விகற்றனர்; இப்பிள்ளைகளில் பலர் பெற்றோரை இழந்தவர்கள்.
பண்டத்தரிப்பிலே ஸ்கடர் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என தனித்தனியாகப் பாடசாலைகளை நிறுவினார். இவற்றைவிட யாழ்ப்பாணத்திலே 25 பாடசாலைகளை நிறுவுவதற்கும் உதவினார்.
1836 இல் அமெரிக்க மிசனரியினரின் வேண்டுகோளை ஏற்று இந்தியாவுக்குப் பயணமான ஸ்கடர் அங்கு சிலகாலம் பணியாற்றிய பின்னர் அமெரிக்காவுக்குப் பயணமானார். மருத்துவர் ஸ்கடரது பிள்ளைகளிற் சிலர் மருத்துவர்களாகவும், வேறு சிலர் அமெரிக்க மிசனரி மருத்துவர்களாகவும் பணியாற்றியுள்ளனர்.
இவரது பேர்த்தியான மருத்துவர் ஐடா சோபியா ஸ்கடர் (Dr. Ida S. Scudder) இன்று இந்தியாவில் முதல்தரமான மருத்துவமனைகளில் ஒன்றாக விளங்கும் வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரியை 1900 ஆம் ஆண்டு ஒரே ஒரு படுக்கை வசதியுடன் ஆரம்பித்தார்.


மருத்துவர்: ஜோன் ஸ்கடர் (ஓவியம்)
காப்புரிமை: யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகம் போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் ஆரம்பமான மருத்துவப் பணி**

மருத்துவர் ஜோன் ஸ்கடர் யாழ்ப்பாணத்தை அடைந்த போது இங்கு சித்த மருத்துவமே நடைமுறையில் இருந்தது. பல்வேறு காரணிகளால் சித்த மருத்தும் வளர்ச்சியடையவில்லை.
யாழ்ப்பாணத்தில் நோய் தொடர்பில் அறியாமையும் மூடநம்பிக்கையும் மிகுந்திருந்த காலப்பகுதியிலேயே மருத்துவர் ஸ்கடர் தனது மருத்துவமனையை பண்டத்தரிப்பில் நிறுவிப் பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை அளிக்க ஆரம்பித்தார்.

**ஸ்கடரது மருத்துவமனைக் காட்சி:** மண்ணினாற் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்ட மருத்துவமனைக்கு வெளியே ஒரு புறம் ஆண்கள் நடக்கவும் நிற்கவும் முடியாது நொண்டிக்கொண்டும், பெண்கள் திராணியற்றுச் சோர்ந்து போயும் காணப்பட்டனர்;
நொய்ந்து நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளும் இருந்தனர். அனைவரும் மிகுந்த பொறுமையோடு காத்திருந்தார்கள். முதலில் ஸ்கடர் வெளியே வந்து பைபிளைத் திறந்து நோயால் துன்பப்பட்டவர்கள் ஆறுதலடையும் வண்ணம் சுருக்கமாக உரையாற்றி தனது பிரத்தியேக அறைக்குச் செல்வார். அங்கே இன்னொருபுறம் வெளிநாட்லிருந்து வந்த வெள்ளைக்காரர் எவ்வாறு நோயைக் குணப்படுத்துகின்றார்? அவர் நோயைக் குணப்படுத்துகின்ற வல்லமையை அறிந்து கொள்வதில் ஆர்வம் மிக்க உள்ளூர் இளைஞர்களும் தங்களது முறை வரும்வரை காத்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் பரவிய வாந்திபேதி மற்றும் மஞ்சட்காமாலை நோய்களைக் கட்டுப்படுத்துவதில் மருத்துவர் ஸ்கடர் வெற்றிபெற்றார்.
அவர் சத்திரசிகிச்சை மேற்கொள்வதில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தார். சத்திரசிகிச்சையின்போது வழங்குகின்ற மயக்கமருந்துகள், குருதி மாற்றீடு, நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் எவையுமே அக்காலத்தில் பயன்பாட்டுக்கு வரவில்லை. மயக்கமருந்துகள் இல்லாத அந்தக் காலத்தில் ஸ்கடர் மேற்கொண்ட சத்திரசிகிச்சை பற்றிய குறிப்புக்கள் ஆச்சரியம் தருகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை ரவி

# மாணத்தி



39

பூங்கொடிக்கு சேட்டைப்பார்க்க கவலையாக இருந்தது. தோய்க்கவும் அழுக்குப் போகவில்லை. இருதடவைகள் சோப் போட்டு ஊறவைத்து கல்லில் கும்மிப்பார்த்தாள். ஓரளவு போயிருந்தது. இரண்டு நாள் வரும் மழைபெய்து.குன்றில் வற்றாமல் நின்ற சகதியில் விழுந்தான். வாழைக்குலைகாரப் பொடியன் சைக்கிளால் மோதி விட்டான். அவனில் பிழையில்லை. நிருபன் திடீரென குறுக்கே ஓட. சைக்கிளால் மோதினான். சைக்கிளோடு சேர்ந்து வாழைக்குலைகாரப் பொடியனும் விழுந்தான். அவன் எழுந்து முதலில் நிருபனைத்தான் தூக்கினான். நிருபன் அழவில்லை. முழங்காலில் கல் அண்டியிருந்தது. அவனைத்தூக்கி அணைத்து. கால்களைத் துடைத்து விட்டு. பக்கத்துக் கடையில் ரொபிகள் வாங்கிக் கொடுத்தான். நிருபன் ஈரக்காற்சட்டையோடு வீட்டுக்கு வந்தான்.

அவன் இரண்டு வாழைக்குலைகளைக் கட்டிக்கொண்டு வந்தான். ஒன்று பழங்கள். மற்றது காய். பழக்குலை விழுந்து நசிந்து விட்டது. அவன் ரொபிகளை கடையில் வாங்க மாடுகள் வாழைக் குலையைத் தின்றதாக நிருபன் சொன்னான். அவன் சொன்னதை நினைத்தபடி சேட்டைக் கொடியில் போட்டாள். குப்பையில் கழித்து விட்ட சேட்டை போய் எடுத்து அதனைத் தோய்த்தாள்.

தெருவில் மீன்காரன் கோர்ண் அடித்துக்கொண்டு போனான். பை ஒன்றை எடுத்துக்கொண்டு வெளியில் போனாள். மீன்காரனைக் காணவில்லை. ஐஸ்பழக்காரன் வந்தான். அவன் கிட்டவந்ததும் கோணடித்தான். அவள் கோண் சத்தம் கேட்டதும் மீன்காரன் என வெளியில் வந்தாள். யாழ்ப்பாணத்தில்தான் மீன்காரர்கள் கோணடிப்பார்கள். இங்கு ஐஸ்பழக்காரன் கோணடிப்பதை இன்றுதான் கண்டாள். அவள் நடந்து சந்தைக்கு மீன்வாங்கப் போகவேணும். சோற்றைச் சமைத்து விட்டு மீனுக்குப் போனாள். கனகு வந்தார். அவளைக்கண்டதும் சைக்கிளை நிறுத்தினார். கான்ரிலில் கிடந்த பையைக் கழற்றி நீட்டினார்.

"என்ன...?

"மீன்"

என்றார். அவள் வாங்காது கொஞ்சநேரம் யோசித்தாள். ஏன் மீன் வாங்கித்தருவான்? தான்கொடுக்கும் சாப்பாட்டுக்குப் பணம் தருகிறார். சிலவேளை வெற்றிலைக்கடைகாரன் சொன்னது உண்மையா?

"நீ நடந்து போய் மீன் வங்கிறதை நான் பாக்கிறனான். கடைக்கு பூநகரி மீன்காரர் வந்தவங்கள். சுறா நல்ல மலிவு. அதுதான் வாங்கினான்"

கனகு மீனைக் கொடுத்துவிட்டுப் போனார். அவள் வழமையாக காக்கிலோ வாங்குவாள். கனகு நிறையக் கொடுத்த மீனில் அடுத்தநாள் அரைவாசியை வைத்தாள். அவள் வன்னிக்கு வந்தபிறகு இன்றுதான் சுறாவைக் காண்கிறாள். சுறா.தூள் போட்டுச் சமைப்பதைவிட அரைத்துச் சமைத்தால்தான் ருசி. பூறாட்டிக்கு பொலிஸ்காரர் அடித்தநேரம் ஒட்டகப்புலத்து புக்கையும் அரைச்ச சுறாக்கறியும்தான் அவனின்நோவை எடுத்தன. நிருபன் விழுந்து முழங்காலில் நோவு. அரைப்பதற்கு அம்மியில்லை.

சமைத்த சாப்பாட்டைப் பார்சலாக்கிவிட்டு கனகு கடைக்குப் போனாள். கனகு வாசலில் நின்று பாசலை வாங்கிவிட்டுச் சொன்னார்

"கடையை கொஞ்ச நேரம் பார். பால்மா இல்லை. வாங்கிக் கொண்டு வாறன்."

சொல்லிவிட்டுப் போனார். அவள் உத்தமனைச் சந்திக்கப் போகவேணும். இரண்டு மணிக்கு வரச்சொன்னான். உத்தமன் நித்தியைக் கண்டுபிடித்திருப்பான். நித்தியை நினைத்தபடி வாங்கிலில் இருந்தாள். வழமையாக வெளியில் போகில் கனகு வெற்றிலைக்கடைக்காரனைப் பார்க்கும்படி சொல்லிவிட்டுப் போவார். இன்று ஏன் தன்னை பார்க்கும்படி சொன்னார்? அவள் இப்போது கனகுவின் செயல்களை வினாக்குறியோடுதான் பார்ப்பாள். இந்த வினாக்குறிகள் எல்லாம் வெற்றிலைக்கடைக்காரன் கனகுவைப்பற்றி சொன்ன வார்த்தைகளால்தான்.

பிலிப்பு வந்தான். சைக்கிளை வெற்றிலைக்கடைக்கருகில் நிறுத்திவிட்டு வெற்றிலை வாங்கினான். சைக்கிளில் சாமான்கள் இருந்தன. வெற்றிலையும் வாங்கினான். அவன் பன்னங்கண்டிப் பாடசாலையில் இருக்கும்போது தொழில் வேணும் என்று சொன்னான். சிறிய பெட்டிக் கடை போட்டு சீவியம் நடத்தலாம் என்றும் சொன்னான். தான் கடை போட்டால் பூங்கொடியை தூள் இடித்துத் தரும்படியும் இடிப்பதற்கு சம்பளம் தருவதாகவும் சொன்னான்.

அவன் வெற்றிலை வாங்கும்போது பிலிப்பு உருத்திரபுரத்தில் கடை போட்டுவிட்டதாக நினைத்தாள். வெற்றிலையை வாங்கிக் கொண்டு வெற்றிலைக்கடைகாரனோடு கதைத்தான். கதைக்கும்போது அவளைப் பார்த்தான்.

பிலிப்பு கடைக்கு வந்தான். உள்ளே வந்து கதிரையில் இருந்தான். வடை ஒன்றை எடுத்துக் கடித்தான். இருக்கும் போது அவளைப் பார்த்துச் சொன்னான்

"ரீ ஒண்டு"

அவள் பேசாமல் இருந்தாள். அவன் வெற்றிலை வாங்கி விட்டு கனகுவிடம் ரீ குடித்துவிட்டே செல்வான். அவனுக்குத் தெரியும் கடை முதலாளி கனகு என்று. அவன் மூன்று தடவைகள் ரீ என்று கேட்டான் .நான்காவது தடவை கேட்டான்

"மனிசன் எங்கை போட்டார்?"

மனிசன் என்றதும் கிபிர் காதுகளுகள் பறப்பதுமாதிரி இருந்தது. கொஞ்சநேரம் இரத்தம் புடைத்திருந்தது. வாங்கிலில் ரீ குவளை இருந்தது. எடுத்து அவனின் முகத்துக்கு எறிந்தாள். ரீகுவளை எட்டுத்துண்டுகளாக உடைந்தது. மூக்கில் இரத்தம் பீறிட்டது. அவள் எழும்பி வெளித்தூணை பிடித்துக்கொண்டு நின்றாள். இமைக்குவளை கண்ணீரை தாங்கிக்கொள்ள முடியாது தழம்பியது. அவன் மூக்கை சாறத்தால் துடைத்தான். கைகளிலும் சாரத்திலும் இரத்தம். மேசையில் இருந்த பேப்பர் துண்டால் கையைத் துடைத்தான். எழும்பியவன் பற்களை நொருமிக்கொண்டு ஒரு கராட்டி வீரனின் கைகள் மாதிரி விரைல்களை மடித்து வலக் கையை ஓங்கிக் கொண்டு அவளுக்குக்கிட்ட போனான். அவளின் கை ஒன்று தூணில் கட்டப்பட்டிருந்த ஒரு பெட்டி மேல் இருந்தது.

"மக்கள் கருத்து. தமிழீழ விடுதலைப்புலிகள்"

என அந்த சிவப்புப் பெட்டியில் எழுதியிருந்தது. ஓங்கின கையை அப்படியே கீழே பதித்தான். பொத்தியிருந்த விரல்கள் வீரியங்களை இழந்தன. அவன் ஒன்றும் கதைக்காது வெற்றிலைக்கடைக்குப் போனான்.

கனகு இன்னும் வரவில்லை. அவளுக்கு அங்கு நிற்க விருப்பமில்லை. வெற்றிலைக்கடைகாரன் சொல்லியதால் தான் பிலிப்பு வந்தான் என நினைத்தாள். வெற்றிலைக்கடைகாரன் பிலிப்புக்கு தண்ணி கொடுத்தான். கடைக்குப் பின்னால்போய் பிலிப்பு இரத்தத்தைக் கழுவினான். அவன் கொடுத்த பழைய துண்டொன்றால் முகத்தைத் துடைத்தான். பிலிப்பு மரியதாஸிடம் சொல்வான். அவள் கனகுவுடன் ஒன்றாய் இருப்பதாக. மரியதாஸ் ஊரெல்லாம் சொல்வான். கனகம் அறிவாள். கிளினர் தெய்வேந்திரம் அறிவான். தன்னிடம் தவறு ஏதும் இல்லாமலே தான் நடத்தை கெட்டவளாக்கப்பட்டமையை நினைக்க தற்கொலை செய்ய வேணும்போலிருந்தது அவளுக்கு.

கனகு வந்தான். அவரைக் கண்டதும் அவள் உத்தமனிடம் போனாள். கனகு கடைக்குள் நுழைய கண்ணாடித்துண்டுகள் கீழே இருக்கும். சிந்திய இரத்தம் இருக்கும். அதுபற்றியேதும் சொல்லாமலே அவள் போனாள். அவள் எப்படி அதைச் சொல்வது? சொல்லாமல் போவது ஒரு குற்றமாக அவளை உறுத்திக்கொண்டிருந்தது.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குப்பின் உத்தமனின் முகாம். வெயிலில் நடந்து போனாள். கால்கள் சுட்டது. கால்களில் செருப்பு இல்லை. சீலைத்தலப்பால் மொட்டாக்கிட்டு நடந்தாள். தபாலகத்தைப் பார்த்தபோது பொலிஸ் நிலையம் ஞாபகத்தில் வந்தது.

தம்பு கூத்துக்கு உடுக்கடிக்க கந்தவிக்கிழவனை கூப்பிட்டிருந்தார். கந்தவிக்கிவன் பூங்கொடியையும் கூட்டிச்சென்றார். அப்ப அவளுக்கு ஏழு வயது. கிழவன் அவளைக் கூட்டிக் கொண்டு பொலிஸ் நிலையத்தடிக்கு போக முன்னால் வந்தவாகனத்தில் குண்டு வெடித்தது.

புகை தெருவை மூட எதுவுமே தெரியவில்லை. சனங்கள் குளறிக்கொண்டு ஓடினார்கள். கிழவன் பூங்கொடியை தூக்கிக்கொண்டு குறுக்கொழுங்கை ஒன்றுக்குள் ஓடினார். சனங்கள் கதைத்தார்கள் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்ரை இயக்கம் கொண்டு வந்த குண்டு பொலிஸ் நிலையம் வர முதல் வெடிச்சிட்டுது என்று.

பொலிஸ்காரர் வெடித்த இடத்துக்கு திரள்களாக ஓடிவர அவள் குழறிக்கொண்டு தகப்பனின் கழுத்தைப் பிடித்ததை நினைத்துக்கொண்டு நடந்தாள்.

உத்தமனின் இடத்தைக் கண்டுபிடிக்க அவளுக்கு அரை மணித்தியாலம் சென்றது. உத்தமனை விசாரிக்க எல்லோரும் தெரியாது என்றும் அப்படி ஒரு முகாமும் இங்கில்லை என்றும் சொன்னார்கள். சிலர் ஏன்? எதற்கு முகாமை விசாரிக்கிறீர்கள்? என புலன் விசாரணை செய்தார்கள். ஊருக்குப் புதியவர்களுக்கு இயக்கங்களின் முகாம்கள் இருக்கும் இடங்களை இலகுவில் சொல்ல மாட்டார்கள்.

அவள் விசாரித்து அலுத்துப்போய் ஒரு மரநிழலில் நிற்க ஒரு போராளி அவளுக்கு கிட்ட வந்து நின்று அவளையே பார்த்தான். அவனுக்கு யாரோ சொல்லியிருக்க வேண்டும் முகாமை யாரோ விசாரிப்பதாக. புதியவர்கள் யாரும் ஊருக்குள் சந்தேகமான முறையில் நடந்தால் சனங்கள் இயக்கத்துக்கு அறிவிப்பார்கள். இயக்கம் அவர்களை விசாரிப்பார்கள். சிலரை முகாமுக்கு அழைத்துச் செல்வார்கள். அந்தப் போராளியிடம் அவள் தான் உத்தமனின் முகாமைத் தேடுவதாகவும் மகன் இயக்கம் என்றும் உத்தமன் இன்று வரும்படி கூறியதாகச் சொல்ல அந்தப்போராளி அவளை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போனான். அந்தப் போராளி அவளை சைக்கிளில் ஏற்றும் போது அருகில் நின்றவர்கள் அவளை ஒரு உளவாளிபோலப் பார்த்தார்கள்.

அவன் அவளைக் கொண்டு போய் உத்தமனின் முகாமில் விட்டான். அவள் கதிரையில் இருக்க ஒருவன் ரீ கொண்டு வந்து கொடுத்தான். குடிக்கும்போது அப்படி ஒரு சுவையை அவள் இதுவரையும் உணர்ந்ததில்லை. அவர்கள் அன்பாக. ஈர்ப்பாக அவளோடு கதைத்ததை நினைக்க அவளுக்கு வியர்க்கவேயில்லை. அவள் குடித்த ரீக்குவளையை வைக்க, உத்தமன் வந்தான். உத்தமனைக் கண்டு எழும்பினாள். அவள் எழும்பியது அவனுக்குப் பிடிக்கவில்லை. இருக்கும்படி சொன்னான். அவள் நித்தியைப்பற்றிக் கேட்க முதல் அவன் சொன்னான்.

"நித்தி என்ற பெயரிலை எங்கடை படையணியிலை ரண்டு பேர் இருக்கினம். மகனுக்கு எத்தனை வயது?"

"இப்ப இருபத்தொண்டு"

"அப்பாவை பூறாட்டியெண்டு சொல்லுறதே?"

"ஓம் தம்பி"

*(வருவாள்)*

# கோத்தா+ரணில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லில் போராடிக் கொண்டிருப்பவர்கள்.ஆகிய நான்கு தரப்புக்களையும் திருப்திப்படுத்தலாம் என்று கோத்தா+ரணில் கூட்டு சிந்திக்கின்றது. ஐ.எம்.எப், காலிமுகத்திடலில் போராடிக் கொண்டிருப்பவர்கள், மேற்கு நாடுகள் போன்றன ராஜபக்சவை அதிகாரத்திலிருந்து அகற்றவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். ஆனால் கோத்தா+ ரணில் கூட்டு அதற்கு உடனடியாகத் தயாரில்லை. கோத்தாபயவின் அதிகாரங்களைக் குறைத்துவிட்டு அவரைத் தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பதே அவர்களுடைய உள்நோக்கம். கோத்தாபய பதவி விலகத் தயார் இல்லை என்பதைத்தான் அண்மையில் அவர் அமெரிக்காவின் ப்ளூம்பேர்க் (Bloomberg) செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வி காட்டுகிறது. "தோற்றுப்போன ஜனாதிபதி என்ற பெயருடன் விலகிச் செல்ல முடியாதுஎன்று அவர் கூறியிருக்கிறார் (Bloomberg) அதாவது தான் இப்பொழுது தோற்றுப் போயிருக்கிறார் என்பதனை அவர் ஒப்புக்கொள்கிறார். யுத்த வெற்றியை முதலீடாகக் கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற ஒரு குடும்பத்தின் பிரதிநிதி அவர். யுத்த வெற்றியை ஒரு குடும்பச் சொத்தாக மாறிய ராஜபக்சக்கள், அவர்களுக்கு முன்னிருந்த எல்லாத் தலைவர்களும் செய்த தவறுகளின் விளைவாக வந்த திரட்டப்பட்ட தோல்வியை சுமக்கவேண்டி வந்ததும் என்பது இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் ஒரு நகைமுரண்தான்.நாட்டின் பொருளாதாரத் தோல்விகளுக்கு ராஜபக்சக்கள் மட்டுமே பொறுப்பில்லை.ரணிலும் உட்பட இனப்பிரச்சினையைப் படைப் பலத்தின்மூலம் தீர்க்க முற்பட்ட எல்லாத் தலைவர்களுமே பொறுப்புத்தான். இவர்கள் எல்லாருடைய தொடர் தோல்விகளின் திரட்டப்பட்ட விளைவுதான் கோத்தாபயவின் தலையில் வந்து பொறிந்தது. ஆனால் அவர் வெற்றி பெற்றவராகப் பதவி விலகுவாரா என்பது சந்தேகமே. ஏனென்றால் அவர் இனிப் பெறக்கூடிய எல்லா வெற்றிகளும் ரணில் விக்கிரமசிங்கவின் கணக்கில் தான் சேர்க்கப்படும். கோத்தா+ரணில் கூட்டு ஓர் அசுத்தக் கூட்டு என்று யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அது ஒரு தந்திரக் கூட்டு. தோல்வியின் விளிம்பில் சிங்களத் தலைவர்கள் கட்சி பேதங்களைக் கடந்து எப்படி ஒருவர் மற்றவரைப் பாதுகாப்பார்கள் என்பதற்கு அதுவோர் ஆகப் பிந்திய உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 87 சொற்சிலம்பம் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | | | | |
| ■ | | ■ | 10 | | ■ | | ■ |
| 11 | | 12 | | ■ | 13 | | 14 |
| 15 | | | ■ | 16 | | | |
| 17 | | ■ | 18 | | | ■ | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| ■ | 21 | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.......................................

கையொப்பம்:.......................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**சொற்சிலம்பம் போட்டி இல.87**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**17.06.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### இடமிருந்து வலம்

1. தண்டிகை 4. ஒரு சரக்கு 8. பதில் உதவி 10. வாயினால் கவ்வு 11. சான்று 13. தகைமை பற்றிய நிலைமை 15. சிற்பி 16. தன் சபதம் நிறைவேறும்வரை திரௌபதி தோற்றமளித்தது இக்கோலத்தில்தான் 17. இது ஒரு குடிவகை 18. நிலைவரம் பற்றிய தன்மை 19. இல்லாள் 20. பல அல்ல 21. அரைவாசி 22. சடப் பொருட்களின் மூன்று நிலைகளுள் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. புறாவுக்காகத் தனது சதையை அறுத்துக் கொடுத்த சக்கரவர்த்தி 2. காமநோய் 3. சிறைபிடிக்கப்பட்டவன் 4. தேசிய விளையாட்டுக்களில் ஒன்று 5. தோழன் 6. கைகூப்பு 7. ஏவுகணை ரகம் 9. மிக நீண்டகால அளவீடு 11. ஒன்றை வரவேற்று உதவுவது 12.மன்மதன் மனம் கவர்ந்தவள் 13. ஒன்றை வழிப்படுத்தும் பொறுப்பு 14. மூன்று முனை கொண்ட வேல் 16. தலையில் எழுதப்பட்டது 18. மறக்காமல் ஞாபகம் கொள் 19. நிலா 20. சைவர்கள் வாயில் ஒலிப்பது

### சொற்சிலம்பம் போட்டி 86 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சகவாசம் 5.சக 7. மருங்கு 8. சதிர் 9. கனிதல் 11. துகில் 13. விலாசம் 15. வலி 17. பனி 18. பதிகம் 21. மதியம் 22. ஊன் 23. மதில் 24. பிரதானி

**மேலிருந்து கீழ்**

1.சமத்துவம் 2.கரு 3. வாங்கல் 4.சகுனி 5. சதி 6.கர்வம் 8. சல்லாபம் 10.தவி 12.கிலி 14. சனி 16.புதிய 18. பதில் 19. கம்பி 20. கன்னி 21. மதி 22. ஊதா

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 86 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு** — **பா.அஸ்வினி**, V.H. லேன் இருபாலை, கோப்பாய்

**2 ஆம் பரிசு** — **வ.அபிநயன்**, நல்லூர், யாழ்ப்பாணம்

**3 ஆம் பரிசு** — **ந.செல்வராணி**, சிவன் வீதி, காரைநகர்

**4 ஆம் பரிசு** — **மா.மகாலிங்கம்**, கைதடி மேற்கு, கைதடி

**5 ஆம் பரிசு** — **ச.சயிலுஜா**, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

# கோடை காலம்

## கோழிகளுக்கு சாபம்



**Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்**
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



• அனுசேபம் / வளர்சிதை மாற்றத்தின் போது புரத உணவுகள் அதிகளவு வெப்பத்தினை வெளி விடுவதால் இந்தக் காலத்தில் தீவனத்தில் புரதத்தின் அளவை கணிசமாகக் குறைக்க வேண்டும் .[ 11.5%]

• சக்திக்காக தீவனத்தில் சேர்க்கப்படும் சோளம்,அரிசி குருணல்,தவிடு போன்ற காபோஹைதரேட்/ மாப்பொருள் உணவுகள் அனுசேபத்தின் போது அதிக வெப்பத்தை வெளிவிடுவதால் அதிக வெப்ப அயர்ச்சியை தரக் கூடியன. இதனால் அதிக வெப்பம் தராத தாவர எண்ணெய் போன்றவற்றை சேர்த்து [அதிகளவு 5%] அந்த சக்தியை ஈடுசெய்யலாம்.

• வெப்ப அயர்ச்சியால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால் விற்றமின் மற்றும் செலினியம் சத்துகளை வழங்கலாம். இவை இனப்பெருக்க பிரச்சினைகளை தீர்க்க வல்லன.

• முட்டை உற்பத்திக்கு பைகாபனைட் [ HCO3] உபபொருள் தேவை. வெப்ப நாள்களில் கோழிகள் அதிகமாக வாய் மூலம் காபனீர் ஒட்சைட் [ Co2] வாயுக்களை வெளி விடுவதால் தேவையான பை காபனேட் கிடைக்காமல், முட்டை உற்பத்தி குறைவடைவதோடு, தரம் குறைந்த தோல் முட்டைகளை கோழிகள் இடத் தொடங்கும்.

மேலும் அதிக காபனீர் ஒட்சைட் வெளியேறுவதால் உடலின் அமில கார சமநிலை பாதிக்கப்பட்டு காரத்தன்மை அதிகரிப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி கடுமையாகக் குறைவடையும். இதனைத் தடுக்க உணவில் NaHco3 சேர்க்கலாம்.[ 1000kg உணவுக்கு 1.5-2kg NaHco3]

• விற்றமின் போன்றவை வெப்ப அழுத்தத்தை குறைப்பதால் அவற்றை உணவில் வழங்கலாம். விற்றமின் D ஐ வழங்குவதன் மூலம் முட்டை ஓடு சார்ந்த பிரச்சினைகளை குறைக்கலாம். கரும்புச் சாறு போன்றவற்றை பிசைந்து கொடுத்து வழங்கினால் கோழிகளின் உணவு உட்கொள்ளுகை அதிகரிக்கும்.

### தண்ணீர் மேலாண்மை

• அதிகதிகமாக தண்ணீர்த் தொட்டிகளை வைக்க வேண்டும்.

• சிறிய பண்ணைகளாயின் மண் சட்டிகளில் தண்ணீர் வைக்கலாம். மதிய வேளையில் அதனுள் ஐஸ் கட்டிகளை போட்டு வைக்கலாம்.

• தண்ணீர்த் தொட்டிகளின் வெளி மற்றும் உட்புறத்தில் சுண்ணாம்பைப் பூசுவதன் மூலம் அவை குளிர்ச்சியாகக் காணப்படும். அத்துடன் வெள்ளை நிறம் வெப்பத்தைப் பிரதிபலிக்க கூடியது.

• மதிய நேரத்தில் தொட்டிகளில் உள்ள தண்ணீர் விரைவாக வெப்பமாவதால் அடிக்கடி தண்ணீரை மாற்ற வேண்டும். மேலும் தண்ணீரில் குளுக்கோஸ் , விற்றமின், கனியுப்புகளை கலந்து வழங்கினால் இழக்கப்படும் மேற்படி சத்துகளை ஈடு செய்யலாம்.

• பிளாஸ்டிக் தண்ணீர்த் தாங்கிகள் வெப்பமான நேரங்களில் விரைவாக வெப்பமாவதால் முடிந்தவரை கிணற்றில் இருந்து நேரடியாக தண்ணீரை வழங்குவது சிறப்பானது.

### கொட்டகை மேலாண்மை

•கொட்டகையை காணியின் உயரமான மற்றும் காற்றோட்டம் மிக்க இடத்தில் அமைக்க வேண்டும். கொட்டகையை நீளப் போக்கில் கிழக்கு மேற்காக அமைக்கும் போது நேரடியான சூரிய ஒளியின் தாக்கத்தை குறைக்க முடியும்.

•கொட்டகைகளை நிழல் மரங்கள் கொண்ட இடத்தில் அமைக்கலாம். அல்லாது போனால் நிழல் மரங்களை கொட்டகையை சூழ நடலாம். அத்துடன் பசுமையான புற்களையும் நட வேண்டும்.

•கொட்டகைகளின் கூரையை வைக்கோல் மற்றும் தென்னோலை கொண்டு அமைத்துக் கொள்ளலாம். அஸ்பெஸ்டாஸ் சீற் மற்றும் தகரம் கொண்டு வேயப்படும் கூரைகளுக்கு வெள்ளை சுண்ணாம்பு கொண்டு அடிப்பதோடு உட்புற மற்றும் வெளிப்புற சுவர்களுக்கு சுண்ணாம்பு அடிக்கலாம். கூரையின் மேல் கொடித் தாவரங்களை படர விடுவதன் மூலம் வெப்பத்தைக் கணிசமாக குறைக்கலாம். மேலும் நீர் தெளிப்பான்களை கூரை மேல் அமைத்து வெயில் நேரங்களில் அதன் மூலம் குளிர்ந்த நீரை கூரைத் தெளிக்கலாம். உட்புறக் காற்றோட்டத்தையும் வெப்பத்தையும் சரிசெய்ய தகுந்த மின்விசிறிகளைப் பாவிக்க வேண்டும். ஈரமான சாக்குகளை மதிய நேரங்களில் பயன்படுத்துவதன் மூலம் வெப்பக் காற்றினைத் தவிர்க்க முடியும். அண்மைக்காலத்தில் மிகப் பெரிய வர்த்தக கோழிப்பண்ணைகள் வெப்பத்தை வழங்காத செயற்கையான சுவர்களை கோழிப் பண்ணைகளில் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

• கோழிப் பண்ணைகளின் சுவரின் அகலம் 25-30 அடிக்கு அதிகம் இருக்கக்கூடாது. அதனை விட அதிகரிக்கும் போது உட்புற காற்றோட்டம் கணிசமாகப் பாதிக்கப்படும். கொட்டகைகளின் நீளத்தை வசதிக்கு ஏற்ப மாற்றலாம். உயரமும் 12-15 அடி அளவில் இருக்கலாம். மேலும் அதிகரிப்பதால் பெரியளவு பயன்கள் கிடைக்காது.

### நோய் மேலாண்மை

கோடை காலத்தில் கோழிகள் தமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகமாக இழப்பதால் பல நோய்கள் ஏற்படுகின்றன.எனவே கோழிகளுக்கு பொதுவாக ஏற்படும் நோய்களுக்குரிய தடுப்பு மருந்துகளை சரியான வயது .பருவத்தில் வழங்குவது சிறப்பானது.

ரனிக்கட்[New castle disease] .கம்போரா [ Gamboro infectious bursal disease] மற்றும் அம்மை [ Fowl pox] நோய்க்குரிய மருந்துகளை மருத்துவ ஆலோசனையின்படி சரியான வழிகளில் வழங்க வேண்டும்.

மேலும் பூச்சி மருந்துகள் மற்றும் இரத்தக் கழிச்சல் [Coccidiosis] நோய்க்குரிய மருந்துகளையும் சரியான விகிதத்தில் வழங்க வேண்டும். ஏனைய விலங்குகளைப் போல் அல்லாது கோழிகள் விரைவாக நோய்த் தொற்றுக்கு உள்ளாகினால் நூற்றுக் கணக்கில் இறக்கநேரிடும் [High mortality and morbidity]. எனவே சிறியளவு நோய் அறிகுறிகள் தென்பட்ட உடன் வைத்தியரை நாடுதல் அவசியம்.இறந்த கோழிகளை பிரேத பரிசோதனை செய்யவும் வேண்டும்.

இதன் மூலம் சரியான நோய்களை கண்டறிந்து விரைவாக சிகிச்சையை செய்ய முடியும்.பொதுவாக கோழிகளில் பல நோய்களின் அறிகுறிகள் ஒரே மாதிரி தெரியும் என்பதால் அனுபவம் மிக்க கால்நடை வைத்தியரை அணுகி ஆலோசனையைப் பெற வேண்டும். எனவே கோடை காலத்தில் கோழிகளில் ஏற்படும் வெப்ப அயர்ச்சியை மேற்கூறிய மேலாண்மை முறைகள் மூலம் சரிசெய்து அவற்றின் ஆரோக்கியத்தைப் பேணுவதன் மூலம் அதிக உற்பத்தியை பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.பி யை ஏன் பிடிக்கவில்லை?



கோகுலராகவன்

1985 இல் நான் கிளி/ அல்லிப்பளை சி.சி.த.க பாடசாலையில் இருந்து கிளி/பளை மகா வித்தியாலயத்துக்கு (இப்ப கிளி பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலை) ஆறாம் வகுப்புக்கு சேர அப்பாவுடன் போகையில்,வெள்ளை அரைக்கை சேர்ட்டும் , கறுப்பு நீளக் காற்சட்டையுமாக, தலை நரைத்த கண்ணாடி அணிந்த அதிபராக ஏ.பி ( AP இது நாங்கள் அவருக்கு வைச்ச சுருக்கப் பெயர்) காட்சி தந்தார் .

இன்றுவரை, அவர் தனது ஓய்வு காலம் வரை ஏன்? வெள்ளைச் சேர்ட்டையும், கறுப்பு ரவுசரையும் தனது சீருடையாகத் தெரிவு செய்தார் என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு அதிபர் சமூகத்தில் உயர்ந்த நிலை வகிப்பவராகத்தான் கணிக்கப்படுகின்றார். அத்தகையவர் தன்னை ஒரு சீருடைக்குள் அமிழ்த்தி வைத்திருப்பது எனக்கு உடன்பாடற்றதாகவே இப்போதும் இருக்கிறது. அதிபர் என்பவர் நிலைமைக்கு தகுந்த முடிவெடுக்க வேண்டியவர் . எனவே அவர் ஒரே கொள்கையில் மாற்றம் இன்றி தங்கி இருப்பதாக இந்த சீருடை காட்டுவதாகவும் மாறி விடும். இருக்கட்டும் அது அவரது தனிப்பட்ட விருப்பம் ,கொள்கை.

ஆனால் அதுதான் எனக்கு 6 ஆம் வகுப்பிலிருந்து ஏ.எல் படித்து முடிக்கும் வரை அவரை பிடிக்காமல் போனதற்கான காரணம்.

ஒரு தடவை (நான் அதிபராக வந்த பின்னர்) என்னை விட கறுப்பான மாணவன் ஒருவன் என்னைப்பார்த்து "நீங்கள் கறுப்பாக இருப்பதால் உங்களை எனக்குப் பிடிக்காது" என்று சொன்னான். இப்படி ஒருவரை பிடிக்காமல் போக சின்னச் சின்ன காரணங்கள் போதுமானவை. நவநாகரீக இளைஞனாக வந்து, சமூகக்கல்வி படிப்பித்த 'ஸ்ரீ சேரை' இப்பவும் பிடிக்கிறது . இப்பவும் கண்டால் 'சேர் 'என்று ஆசையாக கூப்பிடத் தோன்றுகிறது.

எனக்கு பிடிக்காத 'ஏ.பி' பள்ளிக்கூடத்தில் எல்லோருக்கும் பிடிக்காதவராகத்தான் இருந்தாரா?

அவரிடம் எனக்கு பிடித்த ஒரே ஒரு விடயம், அவர் நடக்கும்போது அவரின் சப்பாத்தில் இருந்து எழும் "டிக் டிக் "என்ற சத்தம் மட்டுமே. நான் ஆறாம் வகுப்பில் சேர்ந்து உயர்தரம் படித்து முடிக்கும் வரை, என் பெயரை அவர் கூப்பிட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. நானும் அவரிடம் போய் ஒருநாளும் அளவளாவிப் பேசிய ஞாபகம் இல்லை.




என்னை கூப்பிட்டு "குழப்படி செய்யாமல் படி. ஒருநாள் என்னைப் போல் அதிபராக வருவாய்" என்று ஆருடம் சொல்லவுமில்லை.

தற்போது கேட்டால்" 1200 மாணவர்கள் படித்த பாடசாலையில் உன் பெயரை நான் எப்படி ஞாபகம் வைத்திருப்பது?" என்று கேட்கக் கூடும்.

"இல்லை. அதற்கான முயற்சியை நீங்கள் எடுக்கவில்லை" என்பது என் பதிலாக இருக்கும்.

1988 இல் என்று நினைக்கிறேன் . அவர் காலைப்பிரார்த்தனையில் மேடையில் ஏறி "எமது பாடசாலையில் இருந்து ஒரு மாணவன் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்" .என பெருமையுடன் அறிவிக்கிறார்

இதுதான் ஏ.பி யின் முதலாவது வெற்றியாக இருந்திருக்கும். பளை மத்திய கல்லூரியின் வரலாற்று சாதனையாகவும் இருந்தது. எனக்கு பிடிக்காமல் போன ஏ.பி தான் இதன் தொடக்க நாயகன். இப்பதான் புரிகின்றது '1சி'பாடசாலையை ஏ.பி தான் '1ஏபி' ஆகவும் மாற்றி இருக்கிறார். நான் எப்போதும் விளையாட்டில் ஈடுபாடு இன்றி ஓரமாக நின்று .விளையாட்டுப் போட்டியை பார்ப்பதை அவர் ஒருநாளும் கண்டிருக்கமாட்டார்.

அப்போதெல்லாம் கூப்பிட்டு "முன்னுக்கு போய் விளையாடு"என்று சொல்லியும் இருக்க மாட்டார்.

ஒவ்வொரு விளையாட்டுப் போட்டிக்கும் அப்போது எம்.பியாக இருந்த ஆனந்த சங்கரியை பிரதம விருந்தினராக கூப்பிட்டு ,மூன்று நான்கு கட்டடங்களை பாடசாலையில் அமைப்பித்தார். அவற்றுக்கு சங்கரி மண்டபம், இராஜ்குமார் மண்டபம் (இராஜ்குமார் கணித ஆசிரியர் பாடசாலையில் தங்கி இருந்த இரவில் இதய அடைப்பால் பாடசாலையில் இறந்து போனவர்)எனப் பெயரும் வைத்தார். இந்த மண்டபங்கள் யுத்தத்தில் அடிபட்டு போய்விட்டன.

ஒருதடவை விளையாட்டு போட்டியில்' போலி அன்ரனாவை' பூட்டி உண்மையான தொலைக்காட்சிப் பெட்டியை ஆனந்தசங்கரியிடம் வாங்குவதற்கு மாணவர்களுக்கு ஆலோசனையும் வழங்கினார்.

அவர் கட்டுவித்த புதிய கட்டடம் ஒன்றுக்குள் அமர்ந்துதான் நான் ஓ.எல் சோதனையை எழுதினேன். அவருக்கு .அவர் காலமாகும் வரை அவரை எனக்குப் பிடிக்காது என்று தெரியாது.

இதனால்தான் அந்நாள் கட்டுவித்த கட்டடத்துக்குள் தைரியமாக இருந்து சோதனை எழுதினேன்.

நான் ஒருநாள் வகுப்பில் அவரை மாதிரி நடித்துக்காட்டிக் கொண்டிருக்க பின்னால் நின்று பார்த்தார்.

அவருக்கும் இது தெரியும். ஆனால் கண்டிக்கவுமில்லை , பாராட்டவும் இல்லை.

"என்ன சத்தம்? " என்று விட்டு போய்விட்டார்.

இப்போது நினைக்கையில் அன்று அவர் என்னோடு ஏதாவது கதைத்திருக்கலாம் என்றே தோன்றுகிறது . இவன் இதை ஒரு காலம் பத்தியாக எழுதுவான் என ஏ.பி நினைத்திருக்கவும் மாட்டார்.

கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய போது சைக்கிளை மிதித்து எல்லாப் பள்ளிக் கூடங்களையும் பார்க்கப் போனார் .

அவரது உடல்நிலைக்கு அது தேவையில்லாத வேலையாக எனக்கு இப்போது தோன்றுகிறது. அந்தந்தப் பள்ளிக்கூட அதிபர்கள் இவரை இன்முகத்துடன் வரவேற்றிருப்பார்களா ? வாய்ப்பு மிகக் குறைவு.

இந்தத் திட்டத்தை அதிபர் என்ற வகையில் நானும் ஆதரிக்கமாட்டேன். அவர் இட்ட தொடக்கம் பளை ம.வி.யில் நிறைய மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு எல்லா பீடங்களுக்கும் அனுமதியைத் பெறத் தொடங்கினர்.

ஆனால் அவர் எந்த மாணவனிடமும் ஆறுதலாக நின்று கதைத்ததை நான் காணவில்லை. இதை அவர் ஏன் ஒரு உளவியல் வகை என்பதை புரிந்து கொள்ளாமல் விட்டார்? என்று தெரியவில்லை.

அவர் அடிக்கடி சொல்லும் மூன்று விடயங்கள்:

1) I pull a mountain by a single hair, if comes mountain if goes hair

(மலையை மயிரால் இழுக்கிறேன் வந்தால் மலை போனால் மயிர்)
அவர் இழுத்த மலைகள் எத்தனை?
எறிந்த மயிர்கள் எத்தனை?

2) pallai is a pilai (பளை இஸ் ஏ பிழை)
பளையில் அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்பால் இவ்வாறு அவர் கூறியிருக்க முடியும். ஆனால் எதிர்ப்பு இல்லாத அதிபர் எங்கு இருக்கிறார்.? இந்த இடமும் அவரிடம் நான் வெறுப்புக்கொள்ள காரணமாக இருந்தது. யாரும் தான் பிறந்த ஊரை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.
இதை அவர் புரிந்துகொள்ளாதது ஏன் என்று எனக்கு தெரியவில்லை.

3) An uneducated idiot should not live in freedom India

இதை டொக்டர் அம்பேத்கார் சொன்னதாக சொல்லி " இந்தியாவுக்குப் பதிலாக "பளை" என்று மாற்றிச் சொல்லுவார்.

இதை அப்படியே நான் பாடமாக்கிக் கொண்டேன். அதைப் பாடமாக்கிக் கொண்ட ஒரே ஒரு மாணவன் நானாகத்தான் இருக்க முடியும்.

அவரில் அவ்வளவு விருப்பமற்ற ஒரு மாணவன் அவரது இலட்சியப் பொன்மொழியை இன்று வரை பின்பற்றி அதிபர் என்ற நிலையில் நடைமுறைப்படுத்துவது ஏ.பி க்கான இன்னுமொரு வெற்றிதான்.

அவர் தன் வாழ்நாளில் நாத்திகனாகவே வாழ்ந்தது எனக்கு தெரியும். அதை அவர் காலைப் பிரார்த்தனையில் வெளிப்படுத்துவதில் எனக்கு உடன்பாடில்லை.

மதம், மனித நம்பிக்கை என்பதை அவர் ஒரு எழுத்தாளராக இருந்துகொண்டு புரியாமல் விட்டது வியப்புத்தான்.

மரம் நடுவதில் ஈடுபாடு உடையவர். நிறைய மலைவேம்புகளை தான் கட்டுவித்த கட்டடங்களின் முன்பாக நட்டார். இந்த இடத்தில் மட்டுமே அவர் என் நேசத்துக்குரியவராக இருந்தார்.

சரி .யார் தான் விமர்சனம் இன்றி பதவி வகிக்க முடியும்?

2010 க்கு முன்பின்னாக அவர் கனடாவில் காலமாகி விட்டார். அவர் எனது அதிபர் . ஆகையால் அஞ்சலிக்கிறேன்.

இந்தக் கட்டுரையால் அவரின் விசுவாச மாணவர்களுக்கு என்னில் கோபம் வரலாம்.

இது எனது பார்வை. எனது எழுத்துக்கான சுதந்திரம் .ஏ.பி எப்போதும் தான் நினைத்ததைத்தானே செய்தார்.அவரின் மாணவனாகிய நானும் அப்படித்தானே கறாராக இருப்பேன்.

ஆனால்........

[illegible] பளை மத்திய கல்
[illegible] வரலாற்று உண்மை.
இதை நான் ஒரு போதும் மறுக்கப்போவதில்லை. (கதைப்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

சூரியன்



## அண்ணனோடு சந்திப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்கு முன்னர், மஹிந்த ராஜபக்சவை சந்தித்து மனம்விட்டு பேச்சு நடத்தியிருந்தார்.

கட்சித் தலைமையகத்தில் ஊடக சந்திப்பை நடத்துவதற்கு முன்னர், மஹிந்த ராஜபக்சவின் வீட்டுக்கு பஸில் சென்றுள்ளார். தனது பதவி விலகல் மற்றும் எதிர்கால நகர்வுகள் சம்பந்தமாக அண்ணன் மஹிந்தவுக்கு தம்பி பஸில் தெளிவுபடுத்தி, அதற்கான ஆசியையும் பெற்றுள்ளார். ஷிராந்தி ராஜபக்ச, நாமல் ராஜபக்ச உள்ளிட்டவர்களும் அப்போது அங்கு இருந்துள்ளனர்.

"என்னால்தான் நீங்கள் (மஹிந்த) தோல்வி அடைந்தீர்கள் என பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. எனவே, மீண்டும் உங்களை பதவியில் அமர்த்த வேண்டிய தேவை எனக்கு இருந்தது. அந்த இரண்டு எதிர்பார்ப்புகளையும் நான் நிறைவேற்றி விட்டேன். இப்போது விடைபெறுவதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை" என பஸில் உருக்கமாக மஹிந்தவிடம் சொல்லியுள்ளார். அத்தோடு கட்சியை வழிநடத்துவதற்கு தயாராகுமாறு நாமலிடமும் பஸில் கோரிக்கை விடுத்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கும், அரசாங்கத்துக்கு ஆதரவளித்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்ட நிமல் சிறிபாலடி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கிடையில் கடும் அரசியல் போர் மூண்டுள்ளது.

சுதந்திரக்கட்சியில் சிரேஷ்ட உப தலைவர்களாக செயற்பட்ட நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர ஆகியோர் கட்சியில் வகித்த அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளனர் என்ற அறிவிப்பை கட்சி அண்மையில் விடுத்திருந்தது. இதற்கு மைத்திரிபால சிறிசேன உடன்படவில்லை, தயாசிறி ஜயசேகரவே இந்த முடிவை எடுத்து அறிக்கையை விடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.



இந்நிலையில் நிமல் மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரை மைத்திரிபால சிறிசேன சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். "உங்கள் இருவருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது." எனக்கூறி, சமரசப்படுத்த முயற்சித்துள்ளார். " எங்களுக்கு வாய்மூல உத்தரவாதம் வேண்டாம், அறிக்கைமூலம் வழங்கவும்." என இதன்போது நிமல் சிறிபாலடி சில்வா எடுத்துரைத்துள்ளார்.

இது குறித்து கட்சி செயலாளருடன் மைத்திரி கலந்துரையாடியுள்ளார். மத்திய குழுவின் அனுமதி இன்றி, அவ்வாறு செய்ய முடியாது என தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்தே நிமல் சிறிபாலடி சில்வா, நீதிமன்றத்தை நாடி, இடைக்காலத் தடை உத்தரவைப்பெற்றாராம். இந்தப்பிரச்சினையின் பின்னர் தயாசிறிக்கும், நிமல்-அமரவீர கூட்டுக்கும் இடையிலான அரசியல் சமர் பற்றியெரிகிறதாம்.

## புதிய கூட்டு


ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறியுள்ள சம்பிக்க ரணவக்க, பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

43 ஆம் படையணி எனும் இயக்கத்தை கட்டியெழுப்பி, ஆரம்பத்தில் புத்திஜீவிகளை உள்வாங்கிய சம்பிக்க ரணவக்க, தற்போது அரசியல் பிரமுகர்களையும் இணைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதற்கான பேச்சுகள் தற்போது வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றன என்று கட்சிப் பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

2024 இல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே, சம்பிக்க இவ்வாறான நகர்வில் இறங்கியுள்ளார் என அரசியல் களத்தில் கதை அடிபடுகின்றது.





43

○ இராகவன்

அண்டைக்கெண்டு இலங்கை ஆமி ஒவ்வொரு வீடு வீடா செக் பண்ண வந்திட்டான். ஆக்கள் இருந்த வீடுகளை நோர்மலா உள்ளிட்டுப் பாத்திட்டுப் போட்டான். ஆனால் ஆக்களில்லாத வீடுகளை உடைச்சு எல்லாத்தையும் கொட்டி, கிண்டி, தலைகீழாக்கிப் போட்டு ஏதும் பெறுமதியான சாமானிருந்தால் அதையும் எடுத்துக் கொண்டுதான் போவங்கள்.

"உன்ரை தம்பி சேகரியை ஆமி சுட்டுப் போட்டானாம்!" எண்டு ஆரோ அப்புவுக்கு வந்து சொன்னாப் போல, அந்தாள் விழுந்தடிச்சு ஓடிப் போயிருக்குது. அங்கை போனால் என்னத்தைப் பாக்கிறது? ஆக்களைச் சுட்டு இரண்டு நாள் கழிச்சுத்தானே அப்புவுக்குத் தகவல் வந்தது. பிரேதம் ரண்டும் அழுகிற நிலைக்கு வந்திட்டுது. அப்பு அங்கினை அறிஞ்சாக்கள் ,தெரிஞ்சாக்களைப் பிடிச்சுக் கிடங்கு வெட்டித் தாட்டுப் போட்டு வந்தவர் . வீட்டை வந்து பாத்தால் ஆமிக்காறன் வீட்டையுடைச்சு எல்லாம் கிண்டிக் கொட்டித் தலைகீழாக்கிப் போட்டுப் போயிருக்கிறான்.

அப்பு வந்து வேலியால அம்மாவைக் கூப்பிட்டு "என்ர தம்பி சேகரியையும் அவன்ர கூட்டாளி செல்லையனையும் முந்தநாள் ஆமி சுட்டுப்போட்டான். எனக்கு இண்டைக்குத்தான் தெரியும். இப்பதான் இரண்டு பிரேதத்தையும் கிடங்கு வெட்டித் தாட்டுப்போட்டு வாறன். வேற என்ன செய்யிறது?" எண்டு சொன்னது எனக்கு இப்பவும் நல்ல ஞாபகமிருக்கு.

இப்பவெல்லோ கலியாண வீடு,சாமத்திய வீடு, செத்த வீடு,அந்தியேட்டி, பணச்சடங்கு,குடிபூரல் எண்டு வீட்டு விசேசமெல்லாத்துக்கும் ரெமேற்றாப் பந்தல் போடுறதும் சோடிக்கிறதும், மண்டபங்களை புக் பண்ணிக் கொண்டாடுறதெல்லாம் வந்தது. ஆனால் முந்தியெல்லாம் வீட்டாக்கள் தானே கிடங்குகிண்டிப் பந்தல் போடுறது. அதுவும் சாமத்தியவீடு, கலியாண வீடு, குடிபூரல் போன்ற நல்ல காரியங்களுக்கு நல்லநாள் பாத்துப் பந்தற்கால் நாட்டுவினம். பிறகு எத்தனை அடிப் பந்தலோ அதுக்கேற்ற மாதிரிக் கிடுகு பறிப்பிச்சு நல்ல எழுப்பமான பந்தல் போடுவினம். அதுக்குள்ள வெள்ளை கட்டுறது தனிச் சப்டர்.

அப்பு வேலியடைச்சால் ஒருகோழி, குஞ்சு உள்ளுக்கு வராதபடிக்கு அவ்வளவு அறுக்கையாய் அடைப்பார்.

வேலி புடுங்கேக்குள்ள வாற குப்பையள் கூழங்களையெல்லாம் ஒரு இடமாக் கூட்டிக் குவிச்சிட்டுக் கொழுத்திவிடுவார். வசந்தியக்கா வீட்டுக்கு அப்ப சங்கடப்படலை. (அதையிப்ப 'டபிள் கேற் 'எண்டு சொல்லுவினம்) அதை அப்பு நுட்பமாய்த்தான் செற் பண்ணியிருப்பார். மூண்டு அடுக்காய்க் கீழ், நடு, மேல் எண்டு கமுகஞ் சிலாகையள் அடியில வைச்சு ,அதுக்கு மேல நல்ல நெருக்கமாய் அலம்பலை அடுக்கி, பிறகு அதுக்கு மேலை மூண்டடுக்கில கமுகஞ் சிலாகையள வைச்சு ,வட்டுறுப்பாய் முழங்கால் குத்தி இறுக்கிக் கட்டுவார். பிறகு படலை ரண்டையும் குத்தி நிறுத்திக் கட்டிப்போட்டு, வெளிப்பக்கம் கிடுகுகளைக் குத்தி வைச்சு , குத்தூசியால கமுகஞ் சிலாகையளில கோத்துக் கட்டுவார்.

அதுக்குப் பிறகு சங்கடப் படலை அசலாயிருக்கும். படலையை வடிவாய்த் திறந்து மூடுறதுக்குக் குத்துக்காலுக்குச் சின்னத் திருகணைக் கல்லு வைச்சுவிடுவார். குத்துக்கால் பென்சில் நுனிமாதிரி கூராயிருக்கும். அந்தக் கூர்ப் பகுதியைத் திருகணைக் கல்லில இருக்கிற சின்ன ஓட்டைக்குள்ள பொருத்திவிட்டால் சங்கடப் படலை 'ஓட்டமற்றிக் டோர்' மாதிரித் திறந்து மூடும்.இந்தத் திருகணைக் கல்லைப் பட்டைக்கல் எண்டும் சொல்லுறவை. இந்தக் கல்லுக்குப் பதிலாச் சிரட்டையும் பாவிக்கிறவை.

(தொடரும்)

# இது தீர்வுக்கான காலம்!

○ சு.பிரஜீவன்ராம்

இன்று 50 நாள்களைத் தாண்டியும் 'கோத்தா கோ கம' போராட்டம் தொடர்கின்றது. காலிமுகத்திடலில் மக்கள் ஒன்றிணைந்து "கோத்தா வீட்டுக்குப் போ" என கூறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நெருக்கடி நிலையை சமாளிக்க ஜனாதிபதி கோத்தாபய பல வழிகளில் முயன்று வருகின்றார். மஹிந்த, பஸில் ஆகியோர் பதவியைத் துறந்த பின்னரும் , ரணில் பிரதமராக வந்தும் கூட , போராட்டங்கள் ஓய்வதாக தெரியவில்லை. மாறாக, இன்னும் பெருமளவில் நாடெங்கும் போராட்டங்கள் பூதாகரமாக வெடிக்கும் சூழமைவே தொடர்கின்றது.

## 'கோத்தா கோ கம' போராட்டமும் சிங்கள தேசியவாதமும்

இன, மத, மொழி வேற்றுமைகளை களைந்து அரசாங்கத்துக்கு எதிரான நீண்ட போராட்டமாக "கோத்தா கோ கம" வரலாற்றில் பெயர் பதித்திருக்கின்றது. இந்தப் போராட்டக்களம் நீண்ட கால ,சிங்கள பௌத்த மதகுருமார்களின் தீவிர இன, மத வெறுப்புணர்வூட்டல்களில் இருந்து விடுபட்டு ,மனிதம் பற்றியும் சகோதர இனம் பற்றியும் சிந்திக்கக்கூடிய ஒரு இளையோரை உருவாக்கியுள்ளது என்பதே பலரது கருத்தாகும். அதற்கு இரு முக்கிய சம்பவங்களை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒன்று, 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் எந்தவொரு நிகழ்விலும் உத்தியோகபூர்வமாக தமிழில் தேசிய கீதம் ஒலிக்கப்படவில்லை, அதற்கு 2019 ஆட்சிக்கு வந்த கோத்தாபய அனுமதிக்கவுமில்லை. ஆனால் ஏப்ரல் 17 ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டத்தில் சிங்கள இளையோர் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாட ஏற்பாடு செய்திருந்தனர். இரண்டாவது , இலங்கை வரலாற்றில் முதல் முறையாக கடந்த மே 18 திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கொழும்பு காலிமுகத்திடலில் அனுஷ்டிக்கப்பட்டது. இவற்றைக்கொண்டு சிங்க மக்கள், சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்க ஆரம்பித்துவிட்டார்கள் என எண்ணலாமா?. இலங்கையின் இன முரண்பாட்டுக்கு நீண்ட வரலாற்றுப் பின்னணி உள்ளது. எனினும் தமிழ் =சிங்கள இனமோதல் என்ற நெருப்புக்கு பிரித்தானியரது ஆட்சிகாலத்திலேயே (இனவாரி பிரதிநிதித்துவ முறை) எண்ணெய் ஊற்றப்பட்டது. 1833ஆம் ஆண்டு கோல்புறுக் சீர்திருத்தத்தில் பற்றிய அந்தப் பெருந்தீ முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகளை எரித்த பின்பும் அணையவில்லை. இதற்கு 2019 ஆம் ஆண்டு கோத்தாபய பெற்றுக் கொண்ட தனிச்சிங்கள வாக்குகளே சான்று.




இப்படி அதிதீவிரமாக உச்சம் பெற்றிருந்த சிங்களத் தேசியவாதத் தீயை வெறும் 3 வருடத்தினுள் அணைத்துவிட முடியாது. இன்று இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. பெரும்பாலான மக்கள் மூன்று வேளை உணவு கூட உண்ண முடியாத அளவுக்கு, பொருட்களின் விலை அதிகரித்துள்ளது . பொருள்களையும் எரிபொருளையும் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர். அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிவர்த்தி செய்ய முடியாத மக்களிடம் தேசிய உணர்வைக் கட்டியமைப்பது கடினமானது.இலங்கை இப்படிச் சீரழிந்தமைக்கு இதுவரையும் நாட்டை ஆண்ட சிங்களத் தலைமைகளே காரணம் என பெரும்பாலான சிங்கள மக்கள் நம்புகின்றனர். இதனால் சிங்களத் தேசியவாதத் தீ இன்று சற்று உறங்கு நிலையை அடைந்துள்ளது.மாறாக அது முற்றாக அணைந்துவிடவில்லை என்பதையும் தமிழர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

அண்மைக் காலமாக இலங்கை அரசாங்கம் புலம்பெயர் தமிழர்கள் மீதான தனது கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்று புலம்பெயர் தமிழர்களை 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்தி இதே சிறிலங்கா அரசாங்கம்தான் கொச்சைப்படுத்தியது . ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளில் இருந்து தப்பிக் கொள்ள இலங்கை அரசாங்கம் புலம்பெயர் தமிழர்கள் மீதுள்ள தடைகளை நீக்க திட்டமிட்டுள்ளது. இன்று இலங்கை புலம்பெயர் தமிழர்களில் பலர் தொழிலதிபர்களாகவும் பெரு முதலீட்டாளர்களாகவும் உள்ளனர். இதனால் புலம்பெயர் தமிழர்களை இலங்கையின் முதலீட்டாளர்களாக்கி அதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது.

## தீர்வுகாண சரியான தருணம் இது!

தற்போது எம் நாடு வங்குரோத்து நிலை அடைந்ததற்கு பிரதான காரணம் தீராமல் நீளும் இனப்பிரச்சினையும், அதன் விளைவாக உருவான உள்நாட்டு யுத்தமும் , போரை முடிவுக்கு கொண்டுவர உலக நாடுகளிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட கடன்களுமே. வெவ்வேறுபட்ட இன, மதம் சார்ந்த மக்கள் வாழும் நாட்டில் சிங்கள மொழியையும், பௌத்த மதத்தினையும் முதன்மைப்படுத்த முயன்றதன் விளைவே உள்நாட்டு யுத்தத்துக்கான ஆரம்பப் புள்ளியாக அமைந்தது. இன்று யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் யுத்தத்தின் மூலகாரணமான இனப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. 'தீர்வு அற்ற ஒரு யுத்தத்தின் முடிவு மீண்டும் ஒரு போருக்கான தொடக்கப்புள்ளி' என்பார்கள் . அதன்படி இலங்கை இன்னொரு போருக்கான தொடக்கப் புள்ளியிலேயே நிற்கின்றது எனலாம்.

2009 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவை யுத்த வெற்றிவீரனாக சிங்கள மக்கள் கொண்டாடிய போதும், இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கும் வலு அவரிடம் காணப்படவில்லை. காரணம், யுத்த வெற்றியால் சிங்கள தேசியவாதம் ஒரு வலுவான நிலையை அடைந்திருந்தது. போர் வெற்றியை சிங்கள மக்கள் கொண்டாடினர். தமிழர்கள் துணையின்றியே இலங்கையை மீள் கட்டமைக்க முடியும் என நம்பினர். எனினும் கடந்த 13ஆண்டுகள் பயணம் அந்த எண்ணத்தை தவிடு பொடியாக்கியுள்ளது. துட்டகைமுனு போன்ற தலைவனை எதிர்பார்த்த சிங்கள மக்களுக்கு ராஜபக்ச சகோதரர்கள் வெறும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளனர். இதனால் தமிழரின் தேவையை இன்று சிங்களவர் உணர ஆரம்பித்துள்ளனர். இன்று நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இலங்கைத் தேசியவாதத்தை வலுப்படுத்த வேண்டியது அவசியம். அதற்கு சிங்களத் தேசியவாதம் ஏனைய இனங்களுடன் சமரசம் செய்து கொள்ளத் தயாராக வேண்டும். சிறுபான்மை இன மக்களின் உரிமை, அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கும் ஓர் அரசியல் தீர்வொன்றின் மூலமாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட்ட வேண்டும். இதனால் 'இலங்கைத் தேசியவாதம் 'வலுவடைந்து, கூட்டாக இலங்கைப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடிய மக்கள் சக்தியை உருவாக்க முடியும்.


தற்போது உள்ள சூழ்நிலையில் இலங்கை மக்கள் அனைவரும் பொருளாதார மீட்புக்காக சில விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ளத் தயாராகி உள்ளனர். சிங்கள மக்கள் அரசியல் மாற்றத்தை விரும்புகின்றனர். குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களுடன் நல்லுறவைப் பேண முயல்கின்றனர். பௌத்த பீடங்களின் செல்வாக்கும் இப்போது சரிந்துள்ளது. சிங்களத் தேசிய உணர்வும் வலுக்குன்றியுள்ளது. ஒட்டுமொத்த இலங்கை மக்களின் ஒரே நோக்கு, இலங்கையை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்பது மட்டுமாகவே உள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையை தமிழ், சிங்கள தரப்பு அரசியல் தலைமைகள் சரியான விதத்தில் கையாளும் பட்சத்தில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர முற்றுப்புள்ளியை இட்டுவிட முடியும். இதற்கு தமிழ் அரசியல் தலைமைகளும் வினைத்திறனாக செயற்பட வேண்டியது அவசியம்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் அந்த நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையும் தாக்கம் செலுத்துகின்றது. இதன்படி எம் நாட்டின் பொருளாதாரத்தை மீள் கட்டமைப்பு செய்வதற்கு முன்னர் உள்நாட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதனால் உருவாகும் கூட்டு மக்கள் சக்தியை கொண்டு வலுவான பொருளாதரக் கட்டமைப்பை உருவாக்க முடியும். இவ்வாறான பொறிமுறை மூலமே இலங்கைப் பொருளாதாரத்தை விரைவாக, நிரந்தரத்துவமான வகையில் மீட்டெடுக்க முடியும் . இதை இலங்கையின் சிங்கள, தமிழ் அரசியல் தலைமைகள் உணராதவரை, சீரழிவும், கடன்களும் மட்டுமே இலங்கைக்குச் சொந்தமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்டர் ஐவனின் வரைவு: தீர்வுக்கான மகத்தான நகர்வு

○ ந.பரமேஸ்வரன்



நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதாரச் சிக்கலுக்கு தீர்வு காணும் முகமாக ரோஹண விஜயவீர காலத்தில் ஜே .வி.பியின் மத்திய குழு உறுப்பினராக செயற்பட்டவரும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் அவருக்கு எதிராக பல வழக்குகளை தாக்கல் செய்த பிரபல சட்டத்தரணியும், இலங்கையின் முன்னணி ஊடகவியலாளருமான விக்டர் ஐவன் இடைக்கால தீர்வுத்திட்ட வரைவு ஒன்றைத் தயாரித்து ஜனாதி பதியிடமும் பிரதமரிடமும் கையளித்துள்ளார். தனது தீர்வுத்திட்ட வரைவில் தமிழர்களுக்கு சாதகமான பல அம்சங்களை விக்டர் ஐவன் முன்மொழிந்துள்ளார்; உண்மையிலேயே இது தமிழர்களுக்கு நன்மை பயக்கும் ஒரு திட்டம் என்பதில் மாற்றுக்கருத்து எதுவுமில்லை. எனவே தமிழர்கள் இந்தத் தீர்வுத்திட்டத்துக்கு தமது பூரண ஆதரவை வெளிப்படுத்த வேண்டும். சிங்கள மக்களில் எத்தனை வீதமானோர் விக்டர் ஐவனின் இடைக்கால தீர்வுத்திட்ட வரைவை ஏற்றுக்கொள்வார்கள்? என்பது ஒரு புறமிருக்க தமிழ் மக்கள் விக்டர் ஐவனின் தீர்வுத் திட்டத்துக்கு தமது பூரண ஆதரவை வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

காலாதிகாலமாக தமிழர்களால் முன்வைக்கப்பட்டு வந்த கோரிக்கைகளை ஒரு சிங்களக் குடிமகன் தனது ஆலோசனையாக, தீர்வுத்திட்ட வரைவாக தயாரித்து ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கையளித்துள்ளார். இலங்கை வரலாற்றில் இவ்வாறான ஒரு சம்பவம் இதுவரை இடம் பெறவில்லை. எனவே தமிழர்கள் எவ்வித்க் கேள்வி மறுமொழியுமின்றி விக்டர் ஐவனின் தீர்வுத்திட்ட வரைவை ஆதரிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

விக்டர் ஐவன் முன்மொழிந்துள்ள தீர்வுத்திட்ட வரைவில் அடங்கியுள்ள முக்கியமான விடயங்களைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

- ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி ஆகிய அனைவரையும் உள்ளடக்கிய அனைத்துக் கட்சி இடைக்கால அரசாங்கமொன்று ஐ.நா. சபையின் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட வேண்டும்.
- ஐ.நா. மனித உரிமைகள் சபை வலியுறுத்திய முக்கிய மான விடயமான காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு நீதி வழங்கப்படவேண்டும். அத்துடன் மீள நிகழாமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் .
- அனைத்து இன மக்களின் குறைகளையும் ஆராய்ந்து ,ஏனைய மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனைவரும் (அவர்களும்) அனுபவிக்க வழி செய்யப்பட வேண்டும்.
- மாகாணசபை முறைமை இரு நாட்டு மக்களினதும் சம்மதமின்றி இரு நாட்டு அரசுகளாலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு முறைமை. மாகாணசபை முறைமை தற்போது தோல்வி கண்டுள்ளது தமிழர்களின் அபிலாஷைகளுக்கு குந்தகம் ஏற்படாதவாறு, மாகாணசபை முறைமையில் இந்தியாவின் அனுசரணையுடன் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- குறிப்பிட்டளவு எண்ணிக்கையிலான கையொப்பங்களுடன் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டால் அதை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்த்து வாக்கெடுப்புக்கு விடுவதற்கு வழி செய்யப்பட வேண்டும்.
- நீதித்துறையை பூரணமாக மறுபரிசீலனை செய்து அதிகாரத்துடன் கூடியதாக உருவாக்குதல்.
- ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி ஊடகங்கள் சமூகத்துக்கு பொறுப்புக்கூறும் நிலையை உருவாக்குதல்.
- இடைக்காலத் தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும்மக்கள்பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக ஒரு சபை உருவாக்கப்பட வேண்டும். இந்த சபையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 60 பேரும், மக்கள் பிரதிநிதிகள் 100 பேரும் இடம்பெற வேண்டும்.
- அரசாங்கத்தில் இரு சபைகள் இடம்பெற வேண்டும். அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கியதாக வெளிப்படையாக மக்கள்பார்வைக்குஉட்படும்வகையில்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்கள் தமது அபிப்பிராயங்களை தெரிவிப்பதற்கு கருமபீடங்கள் அமைக்கப்பட வேண்டும்.
- இடைக்கால அரசாங்க முறைமை பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்ட பல நாடுகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட ஒன்று. சர்வதேச சட்டங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. தேர்தல் நடைபெற்று புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் வரை இந்த இடைக்கால அரசாங்கம் பதவியிலிருக்கும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு நீதித்துறையினால் அங்கீகரிக்கப்பட்டு சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். இடைக்கால அரசியலமைப்பு பழமைக்கும் புதுமைக்குமிடையிலான ஒரு பாலம் என்று சொல்லலாம்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு அமுலுக்கு வரும் வரை தேர்தல் முடிந்து மூன்று வருடங்களுக்கு இடைக்கால தீர்வுத்திட்டம் அமுலில் இருக்கும்.

இவ்வாறான பல விடயங்கள் விக்டர் ஐவனின் வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளான 'சர்வதேச மேற்பார்வை' என்ற விடயம் விக்டர் ஐவனின் வரைவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதே போல் 'இந்தியாவின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு' என்ற விடயத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் காணாமல் போனோருக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்பதையும் அவர்கோருகின்றார். எனவே இந்த வரைவுக்கான ஆதரவைத் திரட்டுவது தமிழ் மக்களின் தார்மீகக்கடமை.

விக்டர் ஐவனின் இடைக்கால தீர்வுத்திட்ட வரைவு தொடர்பாக இதுவரை பிரதமரோ, ஜனாதிபதியோ சாதகமாகவோ பாதகமாகவோ எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மௌனம் சம்மதத்தின் அறிகுறியென்பர். அப்படியானால் விக்டர் ஐவனின் யோசனையை ரணிலும், கோத்தாபயவும் ஏற்றுக்கொண்டு விட்டார்களா? என்பதே மில்லியன் டொலர் பெறுமதியான இப்போதைய கேள்வியாகும்.



# யாழ்ப்பாண வரலாறு

## 1505–1948 வரை

**1890 நவம்பர்**
அல்பிரட் சந்தியாகு, முருகேசு சின்னத்தம்பி ஆகிய மருத்துவர்கள் லண்டன் (Edinburg Royal College of Surgeons) எடின்பரோ றோயல் சத்திரசிகிச்சை கல்லூரியில் அனுமதி பெற்றனர். இந்தக் கல்லூரியில் அனுமதி பெற்ற முதலாவது ஆசிய நாட்டவர்கள் இவர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது. அல்பிரட் சந்தியாகு யாழ்ப்பாண மணியகாரனாக கடமையாற்றிய சந்தியாகுப்பிள்ளை முதலியாரின் மகனாவார். சின்னத்தம்பி பின்னாளில் மெடிக்கல் சுப்பிரிண்டனாகவும் கடமையாற்றியுள்ளார்.

**1890 டிசெம்பர்**
புகையிரத சேவையை யாழ்ப்பாணம் வரை நீடிப்பது சம்பந்தமான ஆய்வுக் குழு தனது இடைக்கால அறிக்கையில் புகையிரத சேவையை யாழ்ப்பாணம் வரை நீடிக்கலாம் என சிபாரிசு செய்தது.

**1891 ஜனவரி 10**
யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க நூல் நிலையம் ஒன்று அமைக்கும் நோக்குடன் நிதி சேகரிப்பதற்காக நடத்தப்பட்ட போர்த்தேங்காய் உடைக்கும் போட்டியில் 40,000 தேங்காய்கள் உடைக்கப்பட்டன; இதன் மூலம் கணிசமான தொகை கிடைத்தது.

**1891 மார்ச்**
முத்துக்குளிப்பு மூலம் 959,801.38 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது. ஏழு விலையுயர்ந்த கறுப்பு முத்துக்களும் கிடைத்தன. இந்த பெரிய கறுப்பு முத்து 5000.00 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. அந்த நூற்றாண்டிலேயே அதி கூடிய வருமானம் இந்த முத்துக் குளிப்பிலேயே கிடைத்தது.

**1891 மே**
பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை பிரதேசங்களில் தந்திக்கம்பம் நாட்டும் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு தந்திச்சேவை மேற்குறிப்பிட்ட பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

**1891 ஜூலை 16**
நெடுந்தீவுக்குதிரைகள் 1020.00 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

**1891 ஓகஸ்ட்**
முல்லைத்தீவுக் கலங்கரை விளக்கத்தின் கட்டுமானப் பணி பூர்த்தியாக்கப்பட்டது.

**1891 டிசம்பர் 28**
வண்ணார்பண்ணை சிவன் கோயில் உடைக்கப்பட்டு 30,000 ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டன.

**1892 ஏப்ரல்**
5,260 ரூபா செலவில் 70 அடி உயர கலங்கரை விளக்கம் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டது.
பாஷையூர் கடற்கரையில் சிமெந்து இருக்கைகள் அமைக்கப்பட்டன.

**1893 ஜனவரி**
14 யாழ்ப்பாணக் கச்சேரி தலைமை முதலியாரும் வடமாகாணத் தலைமை அதிகாரியுமான(Chief Headman) போல் முதலியார் காலமானார்.

**1893 பெப்ரவரி 01**
சேர் முத்துக்குமாரசாமி, சட்டசபைக்கு தமிழ் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.
ஆனையிறவு வரை நடைபெற்று வந்த குதிரை வண்டி மூலமான தபால் விநியோகம் (central road mail coach) கனகராயன்குளம் வரை நீடிக்கப்பட்டது.

**1893 பெப்ரவரி 28**
யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வரையான புகையிரதப்பாதை தொடர்பான ஆய்வறிக்கை பூரணப்படுத்தப்பட்டது.

**1893 ஜூலை**
யாழ்ப்பாணம்–ஆனையிறவு சேவையில் ஈடுபட்டு வந்த தபால் வண்டி (குதிரை வண்டியின்) மாதிரி ஒன்று சிக்காகோவில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு அனுப்பப்பட்டது. இலங்கையின் முதலாவது தபால் மா அதிபரான மேஜர் ஸ்கின்னர் இதனை வடிவமைத்திருந்தார்.

**1894 பெப்ரவரி 03**
யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

**1894 டிசெம்பர்**
மானிப்பாய் ,இணுவில் மருத்துவமனைகளில் யாழ்ப்பாணப் பெண்களுக்கு தாதியப் பயிற்சி அளிக்கும் பணிகள் ஆரம்பமாகின.

**1895 நவம்பர்**
அரசாங்க அதிபர் சேர் வில்லியம் துவைனம் அரசசேவையில் இணைந்து கொண்ட பொன் விழாவை கொண்டாடினார். 1845 ஆம் ஆண்டு யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராக பதவியேற்ற துவைனம் ஓய்வுபெறும் வரை யாழ்ப்பாணத்திலேயே கடமையாற்றினார். பிரித்தானியர் ஆட்சியில் குடியேற்ற நாடுகள் எவற்றிலும் இவ்வாறு எவரும் ஒரே பதவியில் தொடர்ந்து 50 வருடங்கள் பணியாற்றி 'பொன்விழா' கொண்டாடவில்லை.

**1897 ஜனவரி 24**
சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வந்தார். சிக்காகோ சர்வமத மகாநாட்டில் கலந்து கொண்டு விட்டு இந்தியா திரும்பும் வழியில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இலங்கையிலுள்ள இந்துக்கள் விடுத்த அழைப்பை ஏற்று, இலங்கை வந்தார் சுவாமி விவேகானந்தர் . அதன் போது யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்த அவர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சொற்பொழிவாற்றினார். யாழ்ப்பாணம் வரும் வழியில் அனுராதபுரத்தில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த வேளையில் அநகாரிக தர்மபாலாவின் ஆட்கள் அவரது சொற்பொழிவை குழப்ப முயன்றனர்.
எனினும் சுவாமியின் சமயோசிதமான செயற்பட்டால் (விவேகானந்தர் அனைத்து மதங்களையும் அரவணைக்கும் கொள்கையுடையவர் . அதனால் அங்கு புத்த பெருமானைப்பற்றி சொற்பொழிவாற்றினார் ) அவர்கள் குழப்பம் விளைவிக்காமல் அடங்கிப்போயினர்.
வெண்புரவிகள் பூட்டிய குதிரை வண்டியில் யாழ்ப்பாணம் வந்த விவேகானந்தருக்கு யாழ்ப்பாண இந்துக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர்.

**197 ஜூன் 20**
விக்ரோறியா மகாராணியின் வைர விழாக் கொண்டாட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் அரசாங்க அதிபர் பிஷர் (Fischer) தலைமையில் வெகு சிறப்பாக இடம் பெற்றன. டிசெம்பர் 31 குடியேற்ற நாடுகளின் செயலாளரிடமிருந்து யாழ்ப்பாணத்துக்கான புகையிரதப்பாதை அமைக்கும் பணிகளை ஆரம்பிக்குமாறு தந்தி கிடைத்தது.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org